KALKI 3.5.92 ரூ. 3.00
பொன்விழா ஆண்டு

# கல்கி



## தமிழ் சினிமாவில் பெண்கள்

# இயற்கை முறையில் கொசுக்கடியிலிருந்து விடுதலை



பலவித வியாதிகளுக்கு காரணமான கொசுக்கடியிலிருந்து ஆரோக்யமான முறையில் சிக்கன வழியில் நிவாரணம் பெற உபயோகிப்பீர் ''கொசுவலை'' - அதுவும் எமது ''குவாலிடி'' கொசுவலை என்றால் இருமடங்கு உழைப்பு, இருமடங்கு பாதுகாப்பு.

★ நீடித்த உழைப்புக்கு உறுதி செய்கிறது இறக்குமதி செய்யப்பட்ட HDPE நூல்.

★ மிகவும் நெருக்கமான பின்னல்களினால் பெறுவது பரிபூரண பாதுகாப்பு.

★ நெருக்கமான பின்னல்கள் இருந்தாலும் மிகவும் காற்றோட்டமானது.

★ ரசாயன பொருட்களடங்கிய கொசு விரட்டிகளை உபயோகிப்பதால் ஏற்படும் கண்வலி, தலைவலி, மயக்கம், நெஞ்செரிச்சல் போன்ற உபாதைகள் நிச்சயமாக இல்லை.

★ தொடர் செலவுகள் இல்லை.

★ குவாலிடி கொசுவலைகள் பிரின்ஸ் (சிங்கிள் காட் சைஸ்), குயின் (டபுள் காட் சைஸ்) மற்றும் கிங் (சூப்பர் டபுள் காட் சைஸ்) என மூன்றுவித அளவுகளில் பலப்பல வண்ணங்களில் கிடைக்கிறது.

★ எளிதில் கையாளக்கூடியது. நீங்கள் வாங்கக்கூடிய விலையில் தமிழகமெங்கும் இப்பொழுது கிடைக்கிறது.

## "குவாலிடி"
## கொசுவலைகள்

குவாலிடி கொசுவலையை உபயோகியுங்கள்.
குவாலிடி கொசுவலையை உணருங்கள்.

தயாரிப்பாளர்கள் :

**குவாலிடி பிளமண்ட்ஸ்**

(குவாலிடி கொசுவலை தயாரிப்பாளர்கள்)

த.பெ. எண் : 14 40, சின்னாண்டாங் கோவில் வீதி, கரூர்-639 001

வியாபார விசாரணைகள் வரவேற்கப் படுகின்றன.

''சென்னை இராயப்பேட்டை YMCA மைதானத்தில் நடைபெறும் Ideal Home Exhibition இல் ஸ்டால் நெ. 46 இல் அமைந்துள்ள எமது ஸ்டாலுக்கு வருகை தந்து எமது தயாரிப்புக்களை வாங்கிப் பயனடையுங்கள்.''

# அனைத்து மகளிர் காவல் நிலையம் அவசியம்தானா?

"எங்கள் அரசின் காலத்தில்தான் அகில இந்தியாவிலேயே முதன் முறையாக முற்றிலும் பெண்களே பணி புரியும் ஒரு போலீஸ் நிலையம் முன்னோடித் திட்டமாகத் தொடங்கப்படுகிறது. காவல் துறையின் சரித்திரத்திலேயே இன்று ஒரு புரட்சிகரமான நாள்...."

- ஆயிரம் விளக்குப் பகுதியில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தை ஆரம்பித்து வைத்த போது முதல்வர் ஜெயலலிதா பேசியது இது. முதல்வரின் கூற்று சரிதானா?

"இல்லை" என்கிறார் போலீஸ் அதிகாரி ஒருவர். "1970 களில் கேரளாவில், மகளிர் காவல் நிலையம், இந்திரா காந்தியால் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக, அந்தக் காவல் நிலையம் சில காலத்திற்குப் பின் மூடப்பட்டது."

இது ஒரு பக்கம் இருக்க, மகளிர் காவல் நிலையம் பற்றி இருவிதமான கருத்துக்கள் சொல்லப்படுவது குறித்து ஓய்வு பெற்ற ஒரு போலீஸ் அதிகாரியிடம் கேட்டோம்.

"இந்த அரசின் செயல்பாடுகள், பணிகள், ஆகியவற்றைக் குறித்த நியாயமான விமர்சனங்களையே முதல்வரால் தாங்க முடியவில்லை. இந்த நிலையில் முதல்வர் பெருமைப் பட்டுக் கொண்டிருக்கும் ஒரு விஷயத்தைப் பற்றி - எப்படிச் சொல்லுவது?" என்று தயங்கியவரைக் கொஞ்சம் வற்புறுத்தவே தொடர்ந்து பேசினார்:

"இப்போதெல்லாம் டி.வியில் கூடக் காண்பிக்கிறார்கள். ஆண் என்ன? பெண் என்ன? எல்லாம் ஒன்றுதான், சமம்தான் என்று. கல்வி, வேலை வாய்ப்பு என்று சமூகத்தில் எல்லாத் துறைகளிலும் இரு பாலாருக்கும் வசதிகள் பொதுவாகவே இருக்க வேண்டும் என்ற கருத்து வலுப் பட்டு வருகிறது. இந்த நிலையில் சட்டம் ஒழுங்கைக் காக்கும் காவல் துறையிலும் இரு பாலாரும் சேர்ந்து பணியாற்ற வேண்டுமே தவிர, பெண்களுக்கென்று தனி நிலையங்கள் ஆரம்பித்தால், காலப்போக்கில் அவர்களைத் தனிமைப்படுத்தி, மேலும் பலவீனப் படுத்துவதிலேயே முடியும்."

"பெண்களுக்கெதிரான குற்றங்களை விசாரிக்க இந்தக் காவல் நிலையம்; வரதட்சிணைக் கொடுமை, கற்பழிப்பு, பெண்களைக் கலாட்டா செய்தல் போன்ற குற்றங்கள்தான் இந்த ஸ்டேஷனுக்கு வரும்; பெண்களே விசாரித்தால், புகார் சொல்ல வரும் பெண்கள், மனம் திறந்து எல்லாவற்றையும் சொல்ல முடியும்; ஒரு பெண்ணால்தான், பெண்ணின் மனத்தையும் உணர்வுகளையும் புரிந்து கொள்ள முடியும்.... என்றெல்லாம் சொல்கிறார்களே...?"

"சுதந்திரம் வாங்கி 45 ஆண்டுகளுக்குப் பிறகும் தாய்க்குலத்துக்கு நம்பிக்கையளிக்கும் விதத்தில், ஆணாதிக்கம் உள்ள நமது சமூகம் - குறிப்பாகக் காவல் துறை



செயல்படவில்லை என்பதைத்தான் இது சுட்டிக் காட்டுகிறது. இது மிக வேதனையான விஷயம். இந்த நிலையை மாற்றி அமைக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். அதற்குப் பதிலாகப் பெண்களுக்கென்று தனிப் பல்கலைக் கழகம், பட்ஜெட்டில் வரிச்சலுகைகள் என்று அரசியல் நோக்கத்தோடு ஆட்சியாளர்கள் செயல்படும் நிலையைத்தான் காண்கிறோம். நமது முதல்வரும் தம் பங்குக்குத் தனி காவல் நிலையத்தை ஆரம்பித்திருக்கிறார்.''

''பெண்களுக்கெதிரான குற்றங்கள் சமுதாயத்தில் அதிகரித்து வரும் சூழ்நிலையில் காவல் துறையின் பணி எவ்வாறு இருக்க வேண்டும்?''

''சென்னையில் அமைக்கப்பட்டது போல மாவட்டத் தலைநகர்களிலும் காவல் நிலையங்கள் அமைக்கப்படும் என்று முதல்வர் சொல்லியிருக்கிறார். மாவட்டத்தின் மூலை முடுக்குகளில் இருக்கும் பாதிக்கப்பட்ட ஒரு பெண்மணி,



காவல் நிலையத்தில் காத்திருக்கும் பெண்கள்.

புகார் கொடுக்க வேண்டுமானால் குறைந்த பட்சம் மாவட்டத் தலை நகர் வரை வர வேண்டும். காலமும், பணமும் செலவாகும். சிலரால் வரவே முடியாது. இதற்குப் பதிலாக, ஒவ்வொரு காவல் நிலையத்திலும் இரண்டு பெண் காவலர்களைப் போட்டால், எல்லா போலீஸ் நிலையங்களிலும், பெண்கள் சென்று அவர்களிடம் புகார் கூறலாம். இதற்குப் பெண் காவலர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டியிருக்கும். அரசுக்குச் செலவு எக்கச்சக்கமாக அதிகரிக்கும். இது ஒருபுறமிருக்க, மகளிர் காவல் நிலையத்தில், மனம் விட்டுப் புகார் சொல்லும் ஒரு பெண், பின்னர் கேஸ், கோர்ட் என்று வரும்போது அந்தரங்கமாகச் சொன்ன விஷயங்களைக் கூடப் பகிரங்கமாகப் பேசத்தான் நேரும். குறுக்கு விசாரணைக்கு உட்பட வேண்டியிருக்கும். ஆக, தனி காவல் நிலையத்திற்கு ஆதரவாகச் சொல்லப்படும் இந்த வாதமும் அடிபட்டுப் போய்விடுகிறது. எனவே, நல்ல கல்வி மூலம் இதையெல்லாம் சந்திக்கும் துணிவை, பெண்களுக்கு ஏற்படுத்துவதுதான் பிரச்னைக்குத் தீர்வு. அப்போது தனி பெண் காவல் நிலையத்துக்கு அவசியமே இராது.''

இதற்கிடையில் சுறுசுறுப்பாகச் செயல்பட ஆரம்பித்திருக்கிறது, மகளிர் காவல் நிலையம். ஐம்பதுக்கும் மேற்பட்ட புகார்கள் பத்து நாட்களிலேயே வந்திருக்கின்றன. புத்திமதி, ஆலோசனைகளை (counselling) சொல்லுவதன் மூலமே பல தகராறுகளைத் தீர்த்து வைத்திருக்கிறார்களே தவிர, கேஸ் ஒன்றும் பதிவு செய்யவில்லையாம்.

புகார்களை விசாரிக்கும், பெண் காவலர்களுக்குத் தங்களது பணிநிலை (service conditions) பற்றிப் பல வருத்தங்கள் இருக்கின்றன. ''பதினோரு வருடம் ஆகியும் சப்-இன்ஸ்பெக்டராக இருக்கிறோம். பெண் போலீஸுக்கென்று தனியாக ஸீனியாரிடி லிஸ்ட் வைத்தால், நன்றாக இருக்கும். இன்னும் அதிகமான அளவில் பெண் காவலர்களைப் பணிக்கு அமர்த்த வேண்டும். ஆண் காவலர்களுக்கு என்னென்ன கடுமையான பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றனவோ அவையெல்லாம் எங்களுக்கும் தரப்படுகின்றன. ஆனால் உயர் அதிகாரிகள் எங்களை real policing செய்ய அனுமதிக்காமல், டெலிபோன் எடுப்பது, டைப் அடிப்பது அவர்கள் வீட்டுக் குழந்தைகளைப் பள்ளியில் கொண்டு போய் விடுவது போன்ற காரியங்களுக்கு உபயோகிக்கிறார்கள்'' என்கிறார்கள்.

முதலில் இவர்களின் குறைகளைக் களைய அரசு முயற்சி செய்யட்டும்.

இரண்டு பெண்கள் சேர்ந்தாலே கலகலதான். இந்த மகளிர் காவல் நிலையத்திலோ முப்பது பெண்கள்! உள்ளே போய்விட்டு வந்தால், ஏதோ ஒரு கூட்டுக் குடும்பத்தில் வளைய வந்ததைப் போன்ற உணர்வு ஏற்படுகிறது!

– ப்ரியன்

படங்கள் : ராஜன்

# இன்னிசை மழை



## மிகச் சிறந்தவை :

மிகச் சிறந்தவை என்று சொல்கிற போல் படத்தில் ஏதும் இல்லை. மன்னிக்க!

## சிறந்தவை :

எஸ். பி. பாலசுப்பிரமணியம், எஸ். ஜானகி பாடிய 'வா வா கண்மணி' பாடல். படத்தில் இரண்டு முறை வருவதாலோ என்னவோ காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

மற்றொரு சிறந்த அம்சம் லொகேஷன்ஸ். பார்க்கப் பார்க்கக் குளுமை.

## சுமார் :

நாயகன் நீரஜ், நாயகி (அறிமுகம்) பர்வீன் நடிப்பு. நடனக் காட்சிகளும் இந்த ரகம்தான். ஒளிப்பதிவும் டிட்டோ ரகம். ஜெய்கணேஷ் (நாயகி அப்பா) மற்ற இன்னபிற நடிகர் நடிகைகளிடம் செயற்கைத் தொனி அதிகம்.

## மிகச் சுமார் :

கதாநாயகி (இசைக் குழு பாடகி)யின் அப்பா வில்லன் பார்ட்டிக்குப் போட்டுக் கொடுத்த காண்ட்ராக்ட் பத்திரம் அவள் காதலுக்குக் குறுக்கே நிற்கிறது. கதாநாயகனின் அப்பாவோ 'காண்ட்ராக்ட்ல நிச்சயதார்த்தம் பண்ணக் கூடாதுன்னு இல்லையே, லவ் பண்ணக் கூடாதுன்னு இல்லையே, ஏன் பிள்ளைப் பெத்துக்கக் கூடாதுன்னு இல்லையே' என்று இப்படி வசவசவென்று பேசிக் கொண்டு போகிறார். நாயகி 'அனிதா பாக்ஸ்' என்ற பெயருடன் ஆள் மாறாட்டம் செய்து பிரபலமாக, வில்லன் பார்ட்டி போலீஸ் உதவி நாட..... கதை - வசனம் மிகச் சுமார்.

## 'போர்' :

நகைச்சுவை என்ற பெயரில் விவேக் குரல் மாற்றிப் பேசுவது.

## படு போர் :

ஆரம்பக் காட்சிகள்.

## ஆக மொத்தம் :

இன்னிசை மின்னல்; அறுவை மழை!

– மயிலை ஸ்ரீதரன்

கட்கறைக்... ...கண்டுபிடிக்க உதவுமா...?

◆ சஹாராவில் சிக்கிக் கொண்ட பாலஸ்தீன தலைவர் யாசர் அராஃபத்தையும் கூட செயற்கைக் கோள் உதவியுடன் காப்பாற்றினார்கள். பட்டிக்காட்டுக் குடியானவனின் மதிய உணவிற்காகும் 'கடல் வாழைக்காயான' மீன் கூட செயற்கைக் கோள் வலையில் மாட்டி விட்டது. இன்னும், காணாமல் போய் விட்டக் கடங்காரனைச் செயற்கைக் கோளால் மாட்டி விட வேண்டியது ஒன்றுதான் பாக்கி!

கபில. வெங்கடேசன்.
ஆதம்பாக்கம்.

◆ காஷ்மீர் ரத யாத்திரையைப் படங்களுடன் வெளியிட்டு, பாரதிய ஜனதாவுக்குப் பெருமை சேர்த்த கல்கி 'அயோத்திக்கு ஓர் அவசரப் பயணம்' தலையங்கம் மூலம் பி. ஜே. பி. யின் போக்கைக் கண்டித்திருப்பதை வரவேற்கிறேன்.

நெல்லை சிவா.
அரசரடி.

◆ விவசாயிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் வேலாயுதன் அவர்களின் கிடுகிடு முன்னேற்றம் பற்றிய கட்டுரை நமது விவசாயிகளையும் தலைநிமிரச் செய்யும்.

என். ரஜினிதேவராஜ்.
ஈரோடு - 3.

◆ எதையுமே அடக்க, அடக்கத்தான் அதன் வீரியம் அதிகமாகும் என்பதே காலம் காட்டும் உண்மை. எனவே தமிழக முதல்வரும் இதை உணர்ந்து பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தும் சட்டம் கொண்டு வருவதைத் தவிர்ப்பதே நல்லது.

வி. பரமசிவம்.
மதுரை - 16.

◆ கவேதாவின் சிறுகதை கருத்தாழம் மிக்கதாய் இருந்தது.... ''ராசி'' பற்றிய அம்மாவின் கருத்துக்குச் சிவாவின் பதில் நெத்தியடி...!

சீதா ரமேஷ்.
காரிமங்கலம்.

◆ உமாகல்யாணியின் 'நிஜநிழல்' சிறுகதை அருமை. மனிதப் பண்பே இல்லாத கணவருடன் வாழ விரும்பாத லலிதா அவனின் ஜீவனாம்சத்தையும் வேண்டாமென்று ஒதுக்கியிருந்து அவள் மனம் எவ்வளவு கஷ்டத்தில் உள்ளது என்பது நன்கு புலனாகிறது.

மணியக்காரன்பாளையம்.
ஏ. ஜி. கல்யாணசுந்தரம்.

◆ சுப்ரபாரதிமணியன் அவர்களின் 'காலக் கணக்கு' சிறுகதை கண்டேன். மாறி வரும் சமூக நிலையில் அழிந்து வரும் பழம் வழக்குகளை அசைபோடுகிற சண்முகநாதன் நல்ல உருவகம்.

காலக் கணக்கு புதிரானது. நாளையைத் தெரிந்து கொள்ளும் ஆவலில் இன்றையைத் தொலைத்து விடுவது மகத்தான சோகம் அல்லவா?

இயல்பான மனநிலையோடு எதையும் ஏற்றுக் கொள்ளும் பக்குவம் வரும் வரை காலக் கணக்கிற்கு விடை கிடைக்காது.

'கணக்குகள் போட்டுக்
களைத்துப் போவோம்
எல்லாம் !
பூஜ்ய விடைக்கென்று
புரிந்த பின்னாலும்

\- யாரோ

தாயு. செந்தில்குமார்.
திருச்சி.

◆ சோலங்கியின் ஸ்பீடு போஸ்ட் ஸ்பெஷல் சர்வீஸ், கார்ட்டூனை வெகுவாக ரசித்தேன். அதைப் பார்த்ததும் எழுந்த சிரிப்பு அடங்கவே நேரம் ஆயிற்று!

எஸ். கே. மூர்த்தி.
கும்பகோணம்.

◆ பிரிட்டனில் தேர்தல் நடந்தது எப்படி என்று அருமையாக விளக்கி இருந்தீர்கள். அதே போல் ஒழுக்கமும் - கட்டுப்பாடும் நமது ஊர் அரசியல்வாதிகள் கடைப்பிடிப்பார்களா?

பி. எஸ். ஜி. ராஜன்.
திருச்சி.

◆ பிரிட்டனில் நடைபெற்ற தேர்தல் பற்றி ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொரு விதமாக எழுதிக் குவித்தது. ஆனால் அந்நாட்டின் தேர்தல் வழிமுறைகளைப் பற்றியும் மரபுகள் பற்றியும் தெள்ளத் தெளிவாக எங்களுக்கு எடுத்துரைத்தது 'கல்கி' மட்டுமே!

பைரவி.
திருவட்டார்.

◆ சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் திருவண்ணாமலை கோவிலில் அசுத்தம் பற்றி அரை நூற்றாண்டுக்கு முன்பே அறிவுறுத்தியுள்ளதைப் படித்து வியப்புற்றேன்! இன்றும் திருவண்ணாமலை கோவிலுக்கு உள்ளேயும் வெளியிலும் டன் கணக்கில் அசுத்தங்கள்! பற்றாக்குறைக்கு, கோவிலுக்குள்ளே கட்டணக் கழிப்பிடம் வேறு உள்ளது!

இரா. கல்யாணசுந்தரம்.
மதுரை - 9.

◆ 'கல்கி' 19.04.92 இதழில் 'ராசி' என்ற தலைப்பில் 'கவேதா' என்பவர் எழுதிய சிறுகதை பிரசுரமாகியிருக்கிறது. கடந்த மூன்று வருடங்களாக 'கவேதா' என்ற புனைபெயரில் நான் எழுதி இருபத் தைந்து கதைகளுக்கும் மேல் பிரசுரமாகி இருக்கின்றன. நான் எழுதாத கல்கிக் கதைக்கான புகழும் என் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படுமோ என்ற தார்மீக அச்சம் எனக்கு இருக்கிறது. அதனால் இதனைத் தெளிவுபடுத்த விரும்புவதுடன் புதிய 'கவேதா'வின் கௌரவத்துக்குக் குறுக்கே நிற்காமல் நான் என் புனைபெயரை மாற்றிக் கொண்டு விடுகிறேன்.

எஸ். விஜயலட்சுமி.
சென்னை - 12.

# கண் பார்வை குறைகளுக்கு கண்ணாடிதான் தீர்வா?

★ கண்பார்வை குறைகளுக்கு கண்ணாடி அணிவதைத் தவிர்க்கலாம்.
★ ஏற்கெனவே அணிந்திருப்பின் நாளடைவில் குணம் பெறலாம்.
★ காண்டாக்ட் லென்ஸ் அணிதல் இன்றியே பார்வைக் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.
★ Cataract (காடராக்ட்) எனப்படும் பார்வை மந்தம் நீங்கவும்.
★ மேலும் 96 வித கண் குறைகளுக்கும் மூலிகைமணி கண்ணப்பரின் அரிய சித்த மருத்துவ சிகிச்சை நல்ல பலனளிக்கிறது.
★ மூலம் ★ ஆஸ்த்துமா ★ குன்மம் ★ மூக்கடைப்பு (Sinustis) போன்ற உடல் குறைகளுக்கும் ஆலோசனையும் சிகிச்சையும் பெறலாம்.
★ மூலிகைமணி கண்ணப்பரின் "நம் நாட்டு மூலிகைகள்" மற்றும் அவருடைய நூற் தொகுப்புகளையும், மற்றைய மருந்துகளையும் பெறலாம்.
★ மூலிகைமணி கண்ணப்பரின் 35 வருட அனுபவமுறை.
★ டாக்டர் கண்ணப்பர் பாபு R.M.P. அவர்களை நேரில் சந்தித்து, ஆலோசனையும், சிகிச்சையும் பெறலாம்.

சென்னையில் டாக்டர் கண்ணப்பர் கண் மருத்துவமனை, 22, பாலாஜி அவென்யூ இரண்டாவது தெரு, திருமலைப்பிள்ளை சாலை, தி.நகர், சென்னை - 600 017. தொலைபேசி : 864699 - ல் பிரதி மாதமும் 1, 2, 3 மற்றும் 15, 16, 17 தேதிகளில் சந்தித்து ஆலோசனையும் சிகிச்சையும் பெறலாம்.

கோவை, மதுரை, பெங்களூர் முகாம் விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.




3 ஃபேஸ் மின்சாரம் உபயோகிப்பவர் கவனத்திற்கு...

## ஒரு ஃபேஸில் மின்சாரம் வராதபொழுது இருட்டடைப்பு ஆகுமென்ற கவலை இனி இல்லை. பொருத்திடுவீர் —

# MAX POWER

ஆட்டோமேடிக் ஃபேஸ் சேன்ஜர்



தனிச் சிறப்புகள்:
- சாலிட் ஸ்டேட் கண்ட்ரோல்.
- முழுதும் ஆட்டோமேடிக்.
- 24 மாத உத்திரவாதம்.

வீடுகள், அலுவலகங்கள், மற்றும் கல்யாண மண்டபங்களுக்கு சிறந்தது.

விற்பனையாளர்:
அருண ஏஜென்ஸீஸ்
11, பி.பி.வி. கோயில் தெரு, மயிலை, சென்னை 600 004. போன்: 841254.

கிடைக்குமிடம் : ● சிவ-சக்தி எலக்ட்ரானிக்ஸ், கடப்பா ● கும்பட் எலக்ட்ரிகல்ஸ் (பி) லிட்., சென்னை, தொ.பே. 569645 ● ஆலங்கார், மேற்கு தாம்பரம், தொ.பே. 403752 ● மகேந்திரா எலக்ட்ரிகல்ஸ், வில்லிவாக்கம், சென்னை ● ஸ்ரீ கச்சீஸ மெஷினரி & எலக்ட்ரிகல்ஸ், கடலூர் - 2, தொ.பே. 551 ● பிரகாஷ் எலக்ட்ரிகல்ஸ், மாயவரம், தொ.பே. 2493 ● S. தங்கசாமி செட்டி & கோ., காரைக்கால், தொ.பே. 2253 ● வெங்கடேஸ்வரா ரேடியோஸ் & எலக்ட்ரிகல்ஸ், திருவாரூர், தொ.பே. 3381 ● சாமு எலக்ட்ரிகல்ஸ், கும்பகோணம், தொ.பே. 20649 ● ஸ்ரீ சாய் எலக்ட்ரிகல்ஸ், தெற்கு மெயின் ரோடு, தஞ்சாவூர் - 9, ● ஸ்ரீ விஜயா ஹார்டுவேர்ஸ் & எலக்ட்ரிகல்ஸ், வேலூர், தொ.பே. 23249/23060 ● ஆம்ஜானி எலக்ட்ரிகல்ஸ், வேலூர், தொ.பே. 20543 ● இப்ராஹிம் எலக்ட்ரிக் கம்பெனி, மதுரை, தொ.பே. 38245 ● மைதான் எலக்ட்ரிக் கோ., மதுரை, தொ.பே. 23424 ● ஜோதி எலக்ட்ரிகல்ஸ், கரூர், தொ.பே. 23724 ● P.R.R. கன்ஸ்ட்ரக்ஷன் இண்டஸ்ட்ரீஸ், சேலம், தொ.பே. 55097 ● தங்கம் லைட்டிங் சென்டர், ஈரோடு, தொ.பே. 79233 ● கவிதா எண்டர்பிரைஸஸ், ஈரோடு ● மீரா எலக்ட்ரிகல்ஸ், கோயம்புத்தூர், தொ.பே. 24186 ● நரேந்திரா எலக்ட்ரிகல்ஸ் கோ., உதகமண்டலம், தொ.பே. 2414

# வேறுபட்ட பார்வை மாறுபட்ட உணர்ச்சி!

அழகான ரோஜாச் செடி. பரபரப்பாகப் பறிக்கப் போனவன் கையில் கூரிய முள் ஒரு குத்து குத்தியது. அழகான ரோஜாப்பூ பூக்கும் செடியில் கடினமான முள்ளை வைத்த கடவுள் முட்டாள் என்பது அவன் முடிவு. அதையே ஒரு ஞானி பார்த்தார். ''ஆஹா.... கடவுள் கருணையே கருணை! இந்த ரோஜாச் செடி வெறும் முட்செடியாக இருந்திருந்தால் யாராவது இதை வளர்ப்பார்களா? நேசிப்பார்களா? நீர் விடுவார்களா? இந்த முட்செடியை எல்லோரும் வெறுப்பார்களே. இடை இடையே ரோஜாவைச் சிரிக்க விட்டு; இந்தச் செடிக்கும் ஒரு மரியாதை ஏற்படுத்திய கடவுள் 'மகா ஞானி' என்று முணுமுணுத்தார்.

உலகமே நாம் எப்படிப் பார்க்கிறோமோ, அப்படியே தெரிவதால்தான் உலகத்தையே 'பார்' என்று தமிழர் கூறினர் போலும்!

கார் வைத்திருந்த ஒருவர், விற்றபின் பஸ்ஸில் போக நேர்ந்தால் இதுவும் ஒரு அனுபவம் என்று எடுத்துக் கொண்டால் சிக்கல் இல்லை. ''எப்படி எப்படி எல்லாம் வசதியாக இருந்தேன். இப்போது இப்படி ஆகிவிட்டதே'' என்று ஒப்பிட்டுப் புலம்பினால்....., கஷ்டம் இன்னும் பெரிதாகத் தெரியும். கந்தபுராணத்தில் இந்தக் கருத்து புலப்படுகிறது.

சூரபன்மன் மகன் பானுகோபன், தேவலோகத்தை எரித்து, இந்திரன் மகன் ஜயந்தனைச் சிறைபிடித்தான். சிறையில் அவன் கைகள் கட்டப்பட்டன. பிறகு வெட்டப்பட்டன. துடித்தான். சாகவும் முடியவில்லை. அமிர்தம் உண்டதால் துண் டித்த கைகள் மீண்டும் சேர்ந்தன. ஜயந்தன் இந்தத் துன்பத்தை ஒரு அனுபவம் என்று ஏற்கவில்லை. இந்திரன் மகனாகச் சுகபோகமாக வாழ்ந்ததை இப்போது நினைத்து.... அப்படிப்பட்ட தனக்கா இந்தக் கதி என்று ஒப்பிட்டு அழுதான்.

துன்பத்தின் முடிவில் சிவபெருமானைத் தொழுது ஆறுதல் அடைந்தான் ஜயந்தன். அதை ஏன் முன்கூட்டியே செய்திருக்கக் கூடாது? அந்த நல்லறிவு அவனுக்கு இல்லை. அது இராமபிரானிடம் இருந்ததாகக் கம்பன் படைக்கிறான். எப்படி?

தசரதர் இராமனை அழைத்து ''நாளை உனக்கு அரச பதவி'' என்றார். மகிழவும் இல்லை. வெறுக்கவும் இல்லை. 'கடமை' என்கிறான் காகுத்தன். ('காதல் உற்றிலன், இகழ்ந்திலன், கடன் இது என்று உணர்ந்தும்.....')

அரண்மனை உத்தரவை அந்தப்புரம் ரத்து செய்தது! அந்தக் காலத்திலேயே அந்தப்புரம் அரண்மனை முடிவுகளை மாற்றி இருக்கிறது! பதினாலு வருட வனவாசம் இடியாக வந்து இறங்கியது. இராமன் துடிக்கவில்லை. 'கைகேயி ஒழிக!' என்று அரண்மனைச் சுவர்களை அசிங்கப்படுத்த ஆட்களை ஏவவில்லை. ''சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை''யாக இருக்கிறான் இராமன்.

இராமன் இன்பத்துக்கு இன்பப்படாத துன்பத்துக்குத் துன்பப்படாத ஞானி - என்பதை ஓவியத்தில் வரைந்த தாமரையாக விளங்கும் இராமன் முகம் விளக்கும். தாமரை என்று எழுதாமல் ஓவியத்தில் வரைந்த தாமரை என்று எழுதி, கம்பன் ஆழமான உண்மையை அழகாக விளக்கினான்.

தாமரை மலரும். வாடும். மீண்டும் மலரும் வாடும். ஆனால் ஓவியத்தில் வரைந்த தாமரை மலராது. வாடாது. என்றும் ஒன்றுபோல அழகு காட்டும். அதனால்தான் இன்ப துன்பங்களால் பாதிக்கப்படாத இராமனுடைய நல்லறிவை ஓவியத் தாமரை போன்ற முகம் என்று எழுதினான் கம்பன்.

இராஜ்ஜியத்தை இழந்த போது கூட இராமன் வருந்தவில்லை. துன்பத்தைத் துன்பமாக நினைக்காத துணிவு அவன் சொத்து. நாற்காலிகள் நம்மை விடக் கீழானவை. நாற்காலியைத் தூக்கிக் கொண்டு நிற்க முடியாது! அதன் மேல்தான் நாம் உட்கார வேண்டும். பதவிகளைத் தம்மை விடப் பெரிதாக நினைப்பவர்கள்தான் பதவிகளை இழக்கும் போது பதறுகிறார்கள்.

'காட்டுக்குப் போ' என்கிற கைகேயி ''புழுதி படிந்த கொடிய காட்டுக்குப் போ'' என்ற பொருளில் ''பூழிவெங்கானம்'' என்கிறாள். இராமனோ 'மின்னுகிற ஒளி பொருந்திய காட்டிற்குப் போகிறேன்' என்ற பொருளில் ''மின் ஒளிர் கானம்'' என்றான். கொடுமை காட்டிலே இல்லை. கைகேயி மனத்தில் இருக்கிறது. ஒளியும்

சுகி சிவம்

காட்டிலே இல்லை. இராமன் மனத்திலே இருக்கிறது. இராமன் வனவாசத்தை ஒரு புதிய அனுபவமாக வரித்துக் கொண்டானே ஒழிய அரண்மனை வாழ்வோடு ஒப்பிட்டு அழுது துடிக்கவில்லை.

ஆனால் துரியோதனன்... அப்படியா? தன் செல்வத்தைத் தருமனுடைய செல்வத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து, தரித்திரனாகிப் புலம்பித் துடிக்கிறான். பாஞ்சாலி சபதத்தில் பாரதி பாடுகிறார்:

''ஏழையாகி இரங்குதல் உற்றான்.''

துரியோதனன் எப்போது ஏழையானான்?

தருமனுடைய செல்வத்தோடு ஒப்பிட்டால் தான் ஒரு பஞ்சை பராரி என்பது துரியன் நினைப்பு. அதனால் பொறாமையில் புலம்பியவன் ஏழையாகி அழுகிறான் என்றான் பாரதி.

இதற்கு எதிராக குமரகுருபரர் என்ற ஞானி, 'செல்வம் என்பது என்ன?' என்ற கேள்விக்கு, செல்வம் என்பது சிந்தனையின் நிறைவு என்கிறார். துரியோதனன் தரித்திரன் அல்லன். ஆனால் தரித்திர உணர்வு அவனைத் தாக்கி விட்டது.

கோயில் பூசை செய்யும் ஏழை பிராமணர் மகளான ஆண்டாள் மனசால் பணக்காரி. எப்படி? திருமால் இருந்சோலை நம்பிக்கு நூறு அண்டா நிறைய நெய், நூறு அண்டா நிறைய அக்கார அடிசில் படைக்கிறாள் தன் பாகரத்தில். எப்படி? அவள் மனத்தில் வறுமை இல்லை. தரித்திரபுத்தி அவளிடம் எப்படி வரும்? திருமாலின் தேவியல்லவா அவள்!

தரித்திரம் வேறு... தரித்திரபுத்தி வேறு. சில பேர் வெற்றிலைப் பெட்டியைத் திறந்ததும் நல்லதாய் நாலு எடுத்துப் போட மாட்டார்கள். வாடியதைத் தேடி எடுத்து 'வீணாய்ப் போகிறதே' என்று தின்று வைப்பார்கள். அடுத்த நாளும் அப்படியே... வாடல்... தேடல்... ஒருநாள் வாடலை எறிந்து விட்டால் தினமும் புதிய தளிர் கிடைக்கும். இவர்களுக்குத் தரித்திரம் இல்லை. தரித்திரபுத்தி இருக்கிறது. ''காலுக்குச் செருப்பில்லை என்று கவலைப்பட்டேன். காலே இல்லாதவனைப் பார்க்கும் வரை'' என்று ஒரு பொன்மொழி. பொருளாதார விஷயத்தில் நம்மை விடக் குறைந்தவர்களோடு ஒப்பிட்டுத் திருப்தி அடைய வேண்டும். அறம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் உயர்ந்தவரோடு ஒப்பிட்டு நாமும் நம்மை உயர்த்த வேண்டும். நாம் நேர்மாறாகச் செய்கிறோம்.

''குடிப்பது தவறல்லவா?'' என்று கேட்டால் ''குடித்து விட்டு, தெருவில் உருளுகிற பலரைவிட நான் மேல்'' என்று அறவிஷயத்தில் தாழ்ந்தவரோடு ஒப்பிட்டுத் திருப்தியடைகிறார்கள்.

அற விஷயங்களில் உயர்ந்தவருடன் ஒப்பிட வேண்டும். பொருள் விஷயத்தில் தாழ்ந்தவருடன் ஒப்பிட வேண்டும். இன்ப விஷயத்தில்.... மிக முக்கியம்... சமமான ஒருவரோடுதான் ஒப்பிட வேண்டும்.





# நோயுற்றிருக்கும் பொருளாதாரத்துக்கு நாற்பது வகை மருந்துகள்!

நமது அரசாங்கம் உள்நாட்டில் வாங்கியிருக்கும் கடனின் மொத்த அளவு என்ன தெரியுமா? மூச்சைப் பிடித்துக் கொள்ளுங்கள்! ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் கோடி ரூபாய்! ஆண்டுதோறும் அரசு கடன் பத்திரங்களை விநியோகித்து, இந்த அளவுக்கு மக்களிடம் கடனாளியாகிப் போயிருக்கிறது. இந்தக் கடன்களை அரசு பெறுவது பெரும்பாலும் வங்கிகளிடமிருந்தும் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களிடமிருந்தும் தான். மக்களிடமிருந்து நேரடியாகக் கடன் பெற முடியாது - தரமாட்டார்கள் - என்பதால் அரசு இந்த உபாயத்தைக் கையாள்கிறது. இதற்கு ஏற்பச் சட்டமியற்றி விடுகிறது!

வாங்குகிற கடனுக்கு அரசு வட்டி கொடுத்தே ஆக வேண்டும். கடனின் அளவு அதிகரிக்க அதிகரிக்க, வட்டி விகிதத்தையும் அரசு அதிகரித்துக் கொண்டே போவதுதான் வேடிக்கை! அதாவது மேலும் மேலும் கடன் தேவைப்பட, வட்டியை அதிகரித்துத் தருவதாக ஆசை காட்டுகிறது அரசு. 15-20 ஆண்டுகளுக்கு முன் 6 சதம் முதல் $7\frac{1}{2}$ சதம் வரை வட்டி கொடுத்து வந்த அரசு, இதனைப் படிப்படியாக அதிகரித்து, சமீப காலத்தில் $11\frac{1}{2}$ சதம் கொடுத்தது! சென்ற ஆண்டு, இருபது வருஷக் கடனுக்கு 12 சதம் வட்டி தருவதாக அறிவித்தது!

இவ்வாறு வாங்குகிற கடனை அரசு என்ன செய்கிறது? வீண் விரயமாகிற ஒரு பங்கு போக, மற்றது, நீண்டகால நோக்கில் அபிவிருத்திப் பணிகளில் முதலீடு செய்யப்படுகிறது. அதாவது, மின் உற்பத்தி, அணை கட்டுதல், சாலைகள் அமைத்தல் போன்றவை. இந்த முதலீட்டுக்கு அரசு லாபம் அடைய வேண்டுமானால், இதனால் தொழில் வளம் பெருகி, அந்தத் தொழில்கள் சிறப்பாக நடந்து, அரசுக்கு வரி செலுத்தும் வரை காத்திருக்க வேண்டும். இதற்குப் பத்துப் பன்னிரண்டு ஆண்டுகள் ஆகலாம். ஆனால் இதற்கிடையில் அரசு வட்டி தராமல் இருக்க முடியாது. இந்த வட்டி செலுத்தவே அரசு புதிதாகக் கடன் வாங்குகிறது! இந்த விஷ வட்டத்தை நிதர்சனமாக உணர வேண்டுமானால், சில வாரங்களுக்கு முன்னர் அரசு, மேலும் வட்டி விகிதத்தை அதிகரித்துப் பதினைந்தாண்டு கடனுக்கு $12\frac{1}{2}$ சதம் வட்டி தருவதாக அறிவித்ததை நினைவூட்டிக் கொண்டால் போதும். இவ்வாறு ஆசை காட்டி மேலும் மேலும் கடன் பெறுவதால் சில விபரீதங்கள் ஏற்படுகின்றன.


வங்கிகள் ஏற்கெனவே அரசுக்குக் குறைந்த வட்டிக்குக் கடன் தந்து பத்திரங்கள் பெற்றுள்ளன அல்லவா? அந்தப் பத்திரங்களின் மதிப்பு வெகுவாகக் குறைந்து போவது முதல் விபரீதம். வங்கிகளின் சொத்து மதிப்பு இதனால் மளமள வென்று குறைந்து விடுகிறது. கடைசியாக அரை சதம் வட்டி கூட்டப்பட்ட போது, வங்கிகள் 1700 கோடி ரூபாய் வரை நஷ்டமடைந்து விட்டிருக்கின்றன! இந்தப் பெரு நஷ்டத்தை எப்படி சமாளிப்பது என்று புரியாமல் ரிசர்வ் வங்கியிடம் யோசனை கேட்டிருக்கின்றன, வங்கிகள். வருடாந்திர ஆண்டறிக்கை (பாலன்ஸ் ஷீட்) எப்படி தயாரிப்பது, எவ்வாறு நஷ்டத்தைக் காட்டுவது என்றே புரியாத சிக்கல் தோன்றியுள்ளது!


இரண்டாவது விபரீதம், கூடுதல் வட்டி காரணமாகப் பணவீக்கம் அதிகரித்து, விலைவாசி மேலும் உயர, சாமானியனை அது பயங்கரமாய்ப் பாதிப்பதுதான்!

அரசாங்கம் நோயுற்றிருக்கும் பொருளாதாரத்தைக் குணப்படுத்தப் பல மருந்துகளை ஒரே சமயத்தில் கொடுத்து, 'ஏதாவது ஒரு மருந்தாவது வேலை செய்யாதா?' என்று சோதித்துப் பார்க்கும் டாக்டரின் நிலையில் செயல்படுகிறது. ஆபத்து என்னவென்றால், எல்லா மருந்துகளும் சேர்ந்து நோயாளியை மேலும் பலவீனப்படுத்தி விடலாம் என்பதுதான்!

– வி. கோபாலன்




நேரு தங்கக் கோப்பை
ஃபுட்பால் என்பது நம்மை அடிமைப்படுத்திய ஆங்கிலேயர் வைத்த பெயர். அதை காங்கிரஸ் ஆட்சி மாற்றி அமைத்ததா? தி. மு. க. ஆட்சிக்கு மாற்றுகிற துணிவு வந்ததா? எங்கள் புரட்சித் தலைவி ஆட்சிதான் கால்பந்து என்ற அநாகரிகப் பெயரை 'ஜெ ஆட்டம்' என்று மாற்றிய பெருமை பெற்றது.
சர்வதேசக் கால்பந்து அணிகளின் குறைகளை நேரில் கேட்க முதலமைச்சர் தேதி சொல்லி அறிக்கை வெளியிட்டிருக் காங்க!
இப்படி கோல் போஸ்ட்டுக்கு முன்னால கட்-அவுட்டை வச்சுட்டா எப்படிங்க போட்டியை நடத்துறது?
கால்பந்து சங்கம்
கருத்து: சிவம்
கார்ட்டூன்: செல்வம்



நாற்காலி சாக்குத்தான்...
நான்தான்!
யாருக்கு பார்த்திருக்கோம்!
ஆயிரமாய் புரட்சியாளர்கள் பல்வேறு பிரிவினர்!
தலைமை
கவர்னர் மத்திய அரசின் ஏஜெண்ட் இல்லை...
நாகலாந்திலே நான் செஞ்சது சரி... அரசியல் சாசனப் படிதான் நடந்துகிட்டேன்!
என்னை கவர்னர் பதவியிலிருந்து டிஸ்மிஸ் பண்ணியது தப்பு!
தாளம்
ரேஷன் அரிசிக்கு வருமான வரம்பு கொண்டாந்திட்டேன்!
ரூ750/-
ஜெயலலிதா
எதிர்க்கிறீங்களா...? சரி, சரி! வருமான வரம்பை நீக்கிட்டேன்...
எல்லாருமே கல்லும் மண்ணுமா தின்னு தண்ணி குடிங்க... எனக்கென்ன!




கல்கி

1992
மே 3
மலர் : 50
இதழ் : 40
ஆங்கீரச
சித்திரை 21


# பச்சை குத்திக் கொள்ளவா பத்திரிகைகள்?

முதல்வர் ஜெயலலிதா பத்திரிகைகளைக் கட்டுப்படுத்த நினைப்பது அதிர்ச்சி அளிக்கிறது என்றால் அதை விடப் பெரிய அதிர்ச்சி, பிரதமர் அவரை இது குறித்துக் கேட்டபோது, ''எல்லாம் வெறும் கற்பனை'' என்று அவர் அலட்சியமாகப் பதிலளித்ததுதான். வெறும் கற்பனையான விஷயத்துக்கா டில்லியில் ஹிந்துஸ்தான் டைம்ஸ் முதல் சென்னை ஹிந்து பத்திரிகை வரை எல்லாப் பத்திரிகைகளும் தலையங்கமும் கட்டுரைகளும் எழுதின? இல்லஸ்டிரேட்டட் வீக்லி திருபருக்கும் வேறு சிலருக்கும் சட்டமன்றத்தில் கூண்டு தயாரானது வெறும் கற்பனையா? வீக்லி இதழின் இந்நாள் ஆசிரியர், 'தமக்கும் குறிப்பிட்ட கட்டுரைக்கும் சம்பந்தம் கிடையாது; அப்போது ஆசிரியராக இருந்தவர் வேறு' என்று சுப்ரீம் கோர்ட்டில் முறையிட நேர்ந்ததும் கற்பனையா?

''பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தச் சட்டம் கொண்டு வருவது என் எண்ணமாக இருந்தது; ஆனால் அதை மாற்றிக் கொண்டுவிட்டேன்'' என்று முதல்வர் பிரதமரிடம் கூறியிருந்தால் அவரது நேர்மைத் திறனை நாம் பாராட்ட சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். ஆனால் தாம் பரமசாது போலவும், பத்திரிகைகள்தாம் ஏதோ கற்பனை செய்து கொண்டது போலவும் பிரதமருக்கு ஓர் எண்ணம் ஏற்படும் விதமாக முதல்வர் கூறிய வார்த்தைகள், அவரிடம் நமக்குள்ள மதிப்பைக் குறைக்கின்றன.

பத்திரிகை ஆசிரியர்கள் எல்லாருமே உத்தமமானவர்கள்; பத்திரிகைகள் அனைத்தும் உண்மையன்றி வேறு எழுதுவதில்லை என்பது எமது வாதமல்ல. இருக்கின்றன; நல்ல பத்திரிகைகள்; மோசமான பத்திரிகைகள்; இரண்டும் கெட்டான் பத்திரிகைகள் என்று பல ரகத்தில் உள்ளன. மறுப்பதற்கில்லை. சில பத்திரிகைகள் தரக்குறைவாக எழுதுகின்றன; அவதூறுகளைப் பரப்புகின்றன, மூடி மறைப்பதற்கில்லை. ஆனால் இத்தகைய பத்திரிகைகளை மக்களே இனம் கண்டு கொள்வார்கள் என்பதையும் மறப்பதற்கில்லை. பரபரப்புக்காகப் படிக்கலாம்; ஆனால் நம்ப மாட்டார்கள்.

'தப்பித் தவறிக் கூட யாரும் நம்பிவிடக் கூடாதே' என்ற கவலை முதல்வருக்கு இருக்குமானால் ஒரு கண்டன அறிக்கை விட்டால் போதும். அதில் உண்மைநிலையை எடுத்துரைத்தால் போதும். அதனைப் பொறுப்புள்ள எல்லாப் பத்திரிகைகளும் பிரசுரிக்க, அவதூறு பரப்பிய பத்திரிகைக்குத் தலை குனிவு ஏற்படும். அது மக்களிடையே மேலும் மதிப்பு இழக்கும். இதற்கு மாறாக, 'அந்தப் பத்திரிகையைக் கொளுத்து, ஏஜெண்டுகளை மிரட்டு, ஆசிரியரைக் கைது பண்ணு' என்றெல்லாம் ஆரம்பித்தால் அந்தப் பத்திரிகைதான் பலம் பெறும். ''ஓகோ! பத்திரிகை எழுதியது உண்மைதான் போலும்; அதனால்தான் இப்படி அரசு இயந்திரமும் கட்சி இயந்திரமும் கைகோர்த்துக் கொண்டு அடக்கு முறையைக் கையாள்கின்றன'' என்ற எண்ணமே மக்களிடம் மேலோங்கும். ''எதிர்க்கட்சி சட்டமன்றத்தில் இல்லா விட்டால் என்ன, பத்திரிகைகள் இருக்கின்றனவே' என்று பதவிக்கு வந்தபோது சரியாகப் பேசிய முதல்வரா இன்று இப்படி நடந்து கொள்வது?'' என்று கேட்க ஆரம்பிப்பார்கள். இந்த எளிய அடிப்படையான மனோதத்துவம் முதல்வருக்குப் புரியாமல் போனது ஆச்சர்யம்.

பத்திரிகைகள் என்ன எழுதலாம், எப்படி எழுதக்கூடாது என்பதற்கெல்லாம் விரிவான வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. பிரஸ் கவுன்ஸில் மட்டுமின்றி, சட்டங்களும் விதிகளை வகுத்துத் தந்துள்ளன. சுய கட்டுப்பாடு பத்திரிகைகளுக்கு அவசியம்தான். ஆனால் இதனை மீறுகிற சில பத்திரிகைகள் எப்போதும் இருக்கவே செய்யும். அவற்றை அடக்கப் புதிய புதிய கடுமையான சட்டங்களை இயற்றினால், உண்மைகளுக்கும் வாய்ப்பூட்டு போட்டதாகி விடும் அபாயம் உண்டு. கட்சிக்குள் பலர், விசுவாசம் காட்டி பச்சை குத்திக் கொள்வதையும் காலில் விழுவதையும் மௌனமாக வரவேற்கும் முதல்வர், அத்தகைய அடிபணிதலைப் பத்திரிகைகளிடம் எதிர்பார்க்க மாட்டார் என்று நம்புகிறோம்.

# சொன்னார்கள்

● ஸ்டாலினுக்கு முடிசூட்ட நினைப்பதன் மூலம் தி.மு.க. வின் கடைசி அத்தியாயத்தை எழுதப் போகிறார் கருணாநிதி.

*- வாழப்பாடி ராமமூர்த்தி.*



● நான் பதினோரு ஆண்டுகள் பிரதமராக இருந்த போது பிரிட்டனில் பல மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளேன்... தாச்சரிஸம்தான் நிலைத்து நிற்கும். எனது திட்டங்களைச் சீர்குலைத்து மேஜரிஸம் ஏற்படுத்த முயன்றாலும் அது நிலைத்து நிற்காது.

*- மார்கரட் தாட்சர்.*



● தவிடு நீக்கப்படாத அரிசியைப் பயன்படுத்த வேண்டும். நூறு கிலோ நெல்லில் தவிடு நீக்கப்பட்டால் 65 கிலோ அரிசிதான் கிடைக்கிறது. அதுவே தவிடு நீக்கப்படவில்லையெனில் எண்பது கிலோ கிடைக்கிறது. எனவே இதன் மூலம் உணவுத் தேவையைச் சமாளிக்க முடியும். எனவே சட்ட மன்ற உறுப்பினர்களாவது வாரம் ஒரு முறை தவிடு நீக்கப்படாத அரிசியைச் சாப்பிட முன் வர வேண்டும்.

*- குமரி அனந்தன் (சட்ட சபையில்)*




● கச்சத்தீவு மீட்கப்பட்டால் அது மீனவ சமுதாயத்திற்கு மாபெரும் சேவையாகும். அதற்கான முயற்சியைத் தொடர வேண்டும்.

*- கோடிமாரி (அ.தி.மு.க. எம்.எல்.ஏ)*

● இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தினால் ஒரு விவசாய பம்பு செட்டுக்கு 25 ஆயிரம் ரூபாய் அரசுக்குச் செலவாகிறது என்பது பொதுவானதல்ல. சில இடங்களில் ஐம்பதாயிரம் ரூபாயும் வேறு சில இடங்களில் ஒரு லட்சம் ரூபாயும் கூடச் செலவு ஏற்படுகிறது.

*- ஜெயலலிதா*



● எனது விவாகரத்து என்பது எனது வாழ்க்கையின் சோகமான அனுபவம். அதைத் தாங்க முடியாமல் மனம் வெதும்புகிறேன். விவாகரத்து என்பது தனிப்பட்ட விஷயம். இது வின்னியின் அரசியல் வாழ்வு சம்பந்தப்பட்டதல்ல....

*- வின்னி மண்டேலா*



● உலக நாடுகள் எந்த திசையில் செல்கிறதோ அதற்கேற்ப திருப்பதியில் நாம் முடிவுகள் எடுத்துள்ளோம். கிணற்றுத் தவளையான தி.மு.க. விடம் சர்டிபிகேட் வாங்குவதற்காக நாம் கொள்கைகள் வகுக்கவில்லை.

*- ப. சிதம்பரம்*


அடுத்த இதழ் :

ஜூலை

ஸ்பெஷல்!

ஏராளமான கட்டுரைகள், துணுக்குகள், செய்திகள்.



## பம்பாய்க் கடிதம் :

☛ பம்பாய் உயர் நீதிமன்றம்



# காத்திருக்கும் வழக்குகள் இரண்டு கோடி!

கோர்ட்டில் வழக்குத் தொடுத்தவர்கள் கால தாமதத்தாலும், பணவிரயத்தாலும் படும் அவதிகள் சொல்ல முடியாது! இன்று சுப்ரீம் கோர்ட், ஹை கோர்ட்டுகள் மற்றும் பல விதமான கோர்ட்டு களில் இரண்டு கோடி கேஸ்கள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன! இவற்றில் பம்பாய் ஹைகோர்ட்டில் மட்டும் ஏறக்குறைய ஒரு லட்சம் கேஸ்கள்! இப்படியிருக்க ஒரு பணம் படைத்தவர், நல்ல வக்கீல்களை அமர்த்தித் "தனக்கு ஏன் ஜாமீன் கொடுக்கப்பட வேண்டும்" என்று வாதாடியது பம்பாய் ஹை கோர்ட்டில் நான்கு நாட்கள் கேட்கப்பட்டது! இம்மாதிரி கால விரயத்தால் நூற்றுக் கணக்கான கேஸ்கள் 'லிஸ்ட்' செய்யப்பட்டிருந்தாலும், கோர்ட்டின் முன் வருவதில்லை.

கொடுக்கப்படும்.

## மனவளர்ச்சி குன்றியோருக்கு மனை

மனவளர்ச்சி குன்றிய நூறு பேர் தங்குவதற்கான ஹாஸ்டல் ஒன்றிற்கு நான்கு மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளே அடிக்கல் நாட்டினர்! இந் நிகழ்ச்சி முல்கான் என்ற இடத்தில் நடந்தது. அனேக மனவளர்ச்சிக் குன்றிய குழந்தைகளின் பெற்றோருக்குத் 'தங்கள் காலத்திற்குப் பின் தங்கள் குழந்தைகளை அக்கறையோடு கவனிப்பார் யார்' என்ற கவலையை நீக்கவே உருவாகும் ஹாஸ்டல் இது! நாற்பது லட்சம் ரூபாய்ச் செலவில் ஐந்தாண்டுகளில் முடிக்கப்படவிருக்கும் இந்த ஹாஸ்டலில், 50 ஆண்களும், 50 பெண்களும் தங்கலாம். தங்குவோருக்கு மருத்துவ வசதி, உடற்பயிற்சி, தொழில் பயிற்சி யாவும்

☛ பால்ஜி பெண்டார்க்கர்



## ரேஷன் கடைகளில் கோல்மால்!

பம்பாயில் 490 ரேஷன் கடைகளில் பலவிதங்களில் ஊழல்கள் நடப்பதாகக் கருதிய மகாராஷ்டிர அரசு நடவடிக்கை எடுக்கப் போக இதனை எதிர்த்து, 'ரேஷன் கடைகள் சொந்தக்காரர்கள் சங்கம்' உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியது! அரசு கொடுக்கும் நல்ல தானியத்தை அமுக்கிவிட்டு, மட்டமான தானியத்தை மக்களுக்கு விற்பதாக அவர்கள் மீது புகார். 'அரசு சப்ளை செய்யும் தானியம் புறாக்களுக்குப் போடக் கூட லாயக்கில்லை' என்பது சங்கத்தின் வாதம்.

'அரசு முழு கோட்டாவை சப்ளை செய்யாததால் நாங்கள் அவ்வப்போது ஸ்டாக் இல்லை என்று அறிவித்து மக்களிடம் ஏச்சுக் கேட்க வேண்டியிருக்கிறது' என்கிறது சங்கம். 'உயர் மட்டத்தினர் ரேஷனில்

எதுவும் வாங்குவதில்லை. இவற்றை ரேஷன் கடைகள் வெளியில் விற்றுவிடு கின்றன' என்கிறது அரசு.

கருத்து வேறுபாடு தொடர்கிறது! சென்ற மாதம் அநேக ரேஷன் கடைகள் மூடியிருக்கப் பொது மக்கள் பெரிதும் தவிக்க நேரிட்டது!

## குண்டுமில்லை; குழியுமில்லை!

பம்பாயிலுள்ள 1600 கி.மீ. ரோடு களில், முக்கியமான 350 கி. மீ. ரோடுகள் முழுவதுமாகக் கான்கிரீட் ரோடுகளாக மாற்றப்பட்டு வருகின்றன! இவற்றில் 82 கி.மீ. அளவு சாலைகளுக்கான வேலை மார்ச் '93க்குள் முடியும். மீதமுள்ள 268 கி. மீ. ரோடுகள் 5 ஆண்டுகளில் முடிக்கப் படும். இந்த ரோடுகள் கடும் மழையிலும் சேதமடையா! இதற்கு மொத்தம் 428 கோடி ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க் கப்படுகிறது. இப்பணியில் ஈடுபட்டுள்ள அநேகர் சேலம், தருமபுரி, திருநெல்வேலி பகுதிகளிலிருந்து வந்தவர்கள்!

## பசுமைப் போட்டி

மகாராஷ்டிரா அரசின் மூன்று மூத்த அதிகாரிகள் 'பசுமைப் புரட்சிக்கு' அடி கோலியதற்காக 'வனஸ்ரீ' விருது பெற் றிருக்கிறார்கள். புனே முனிசிபல் கமிஷன ராக ஹர்னாம் சிங் இருந்த போது நூற் றுக்கணக்கான தேக்கு மரங்களை நட்டார். சுரேந்திர வர்மா என்ற போலீஸ் அதிகாரி மகாராஷ்டிரத்தின் எல்லா சிறைக் காம்ப வுண்டுகளிலும் ஒரு லட்சம் தேக்கு மரங் களை நடச் செய்தவர். அருண் பதங்கர் ஒரு காட்டிலாகா அதிகாரியின் மகன். தந்தை யிடம் பெற்ற அனுபவத்தால், தாம் அர சாங்க அதிகாரியாய்ப் பணியாற்றச் சென்ற மாவட்டங்களிலெல்லாம் பல அபூர்வ மரங்களையும், மூலிகைகளையும் வளர்க்க உதவினார். இம் மூவரையும் அரசு கௌர வித்தது. இன்று அதிகாரிகளிடையே ஒரு 'பசுமைப் போட்டி'யை ஆரம்பித்து வைத் திருக்கிறது!

## பால்ஜிக்குப் "பால்கே விருது"

60 மராத்திய படங்களையும், 8 இந்திப் படங்களையும் உருவாக்கிய பால்ஜி பென் டார்க்கருக்கு (94 வயது) இந்த ஆண்டின் பால்கே விருது கொடுக்கப்பட்டுள்ளது. 1920 இல் திரையுலகில் சேர்ந்த இவரின் 'ஷாம் சுந்தர்' என்ற படம்தான் (1934-35) முதன் முதலாக வெள்ளி விழா கொண் டாடிய படம்!

– ராஜீவி நரசிம்மன்

## பொன்விழா ஆண்டு : : தங்கநகை பரிசுத் திட்டம் – 21

## நேர்முகத் தேர்வில் நடந்தது...




வேலை நிமித்தமோ அல்லது பள்ளி, கல்லூரி அட்மிஷனுக்காகவோ, நேர்முகத் தேர்வுக்குப் போயிருப்பீர்களே? அப்போது உங்களுடைய ஒரு சாதுர்யமான பதில் அல்லது ஒரு சாமர்த்திய நடத்தை தேர்வா ளர்களின் கவனத்தைக் கவர்ந்து பாராட்டுக் கூடப் பெற்றிருக்கலாம். அத்தகைய நிகழ்ச் சியை எழுதுங்கள். பிறருக்கும் உதவும். பிரசுரமாகும் சம்பவங்கள் அனைத்துக்கும் சன்மானம். முதல் தரமான ஒன்று, பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறு மானமுள்ள பொன் நகை பரிசு பெறும். "கல்கி காரியாலயம், சென்னை – 600 032" என்ற விலாசத்துக்கு மட்டுமே எழுதி அனுப்பக் கடைசித் தேதி : மே 11. "நேர்முகத் தேர்வில் நடந்தது" என்று தலைப்புத் தரவும். தபால் கார்டு மட்டுமே பயன்படுத்தவும்.

50 கல்கி

பாலு ஜுவல்லர்ஸ்

# மன்னிப்பதில் ஒரு மகிழ்ச்சி!

''அம்மா! பையிலேர்ந்து பணம் எடுத்தியா?''

''இல்லையேப்பா!''

''அவளைக் கேட்டாலும் இல்லேங்கறா, நீயும் இல்லேன்னா என்ன அர்த்தம்?''

மௌனமாயிருந்தாள்.

''மத்யானம் ராதா வந்திருந்தாளா?''

''ஆ... ஆமாண்டா வந்திருந்தா.''

''சர்தான். அவ பணம் ஏதாவது வேணும்னு கேட்டிருப்பா நீயும் எடுத்துக் கொடுத்திருப்பே... ஏன் இல்லைங்கறே. மாசக் கடைசிங்கறது புரியாம இப்படிச் செஞ்சேன்னா என்ன பண்றது. சே...!'' வெளியேறினான்.

இரவு படுக்கையில்.....

''என்னங்க நீங்க! அம்மாவை அவ்வளவு கோவிச்சுக்கண்டிருக்க வேண்டாம்.''

''பின்னே என்ன, மாசக் கடைசின்னு தெரிஞ்சும் பணத்தை எடுத்துக் கொடுத்துட்டு இல்லேன்னா என்ன அர்த்தம்!''

''அதில்லைங்க வந்து... பணத்தை அம்மா எடுக்கலீங்க நா... நான்தான் எடுத்தேன்.''

''அடிப்பாவி! கேட்ட போது இல்லேன்னியே?''

''நீங்க கோபமா இருந்தீங்க, பயமா இருந்தது. அ... அதான்.. ம்... அப்புறம் இராத்திரி சொல்லிடலாம்னுதான் இருந்தேன். அதுக்குள்ளே நீங்க அம்மாட்ட போயி... என்னை மன்னிச்சிடுங்க...''

''சே! நீ இல்லேன்னு சொன்னதும் நம்பின நான், அம்மா அவ்வளவு சொல்லியும் நம்பாம அவங்க மனசை நோகடிச்சுட்டேனே...'' குமுறினான்.

காலையில்...

''என்னை மன்னிச்சுடும்மா.''

''என்னடா? எதுக்கு?''

''நேத்து உங்கிட்ட கோபமா பேசிட்டேன்.''

''சீ பைத்தியம்! அதை நான் அப்பவே மறந்துட்டேன். நீ இன்னமும் நினைச்சுண்டு இருக்கியா... பணம் கிடைச்சுதா?''

''ம்... ம் இருந்ததும்மா. உனக்கு என் மேல கோபமில்லையே?''

''பணம் காணலேன்னா யாருக்கும் கோபம் வரத்தான் வரும். நீரடிச்சு நீர் விலகுமா? நீ போய் வேலையைப் பாரு.''

அவன் போனபின்,

''ஏண்டிம்மா! எதுக்காக அவன் பையிலேர்ந்து பண



மெடுத்தே?''

''அத்தை... நீ... ..நீங்க...?''

''நான் பாத்துண்டேதான் இருந்தேன் நீ எடுக்கறதை.''

''அப்புறம் அவர்கிட்டே ஏன்...?''

''சொல்லலேங்கறியா? அப்ப நான் சொல்லியிருந்தா அது காட்டிக் கொடுக்கறதா இருக்கும். நீயா இராத்திரி ஒத்துண்டே பார் அது சரி.''

''அத்தே அது உங்களுக்கு...?''

''எப்படி தெரியுங்கறயா? அவன் காலைல எழுந்ததும் எங்கிட்ட வந்து மன்னிப்பு கேட்டானே... புரியாதா?''

அவள் தலைகுனிந்தாள்.

''ஆனால் கள்ளண்டி அவன்! பணம் இருந்ததுன்னு சொன்னானே தவிர உன்னைக் காட்டிக் கொடுக்கலை பார்த்தியா!'' - சிரித்தாள் மகிழ்வாய்.

ஏ. முகுந்தன்

**4** நந்தினிக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. புவனாவின் கேள்விக்கு என்ன அர்த்தம் என்றே புரியவில்லை. அவளிடம் யாராவது சொல்லி விட்டார்களா? இல்லை அவளே எங்கேயாவது பார்த்திருக்கிறாளா? அப்படி எதுவும் இருக்க முடியாது. அவளும் அருண்குமாரும் தனியாக எங்கேயும் வெளியே போனதில்லை.

''ஏன் அப்படிக் கேக்கறே புவனா?'' என்று கேட்டாள். மனம் புறாச் சிறகு போல் படபடத்தது.

புவனா என்ன சொல்லப் போகிறாள் என்று தெரியாத நிலையில் அவள் எதைக் கேட்டாலும் என்ன பதிலைச் சொல்லப் போகிறோம் என்ற மயக்கத்தில் நந்தினி கண்களைச் சுற்றிலும் அலைய விட்டாள்.

''ஒண்ணுமில்ல அண்ணி. சும்மா கேட்டேன்'' - என்றாள் புவனா ஒரு மௌனப் புன்முறுவலுடன். அதில் வெட்கம் கலந்திருந்த மாதிரி பட்டது நந்தினிக்கு.

''வெளையாட்டுப் பொண்ணும்மா நீ'' என்று சொல்லி விட்டு மொபெட்டை ஸ்டார்ட் செய்தாள் நந்தினி. புவனாவை நேரடியாகப் பார்க்காமல் பயணம் செய்யும் சௌகர்யம் அவளுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

''ஏறு!''

புவனா ஏறிக் கொண்டாள்.

**பு**வனா ஜன்னலுக்கு வெளியே சாய்ந்து பார்த்தாள்.

வெளியே மழை ஓய்ந்து விட்டது. திடீரென்று மழை பொத்துக் கொள்ளும் என்று எந்த முன்னறிவிப்பும் இல்லை. கடைசி அரை கிலோ மீட்டர் இருக்கும் போது, அவளும், அண்ணியும் அந்தத் திடீர் மழையில் ஒதுங்க இடம் இல்லாமல் நனையப் போகிறார்கள் என்று அவள் எதிர் பார்க்கவில்லை.

சில விஷயங்கள் இப்படித்தான் எந்த முன்னறிவிப்புமில்லாமல் திடீர் என்று வந்து சந்தோஷத் தாக்குதல் நடத்துகின்றன. அவளுடைய ஷ்யாம் சுந்தரைப் போல...

கல்லூரியில் ஏற்பாடு செய்திருந்த என். எஸ். எஸ். திட்டத்தில் குழந்தைகள் ஆஸ்பத்திரிக்கு இஷ்டமில்லாமல் போனது, அப்படியொரு தித்திப்பான திருப்பத்தில் கொண்டு விடும் என்று அவள் கனவு கண்டதில்லை.

குழந்தைப் பராமரிப்பு பற்றி ஒவ்வொருத்தரிடமாகச் சொல்லிக் கொடுக்கும் கசப்பான வேலை :

கொழந்தைக்கு என்ன பேரு?

முனிஸ்பரி.

ஒடம்புக்கு என்ன பண்ணுது?

நாலு நாளா பேதிம்மா.

சக்கரை, உப்பு கலந்து தண்ணி குடுத்தியா?

குட்தேம்மா. அது எங்க? கூட இருக்கற பெரிசுங்களோட வெள்ளாடணும்னு ஓடுது. போற எடத்துல மண்ணு கல்லு கண்ணாம்புன்னு கண்டதையும் துன்னுது.

பெத்தவதான் ஜாக்கிரதையாப் பாத்துக்கணும். எத்தினி பசங்க ஒனக்கு?

இது அஞ்சாவதும்மா.

குடும்பக்கட்டுப்பாடுல்லாம் பண்ணிக்கலையா?

அப்படின்னா?

அப்படின்னா... அப்படின்னா... அதான் டீவியிலெல்லாம் சொல்றாங்களே. உள்ளே போய் டாக்டரம்மாகிட்டக் கேளு. சொல்லுவாங்க. ம். நெக்ஸ்ட். கொழந்தைக்கு என்ன பேரு?


ஷ்யாம் சுந்தர்.

அவள் ஆண்மையின் கன சாரீரம் கேட்டுத் திகைத்துப் போய் நிமிர்ந்து பார்த்தாள். சுருட்டை முடியுடன் ஓர் இளைஞன். விளிம்பற்ற கண்ணாடியுடன், வசீகரமான புன்னகையுடன். பார்த்த வினாடியே அவள் உடலில் சிலிர்ப்பு ஓடியது. என்ன காரணம் என்று தெரியாமலே.

''நான் ஒரு மெடிக்கல் ரெப்...'' என்றான் அதே வசீகரப் புன்னகையுடன். ''என்னவோ பத்துப் பதினைஞ்சு குழந்தை பெத்து அனுபவப்பட்டவங்க போல நீங்க பேசறதைக் கேட்டதும், ஆச்சரியமா இருந்தது...''

அவளுக்கு முகத்தில் வெட்கச் சிரிப்பு ஏறியது.

''இதுக்கு




முன்னால உங்களை நான் இங்க பார்த்ததில்லையே?'' என்றாள், ஏதாவது பேச வேண்டுமே என்ற அவசரத்தோடு.

''பார்த்திருக்க முடியாது. நான் இருக்கறது திருச்சி பிராஞ்ச்ல. குழந்தைங்களுக்கு ஸ்பெஷலா ஒரு மருந்து புதுசா தயாரிச்சிருக்காங்க எங்க கம்பெனில. டாக்டருங்களை மீட் பண்ணி ஸாம்பிள் கொடுத்திட்டுப் போலாம்னு வந்தேன். வந்த இடத்துல இவ்வளவு பிரமாதமான



டாக்டரைப் பார்ப்பேன்னு நெனைக் கலை...''

அவள் வாய் விட்டுச் சிரித்தாள்.

''என் பேரு ஷ்யாம்சுந்தர்னு சொன்னேன்...'' அந்த அறிவிப்பில் இருந்த கேள்வி அவளுக்குத் தாமதமாக உறைத்தது.

''என் பேரு புவனா...'' என்றாள். முகம் சிவப்பேற.

அதற்குப் பிறகு எத்தனை சந்திப்புகள். சென்னையில் காதலர்கள் வெகு எளிதில் யார் கண்களிலும் படாமல் தொலைந்து போகலாம். தியேட்டர், கோவிலின் இருட்டான பைரவர் சந்நிதிகள். கடற்கரை. இன்று வரை அவள் மாட்டவில்லை. இப்படித் திருட்டுத்தனமான சந்திப்புகளில் ஒரு த்ரில் இருக்கத்தான் செய்கிறது.

இப்படித் தனிமையில் அமர்ந்து அசை போடுவது குழந்தையின் லாலிபாப் போல ஓர் இனிமையான சுகம்.

அண்ணியின் ஆபீஸ் வாசலில் 'யாரையாவது லவ் பண்ணியிருக்கியா அண்ணி?' என்று அவள் கேட்டதே தன் கட்சிக்கு, தன் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு ஆள் சேர்க்கத்தான். அண்ணி ஒருவேளை காதல் வயப்பட்டிருந்தால் தன்னை அறிந்து கொள்ள முடியுமே என்று நினைத்துத் தான் அப்படிக் கேட்டாள். கேட்ட பின்புதான் முட்டாள்தனம் புரிந்தது. 'ஏ' ஜோக் சொல்லத் தொடங்கினால் வாய் பொத்தும் அண்ணி, முதலிரவில் அண்ணன் எப்படிப் பழகினார் என்று கேட்டால் கூட்டு நத்தை போல் சுருங்கிப் போகும் அண்ணி. கல்யாணத்திற்கு முன்னால் ரிஷ்யஷ்ருங்கரிணியாக அல்லவா இருந்திருப்பாள். அவளிடம் போய், ''யாரையாவது காதலித்தாயா?'' என்று கேட்டதே மிகத் தப்பான கேள்வி.

காதல் என்ற வார்த்தையிலேயே இருக்கும் போதையும், த்ரில்லும் இந்த அண்ணிக்குத் தெரிந்திருக்குமா என்ன?

அண்ணனைப் போல கடுவன்பூனையாக இல்லாமல் தன்னோடு சகஜமாக இழைந்து பழகுகிறாளே. அதுவே தனக்குக் கிடைத்த பெரிய பரிசு என்று தோன்றியது.

நந்தினி ஜன்னல் கதவுகளைத் திறந்தாள். துவட்டிய கூந்தலில் இன்னும் மெலிதான ஈரம் மிச்சமிருந்தது. மழைக்குப் பின்னர் கிளம்பும் தூய்மையான வாசம் ஜன்னல் வழியே வந்தது.

வெளியே வானம் அவளது மனதின் பல்வேறு உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பது போல் சாயம் பூசியிருந்தது. களங்கமில்லாத நீலம் ஒரு மூலை. கறுப்பாய் பயமுறுத்தும் இருள் இன்னொரு மூலை. அந்தக் கறுப்பைத் தாண்டி நம்பிக்கையூட்டும் வெளிச்ச விளிம்பு ஒரு பக்கம். சந்தோஷமும்,

## அருள்வாக்கு



மனிதர்களாகப் பிறந்தவர்கள் தர்மப்படி வாழ்வு நடத்த வேண்டுமானால் சகல காரியங்களிலும் விதிப்படி நடக்க வேண்டியிருக்கிறது. இந்த விதிமுறைகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது ரொம்பவும் அவசியம். ஆனால், அவற்றை அவர்களாக ஏற்று, சுயேச்சையாகப் பின்பற்றுவதே அழகு. ஒருவரை நிர்ப்பந்தப்படுத்தி விதிகளை அநுசரிக்கச் செய்வதில் பெருமை இல்லை. சம்பிரதாயம் என்பது தானாக வழிவழியாக வந்திருக்கிறது. மக்கள் அதைத் தாமாக ஏற்றுப் பின்பற்றி வந்திருக்கிறார்கள். சம்பிரதாயத்தில் வந்துள்ள அத்தனை விதிமுறைகளையும் சாஸ்திரத்தில் சட்டம் போல் எழுதி வைக்கவில்லை. சட்டம் என்று எழுதி விட்டால் அது நிர்ப்பந்தமாகி விடுகிறது என்பதே காரணம். 'ஸஹஸ்ரம் வத; ஏகம் மா லிக' (ஆயிரம் விஷயங்களை வாயால் எடுத்துச் சொல்லு; ஆனால் ஒன்றைக் கூட எழுத்திலே எழுதி வைத்துக் கட்டாயப் படுத்தாதே) என்பது ஆன்றோர் வாக்கு.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

சிலிர்ப்புமான கடைசி ஆரஞ்சு இன்னொரு பக்கம்.

புவனா ஏன் அப்படிக் கேட்டாள்? அருண்குமாரைப் பற்றி அவளுக்கு ஏதாவது தெரிந்திருக்குமா என்ன?

அருண்குமாரின் நினைவு வந்ததும், கல்யாணத்திற்கு அவன் தந்த பரிசுப் பொருளை இன்னும் பிரித்துப் பார்க்காததும் ஞாபகம் வந்தது. ஒரு தயக்கமான உறுத்தலுடன், அறைக் கதவை உள்புறம் தாழிட்டு விட்டு அலமாரியிலிருந்து அதை எடுத்தாள்.

பாட்டிக்கும், தாத்தாவிற்கும் அந்த வீட்டின் முன்னறை ஒதுக்கப்பட்டிருந்தது. அறையில் ஒரு கயிற்றுக் கட்டில். தாத்தாவின் சப்ரமஞ்சம். மேலே பாட்டியின் புடைவைகள் ஒரு மாதிரி எட்டு போல் சுருட்டப்பட்டு இரும்புக் கம்பியில் ஊசலாடின. அறையின் ஒரு மூலையில் பாட்டியின் உலகம். பாக்கு இடிக்கும் இரும்புக் குப்பி. தடிமனான பெருவிரல் நீள உலக்கை. அவிழ்த்து வைக்கப்பட்ட கண்ணாடி. நிதான சைஸ் கருங்கல் ஒன்று. அதில் மஞ்சள் இழைக்கப்பட்ட அடையாளம். தேய்ந்த ஒரு மஞ்சள் துண்டு. கவிழ்த்து வைக்கப்பட்ட ஒரு வாரப் பத்திரிகை. அப்புறம் ஒரு தகரப் பெட்டி.

பாட்டியின் பெட்டி அவளது அந்தப்புரம். அதைத் திறந்து பார்க்க அந்த வீட்டில் யாருக்குமே அனுமதியில்லை.

பெட்டியின் மேல் சாய்ந்து இரு கால்களையும் நீட்டிக் கையகல முகம் பார்க்கும் கண்ணாடியில் கண் பதித்து உச்சந்தலை பஞ்சுப் பொதியில் சீப்பால் சிரமப்பட்டு வகிடு எடுத்துக் கொண்டிருந்த பாட்டி, நிமிர்ந்து கட்டிலில் உட்கார்ந்து கால் ஆட்டிக் கொண்டிருந்த தாத்தாவைப் பார்த்தாள். கோபப் பார்வை.

தாத்தா அவள் பார்ப்பது தெரிந்தும் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டிருந்தார்.

''தூ. திருப்பியும் பீடி குடிக்க ஆரம்பிச்சுட்டீங்களா? அது என்னது ஆம்பளைத் திமிரு? சொல்லச் சொல்லக் கேக்காம பீடி பத்த வெக்கறது. நாத்தம் என் கொடலைப் புடுங்குதுன்னு சொல்றேன் இல்ல.''

''இது பீடி இல்ல பட்டு. சிகரெட்டு.''

''ஆமா. கௌரவம் அதுலதான் பாழாப் போய்டிச்சி. இப்ப அதைத் தூக்கி எறியறீங்களா இல்லையா?''

''ஒரு ரெண்டு இழுப்பு பட்டு'' என்று தாத்தா கெஞ்சினார்.''

''நீங்க என்னிக்கு என் பேச்சைக் கேட்டிருக்கீங்க? இப்பக் கேக்கறதுக்கு. எப்படியோ ஒழிஞ்சு போங்க'' என்று வாரிக்

கொண்டிருந்த சிப்பைத் தாத்தாவின் மேல் எறிந்தாள்.

தாத்தா சிகெரெட்டும், புன்னகையுமாய் ஒதுங்கிக் கொள்ள, சீப்பு சுவரை மோதி, கடப்பைக்கல் தரையில் விழுந்தது. அவள் தலைமயிரைக் கோடாலி முடிச்சாகப் போட்டுக் கொண்டு அறையிலிருந்து வெளியேறி வீட்டுக்குள் நுழைந்தாள்.

நந்தினியின் அறைக் கதவு மூடியிருந்தது.

''அம்மாடி.. நந்தினி. கதவைத் தொற. அம்மா நந்தினி தொறம்மா'' என்று தடதடவெனக் கதவில் கை வைத்துத் தட்டினாள்.

நந்தினி கதவைத் திறந்தாள்.

''என்ன பாட்டி?''

''இனிமே என்னால இந்த வீட்ல இருக்க முடியாது. என்னை ஏதாவது ஒரு அனாதை ஆசிரமத்துல சேர்த்து விட்டுரு. இந்த வீட்ல எல்லார்கிட்டயும் சொல் விட்டேன். யாரும் கேக்கற வழியாக் காணும்.''

''ஏன் பாட்டி என்ன ஆச்சு?''

''உங்க தாத்தாவோட ரோதனை தாங்கலை'' என்ற பாட்டி, அப்போதுதான் கட்டிலில் இருந்த பாதி பிரிக்கப்பட்டிருந்த அந்த பரிசுப் பொருளைக் கவனித்தாள்.

''அது என்னது?''

''கல்யாணத்தும் போது ப்ரெசன்ட்டா வந்தது...''

''யாருக்கு?'' என்று கேட்டுக் கொண்டே பாட்டி அதைக் கையில் எடுத்தாள். நந்தினியின் பதில் அவளுக்கு வேண்டியிருக்கவில்லை.

பரபரவென்று மேலே சுற்றப்பட்டிருந்த அலங்காரத் தாளைப் பிரித்தாள்.

நந்தினி லேசான படபடப்புடன் பாட்டியின் தோள் வழியே அருண்குமார் என்ன கொடுத்திருப்பான் என்று எட்டிப் பார்த்தாள். பாட்டிக்குத் தாத்தாவுடன் துவக்கிய உலகப் போர் மறந்து போனது.

அது ஓர் அழகான சுவர்ச் சித்திரம். தங்க விளிம்புகளால் கரையிடப்பட்டிருந்தது. சித்திரம் யாரோ ஒரு சிறந்த ஓவியனால் உருவாக்கப்பட்டிருந்தது. சூரிய வெளிச்சம் பிரகாசக் கதிர்களாய் நீண்டு அப்போதுதான் பசுமையான இலைகளைப் பெற்றிருந்த அழகிய மரமொன்றை நனைத்துக் கொண்டிருந்தது. சித்திரத்தில் காலியாக இருந்த இடத்தில் உறுத்தாத மாதிரி ஒரு கவிதை, அழகான எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது.

உளி பொளிந்து
சிதைப்பதால்தான்
சிற்பம் சிறக்கிறது

இலையுதிர்த்த
மரங்களில்தான்
வசந்தம் பிறக்கிறது

இறந்து பெறும்
வாழ்க்கையிலும் ஏதோ
சுகமொன்று இருக்கிறது

(தொடரும்)


## பால் பாசனம்!

ஹாலந்தில் வசிக்க நேர்ந்திருக்கும் என்னை இங்கு நடக்கும் சில காரியங்கள் பிரமிப்பில் ஆழ்த்துகின்றன. விவசாயிகள் தங்கள் பசுக்களுக்கு மாட்டுத் தீவனத்துடன் வெண்ணெய் கலந்து அளிக்கிறார்கள்! பசுக்கள் தங்கள் பாலிலிருந்து பெறப்பட்ட வெண்ணெயைத் தாமே தின்னுகின்றன. காரணம், அந்த அளவுக்கு வெண்ணெய் இந் நாட்டில் உபரியாக உள்ளது!

ஒரு விவசாயி தமது வயலுக்குத் தண்ணீருக்குப் பதில் பாலைப் பாய்ச்சி விட்டார். காரணம், அவருக்கு ஒதுக்கப்பட்ட அளவுக்கு மேல் உபரி பால் உற்பத்தி செய்தால் அவர் லிட்டருக்கு 81 செண்ட் அபராதம் செலுத்த வேண்டிவரும்! பால் விலை குறையாதிருக்க இந்தச் சட்டம். அதனால்உபரி பால் தண்ணீராகப் பாய்ந்தது! இது சட்டவிரோதமில்லை என்று அரசு அதிகாரிகளும், இதனால் சுற்றுப்புறச் சூழலுக்குக் கெடுதல் இல்லை என்று விஞ்ஞானிகளும் கூறி விட்டனர்!

- லக்ஷ்மி அசோக்

# பார்வைகள்



ஸ்ரீதா தலைப் பிரசவத்திற்கு ஊருக்குப் போயிருந்தாள்.

போகுமுன் என் மூக்கு நுனியைப் பிடித்துச் செல்லமாகத் திருகி, ''நான் ஊரிலிருந்து வரும் வரை நல்ல பிள்ளையாக நடந்து கொள்ளுங்கள்'' எனச் சொல்லி விட்டுப் போனாள்.

எப்பவுமே நான் நல்ல பிள்ளைதான். தப்புத் தண்டா சமாசாரம் எல்லாம் எனக்கு வராது.

கல்யாணத்திற்கு முன்பு கூட நான் ஹோட்டலில் சாப்பிட்டது கிடையாது. டேப்ரிகார்டரில் சினிமா பாட்டுக்களைச் சுழல விட்டு நான் பாட்டிற்குச் சமைத்துச் சாப்பிடுவேன். என்னிடம் கிட்டத்தட்ட நூறு காஸெட்டுகள் இருந்தன.

ஸ்ரீதாவிற்கு இரைச்சல் என்றால் அலர்ஜி. அதுவும் திரைப் படப் பாடல்கள் என்றால் முகம் சுளிப்பாள். 'மெதுவா வையுங்கள்... மெதுவா.. இன்னும் மெதுவா' எனச் சொல்லி எரிச்சல் ஊட்டுவாள். நான் பட்டென்று டேப்ரிகார்டரை நிறுத்தி விட்டுப் போய் விடுவேன்.

இப்போது எல்லாம் காலை முதல் மாலை வரை- ஏன், நான் கண்விழித்ததிலிருந்து படுக்கப் போகும் வரை என் காதில் திரைப்படப் பாடல்கள் ஒலித்த வண்ணம் உள்ளன. இந்தச் சூழ்நிலையில்தான் என்னால் எந்த வேலையும் செய்ய முடிகிறது.

ஸ்ரீதாவின் பாஷையில் சொல்லப் போனால் ''ஊக்கடை போல'' டேப்ரிகார்டர் அலறிக் கொண்டிருக்கிறது.

ஸ்ரீதாவிற் குத் துணிக

ளைச் சலவைக்குப் போடுவது பிடிக்காது. தன் துணிகளை ஒரு பொட்டு அழுக்கு இல்லாமல் தானே தோய்த்து உலர்த்தி, பெட்டி போட்டு வைப்பாள். 'எந்தத் தண்ணீரில் தோய்த்து எங்கே உலர்த்து கிறார்களோ? நாம் அப்புறம் டாக்டருக்கு எக்கச்சக்கமாக அள்ளிக் கொடுக்க வேண்டி வரும்!' என்பாள்.

இப்போது அந்தப் பழக்கமும் என்னைத் தொற்றிக் கொண்டு விட்டது. ஹேமா அளவிற்கு அத்தனை 'பவித்'தெனத் தோய்க்கா விட்டாலும் 'பரவாயில்லை' என அவள் ஒப்புக் கொள்ளும் அளவிற்கு நான் தேர்ச்சி பெற்று விட்டேன்.

முதல் நாள் துணிகளை மாடியில் காயப் போடும் போது கவனித்தேன். எதிர் வீட்டுப் பெண் அவர்கள் வீட்டு மாடியில் நின்று என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

பெயர் மாலாவோ, கலாவோ. ஹேமா ஒருமுறை சொல்லியிருக்கிறாள். வயது இருபத்தைந்து இருக்கும். இன்னும் கல்யாணம் ஆகவில்லை. பார்ப்பதற்குத் தாமிரபரணிப் பாசனத்தில் விளைந்து நிற்கும் நெற்பயிர் போல இருந்தாள். நல்ல வாளிப்பு.

இப்படியெல்லாம் இன்னொரு பெண்ணை நான் இலேசாக வர்ணித்தாலும் கூட ஹேமா என்னைப் பொசுக்கி விடுவாள்.

அடுத்தபடியாக நான் அந்தப் பெண்ணை மேலே மோதாத குறையாகத் தெருவில் சந்தித்தேன். நான் தெருக் குழாயில் ஒரு 'பக்கெட்' குடிநீர் பிடித்துக் கொண்டு வந்த போது, தன் வீட்டிலிருந்து அத்தனை அவசரத்துடன் குடமும் கையுமாகத் தெருவில் இறங்கினாள்.

அந்தப் பெண்ணின் அப்பா அம்மா இரண்டு பேரும் வேலைக்குப் போகிறவர்கள். இவள் மட்டும்தான் வீட்டில்...

ஒருநாள் என்றால் ஏதோ யதேச்சையாக நடந்தது எனச் சும்மா இருக்கலாம். ஆனால், தினமும், எப்படி நான் துணி உலர்த்த மாடிக்குப் போகும் போதும், தெருக் குழாயில் தண்ணீர் எடுக்கப் போகும் போதும், சொல்லி வைத்த மாதிரி வருகிறாள்? என்னைப் பார்ப்பதும், திரும்புவதும் தலையைக் குனிந்து கொள்வதும்... சே!

நன்றாகக் கிடந்து அலைகிறாள். ஓர் ஆண் பிள்ளையை, அதுவும் என்னைப் போல் தனிமையிலிருக்கும் ஓர் ஆண் பிள்ளையை இப்படி எல்லாமா சோதிப்பது! உம்...?

பாலாஜி

இது மட்டும் இல்லை... நான் ஸ்கூட்டரில் ஆபீஸ் போகும் போது பஸ் நிலையத்தில் நிற்பாள். என்னைப் பார்த்துப் புன்னகைப்பது போல தெரியும். ஒருநாள் அவள் என்னைக் கூப்பிடுவது போல் இருந்தது. ஸ்கூட்டரை நிறுத்திப் பார்த்தேன். ஒருகால் 'லிப்ட்' கேட்கிறாளோ? சீ! எதற்கு வீண் வம்பு? மறுகணம் 'விர்'ரென்று புறப்பட்டுப் போய் விட்டேன்.

எனக்கு உடம்பெல்லாம் பதறியது. ஹேமா வரும் வரையில் என்னை எப்படிக் காப்பாற்றிக் கொள்ளப் போகிறேனோ தெரியவில்லை.

ஒருநாள், பேப்பர் போடும் பையன் ''ஹிந்து''வை அவர்கள் வீட்டிலும், ''எக்ஸ்பிரஸ்ஸை'' என் வீட்டிலும் போட்டு விட்டுப் போய் விட்டான். நான் வாங்குவது 'ஹிண்டு'. ஓடிப் போய் பேப்பரை எடுத்து வந்தேன். அவள் வீட்டு ஜன்னலிலிருந்து என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துச் சிரித்தாள்!

எனக்குப் பயமாக இருந்தது. எப்போதும் வாயிற் கதவைத் தாள் போட்டு வைத்தேன். என்னையறியாமல் அவள் ஏதாவது சாக்கில் உள்ளே நுழைந்து ஏடாகூடமாக நடந்து விட்டால், அப்புறம் எப்படி வெளியே தலைநிமிர்ந்து நடப்பது?

அதற்காகத் துணி காயப் போடாமல் இருக்க முடியுமா! தண்ணீர் எடுக்கப் போகாமல் இருக்க முடியுமா? எப்போது போனாலும் அவள் இருக்கிறாளே!

பேசாமல் ஒரு மாதம் லீவு போட்டு விட்டு ஊருக்குப் போனால்...? ஹேமா சந்தோஷப்படுவாள்.

அன்று மாலை நான் வீடு திரும்பிய போது ஒரு பெரிய நிம்மதி. எதிர் வீடு பூட்டப்பட்டிருந்தது. காலி செய்து விட்டார்கள் என்று அக்கம் பக்கத்தில் சொன்னார்கள். அப்பா, இனி என்னுடைய நல்ல பிள்ளை 'இமேஜ்' காப்பாற்றப்பட்டு விடும்.

நான்கு மாதங்கள் கழித்து -

ஹேமா திரும்பி விட்டாள். அவளைப் போல ரோஜா மலரையொத்த அழகான பெண் குழந்தையுடன்.

அன்று குழந்தைக்குத் தடுப்பு ஊசி போட அவளையும் குழந்தையையும் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப் போயிருந்தேன்.

அங்கே அந்த எதிர் வீட்டுப் பெண்ணின் அம்மா வந்திருந்தாள். ஹேமாவும் அவளும் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

வீடு திரும்பியதும் ஹேமாவிடம் நடந்ததைச் சொல்ல வேண்டும். அப்பப்பா... நான் பட்ட அவஸ்தை.

ஆனால் வீடு திரும்பும் வழியில் தோ என்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேச வில்லை. முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டிருந்தாள்.

வேண்டும் என்றே இரட்டை அர்த்தத் தில் தொனிக்கும் சினிமாப் பாட்டுக்களை டேப்ரிகார்டரில் அலற விட்டது. வெறும் துண்டை மட்டும் இடுப்பில் சுற்றிக் கொண்டு மொட்டை மாடியில் துணியைக் காயப் போடப் போனது! அந்தப் பெண் ணைப் பார்க்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு நாளும் தெருக் குழாயடியில், தெருவில், 'ஜொள்ளு' விட்டுக் கொண்டு அலைந்தது. பஸ் ஸ்டாண்டில் ஸ்கூட்ட ரைக் கொண்டு வைத்துக் கொண்டு இளித் தது. ஒருநாள் பெண்ணின் பெற்றோர்கள் இல்லை எனத் தெரிந்து கொண்டு அசட்டுத் துணிச்சலுடன் வீட்டு வாசற்படியை மிதித்து விட்டுத் திரும்பி விட்டது.

''ரொம்ப மோசம் அம்மா. உன் வீட்டுக் காரர். ஏதாவது ஏடாகூடமாக நடந்து விட் டால் அப்புறம் என் பெண்ணின் கதி...? அதனால்தான் நாங்கள் வீட்டை மாற்றிக் கொண்டு போய் விட்டோம்!'' என்று குறைப்பட்டுக் கொண்டாளாம் அந்தத் தாய்.

''இத்தனை கேவலமாக நீங்கள் போவீர் கள் என நான் நினைக்கவில்லையே...'' எனப் பெரிதாக அழ ஆரம்பித்து விட்டாள் தோ.

அந்தப் பெண்ணின் ஒவ்வொரு அசை வையும் நான் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்த சமயம், அவள் என் பார் வையை அதைவிட மோசமாகக் கணித் திருந்தது தெரிந்தது.

நான் குன்றிப் போனேன்.

## நாடோடித் தென்றல்

இடைவேளையில் பேசிய போது, ''கமர் ஷியலாக எடுத்தாலும் இது ஒரு எக்ஸ்பரிமெண்ட்'' என்றார் இயக்குனர் பாரதிராஜா. வாஸ்தவமான பேச்சு.

1. காலம் காலமாக இடம்பெற்று வந்துள்ள முக்கோணக் காதலே மீண்டும் அடித் தளமாக அமைந்திருப்பது.

2. சுதந்திரத்துக்கு முந்திய காலத்தைக் கதை யின் பின்னணியாகக் கொண்டு சில ஆங்கிலேயர் களையும் ஒரு பிரெஞ்சுப் பெண்ணையும் கதை நெடுகிலும் இடம்பெறச் செய்திருப்பது.

3. படம் முழுவதும் அவர்களைக் கொச்சை யாகப் பேச வைத்துத் தமிழைக் குதறித் தள்ளாமல், சரளமாக அவர்கள் பாணியிலேயே ஆங்கிலத்தில் பேச வைத்திருப்பது.

4. இந்தத் தலைமுறையினருக்குக் கொஞ்சம் கூடப் பரிச்சயமில்லாத ஒரு காலகட்டத்தைச் சேர்ந்த ஆடையணிகள், பழக்க வழக்கங்கள், அரசியல் ஆதிக்கம், வாகனங்கள் இத்யாதி இடம்பெற்றிருப் பது - பரிசோதனைதான்.

அங்கங்கே தென்படும் இயக்குனரின் கவிதைநயம் நிறைந்த கற்பனை...

- எழுத்தாளர் சுஜாதாவுக்கே உரித்தான, இயல் பான, மெலிதான நகைச்சுவை வசனங்கள்...

அந்த நகைச்சுவைக்கு மெருகேற்றிப் பரிம ளிக்கச் செய்யும் துளிபாஷி ஜனகராஜ்...

நாடோடிப் பெண்ணாக ரஞ்சிதா...

கல்லூரி டிராப் -அவுட்டாகப் பொற்கொல்லர் தொழிலுக்கே திரும்பி விடும் பொறுப்பற்ற - விளை யாட்டுத்தனம் நிறைந்த இளைஞர் கார்த்திக்...

பிரிட்டிஷ் ஆதிக்க மனப் பான்மையின் பிரதி பலிப்பாகக் கலெக்டர் சிச்சர்ட்...

தமிழ் இளைஞன் மீது மனமுருகிக் காதல் கொள்ளும் அவருடைய சகோதரி கிருபா...

கர்நாடக ராகங்களில் அமைந்த சில சுகமான பாடல்கள்...

இப்படி ஒவ்வொன்றுமே ஒவ் வொரு வருமே தனித்தனிப் பிளஸ் பாயிண்டுகள்.

இவை ஒட்டுமொத்தமாகச் சேரும் போது. இயக்குனர் கூறி யதைப் போல இது ஒரு பரி சோதனை மட்டுமல்ல. பரீட்சையும் கூட. விஷப் பரீட்சை!

- சி. ஆர். கே.



# கிரிக்கெட் வீரர் நேரு!

சமீபத்தில் மக்களவை மற்றும் மாநிலங்கள் அவை அணிகளுக்கிடையேயான கிரிக்கெட் மாட்ச் டெல்லியில் நடந்தது... நேரு காலத்தில் நடந்த கிரிக்கெட் மாட்ச் பற்றி சுர்ஜித் சிங் மஜிதியா (Surjit Singh Majithia) நினைவுகூர்கிறார் :



பிரதமர் உதவி நிதிக்குப் பணம் திரட்டும் பொருட்டு பிரதமர் அணிக்கும் துணை ஜனாதிபதி அணிக்கும் இடையே கிரிக்கெட் மாட்ச் - டெல்லி நாஷனல் ஸ்டேடியமில்.

நேரு டாஸ் வென்றதும், பாட் செய்ய முடிவெடுத்தார். அவர் அணியில் ஆடிய நான் நன்றாக ஆடி, சதம் அடித்தேன். உணவு இடைவேளையின் போது, 'இன்னும் அரை மணி நேரம் ஆட எனக்கு வாய்ப்புக் கொடுங்கள்; நாம் ஜெயிப்பதற்குப் போதுமான ரன்கள் எடுத்து விடுகிறேன்' என்று பண்டிட்ஜியிடம் சொன்னேன்.

''ஜயிப்பதற்காகவா நாம் இந்த மாட்ச் ஆடுகிறோம்...!'' என்று பட்டென பதில் சொன்னார் பண்டிட்ஜி. எனக்கு அதற்குப் பிறகு பாட்டிங் வாய்ப்புத் தரவில்லை.... தனிநபர் சாதனையும் வெற்றியும் இரண்டாம் பட்சம்; ஆட்டத்தின் ஜீவனைக் காப்பதும், எல்லோருக்கும் வாய்ப்பு அளிப்பதுமே முக்கியம் என உணர்த்தினார்.

உணவு இடைவேளை முடிந்து ஆட்டம் தொடங்கிய போது, ஜவாஹர்லால்ஜியும் எதிர்க்கட்சித் தலைவர் ஏ. கே. கோபாலனும் பாட் செய்ய ஆரம்பித்தார்கள். பந்தை அடித்து விட்டு பண்டிட்ஜி ரன் எடுக்கப் பாதி தூரம் வந்து விட்டார். ஆனால் கோபாலன் அசைந்து கொடுக்கவில்லை! இதற்கிடையே, ஃபீல்ட் செய்யப்பட்ட பந்து விக்கெட் கீப்பர் கைக்கு எட்டியிருந்தது. விதிப்படி, பந்தால் பெயிலைத் தட்டி நீக்கினால்தான் பாட்ஸ்மன் 'அவுட்' ஆக முடியும். விக்கெட் கீப்பராக விளங்கிய துணை அமைச்சர் ஷா நவாஸ் கானோ பெயிலைத் தட்டாமல் சும்மா நின்றார்!

ஆனால் ஜவாஹர்லால்ஜி தாம் அவுட் ஆகி விட்டதாகப் பிடிவாதமாகக் கூறினார். அப்படியும் விக்கெட் கீப்பர் வேண்டுமென்றே 'பெயிலை' நீக்காமல் இருப்பதைப் பார்த்து விட்டு, ''நான் டிக்ளேர் செய்கிறேன்'' என்று அறிவித்து விட்டார்!

இதே பந்தயத்தில் எங்கள் அணி ஃபீல்டு செய்து கொண்டிருந்த போது, கேஷவ் தேவ் மாளவியா பாட் செய்ய வந்தார். கவர் பாயின்டில் ஃபீல்ட் செய்து கொண்டிருந்த பண்டிட்ஜியைச் சற்று பின்னால் நகர்ந்து நிற்கச் சொன்னேன். நான் எதிர்பார்த்தபடியே மாளவியா ஒரு 'லட்டு' காட்ச் கொடுக்க

ஜவாஹர்லால்ஜி அதை இருந்த இடத்தில் இருந்தபடி அழகாகப் பிடித்தார்! கூட்டம் ஆரவாரம் செய்தது.

சிறிது நேரம் கழித்து, பார்வையாளர்களிடையே அமர்ந்திருந்த இந்திராஜியிடமிருந்து எனக்கு ஒரு சிறிய குறிப்பு வந்தது. 'அப்பாவுக்கு வயதாகி விட்டது. அவர் விளையாடியது போதும்; அவரை உள்ளே அனுப்புங்கள்' என்று அதில் எழுதியிருந்தது.

பண்டிட்ஜியிடம் சென்று, அவர் உள்ளே போய் ஓய்வெடுக்கலாம் எனக் கூறிய போது மறுத்து விட்டார்.

சில நிமிட இடைவெளிக்குள் இந்திராஜி மேலும் இரண்டு முறை சீட்டு எழுதி அனுப்ப, நான் மீண்டும் மீண்டும் பண்டிட்ஜியை உள்ளே செல்லும்படி வேண்ட, பொறுமை இழந்த அவர், ''இந்த அணிக்கு யார் காப்டன்?'' என்று காரமாகக் கேட்டார்.

''நீங்கள்தான் பண்டிட்ஜி'' என்றேன்.


''அப்படியானால் பேசாமல் போய் உன் இடத்தில் நில்'' என்றார் பண்டிட்ஜி!

இங்கிலாந்து அணி, 1964 இல், இந்தியாவுக்கு வந்தது. வழக்கமாக பண்டிட்ஜியை மாட்ச் பார்க்க அழைக்கும் நான் இம்முறை அவர் உடல்நலக் குறைவு கருதி அழைக்கவில்லை. இருந்தாலும் அவர் வர முடியாதது எனக்குப் பெரிய குறையாகப் பட்டது. அதை எங்கள் பொது நண்பர் டாக்டர் சென்னிடம் தெரிவித்தேன். அவர் மூலம் என் மனநிலை அறிந்த பண்டிட்ஜி தாமே போன் செய்து டெல்லி டெஸ்ட் மாட்ச் பார்க்க வரப் போவதாகக் கூறினார். ஆரம்ப தினத்தன்று வந்தவர் ஒரு மணி நேரம் ஆட்டத்தைப் பார்த்தார்.

''கர்நீத், எனக்குச் சோர்வாக இருக்கிறது; போய் வருகிறேன்'' என்று விடைபெற்றுச் சென்றார்.

இந்தச் சம்பவம் பிப்ரவரியில் நடந்தது. சில மாதங்களில் (மே) நேரு மரணமடைந்தார்.

நன்றி : ஹிஸ்துஸ்தான் டைம்ஸ்



## ஆடு குதிரை அல்ல; ஓடு குதிரை!

குதிரை ஓட்டப் பழக வேண்டுமென்றால் நிஜ குதிரை ஏறி, விழுந்து அடிபட்டுக் கொள்ளத் தேவையில்லை. இந்தக் குதிரை இயந்திரத்தின் மேல் ஏறி ஓர் உதை விட்டால் பொம்மைக் குதிரை, 'நடக்க' ஆரம்பிக்கும். அதாவது குதிரை நடக்கும் போது என்னென்ன அசைவுகள் உண்டோ அத்தனையும் ஏற்படும். இன்னொரு உதை - குதிரை வேகம் பெறும்; இன்னொரு உதை கொடுத்தால் ஒரே 'ஓட்டம்'தான். நின்ற இடத்திலேயே குதிரையின் பல்வேறு வேக அசைவுகளை நமது உடல் பெற்றுப் பழகிக் கொள்வதால் பிறகு நிஜ குதிரை ஏற்றும் எளிதாகிறது. இதே நேரத்தில் குதிரையின் வேகத்துக்கு ஏற்ப எதிரே உள்ள திரையில் சாலைச் சினிமாவும் ஓடுவதால் கிட்டத்தட்ட நிஜமான குதிரைச் சவாரி அனுபவமே கிடைத்து விடுகிறது!

- ஜப்பான் பிக்டோரியல்

சுமார் பத்து ஆண்டு காலமாகக் கடிதம் மூலம் மட்டுமே நண்பராக இருந்து வந்த துபாய், ஜெகபர் அலி என்ன காரணத்தினாலோ இரண்டு ஆண்டுகளாகக் கடிதம் எழுதவில்லை. ஒரு வாழ்த்துக் கூட அனுப்பவில்லை. அன்பான நண்பர் மீண்டும் என்னுடன் இனிய நட்பினைத் தொடரக் கோருகிறேன். துபாய் நண்பர்களிடம் இதற்கு உதவி வேண்டுகிறேன்.

நண்பர் முகவரி :

- M.S. Jahabar Ali,
Post Box 854,
H.Q. Tank Central Command,
Dubai - UAE.

- P. Murthi,
83, Bashyam Nagar,
Sri Ramapuram,
Bangalore - 560 021.
S. INDIA.

## கல்வியில் ஆர்வம்

# ஹலோ நண்பரே!

ICWA படிப்பை மேற்கொள்ளச் சிந்திக்கும் எனக்குப் படிப்பு விவரங்களும் எதிர்கால வாய்ப்புக்களும் அறியத் துடிப்பு.

- ஜே.டி. சுரேஷ்,
46 - A, புது அக்ரஹாரம்,
திண்டுக்கல் - 624 001.

ICS (IPS, IRS, IAS) தேர்வு எழுத விண்ணப்பித்துள்ளேன். கடினமான தேர்வு பற்றி விவரம் அறிந்தவர்களுடனும், பொருளாதாரம் பொது அறிவு சம்பந்தமான புத்தகங்கள் உதவக் கூடியவர்களுடனும் தொடர்பு கொண்டு பயன் பெற ஆர்வம்.

- லலிதா,
18, பாண்டியன் தெரு,
சுப்பிரமணியபுரம்,
திருச்சி - 620 020.

CA அல்லது MBA படிக்க விரும்புகிறேன். இப்போது B.Sc., கணிதம் முதலாமாண்டு படிக்கும் போதே அதற்கும் என்னைத் தயாராக்கிக் கொள்ள விருப்பம். எனவே மேற்படி துறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு உதவக் கோருகிறேன்.

- R. Nagarajan,
I B.Sc. (Maths)
S.R.K.V. Arts College Hostel,
Coimbatore Dt. - 641 020.


## மணமகள் தேவை

கணவரை இழந்த அல்லது விவாகரத்துப் பெற்ற, பட்டப்படிப்பு முடித்த மணமகள் தேவை. சாதி மத பேதமில்லை. வரதட்சிணையும் தேவையில்லை.

- எம். மாரிமுத்து,
செயலாளர்,
மதுரை நகர் இளைஞர் காங்கிரஸ்,
ஸ்ரீ ரெங்கா லாட்ஜ்,
83 C, தெற்கு மாசி வீதி,
மதுரை - 625 001.

## நாடக விருந்து

சேஷசாயி காகித ஆலைக் காலனியில் வெற்றிகரமாக இயங்கி வருகிறது சிவரஞ்சனி நாடகக் குழு. ரசிகர்களின் கண்களுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் வண்ணம் பல நாடகங்களை அரங்கேற்றி, பல பரிசுகள் பெற்றுப் பெருமையடைந்துள்ளோம். நாடகம் ஏற்பாடு செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ள முகவரி :



# பாலம்

- எம். சுப்பிரமணியம்,
186 B, எஸ்.பி.பி. காலனி
ஈரோடு - 638 010.

## விகடன், கதிர் இதழ்கள்

1951, 52 - ல் வெளியான ஆனந்த விகடன் பிரதிகளும் 52, 54, 56 தினமணி கதிர் இதழ்களும் தேவை. அன்பர்கள் யாரிடமேனும் இருந்தால் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

- எஸ். சீனிவாசன்,
3, திரு.வி.க. தெரு,
பைபாஸ் ரோடு,
மதுரை - 625 016.

---

பாலம் பகுதி மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி பொறுப்பேற்க இயலாது.

உத்திரத்தின் மேல் தடிமனான இரும்புச் சங்கிலியால் தன்னைக் கட்டியிருப்பது போல் தெரிந்தது தேவகிக்கு. இப்படிப் பல நாட்களாகத் தன்னைக் கட்டியிருப்பது போல் தெரிந்தது. தன்னை யார் இப்படி கட்டிப் போட்டார்கள் என்று அவளுக்குத் தெரியவில்லை. பெரிய கறுப்பு உருவம் தன்னிடம் நெருங்கி வருவது போல் தெரிந்தது. தலையில் பெரிய கொம்புகளுடன், யானைத் தந்தம் போன்ற பற்களுடன் அந்த உருவம் நெருங்கி வந்தது. தான் ஆபத்தில் இருக்கிறோம் என்பதை உணர்ந்த தேவகி, 'காப்பாற்று... காப்பாற்று,' என்று கூக்குரல் இடுகிறாள். அந்தக் குரல் வீட்டைக் கடந்து, மரம், செடி, கொடி, கோயில், குளம், ஆகாயம் என்று ஒலித்தது. உதவிக்கு யாரும் வரவில்லை. ஏன்? உலகில் மனிதர்கள் யாரும் இல்லையா? கத்திக் கத்தித் தொண்டைக் குழி வறட்சியாகிறது. 'தண்ணி, தண்ணி...' என்று கத்துகிறாள். அந்தச் சமயத்தில் ஏதோ ஆலயமணி போல் டாண்... டாண் என்று சப்தம் வருகிறது. ''ஆ... பரிச்சயமான சப்தமாய் இருக்கிறதே!'' என்று உடலை அசைத்துத் திரும்புகிறாள் தேவகி.

கனவு கலைந்தது. பக்கத்து வீட்டுச் சுவர்க் கடிகாரம் பன்னிரண்டு முறை மணி அடித்து ஓய்ந்தது. அந்த மணி சப்தத்தால் தான் தேவகியின் கனவு கலைந்தது. ஒரு நிமிஷம் உடல் குலுங்கி வியர்த்தது.

இனி தூக்கம் நாளைதான். தன்னை இரண்டாம் தாரமாகப் பெண் பார்த்து விட்டுப் போனதிலிருந்து இப்படித்தான். அவர்களுக்கு இன்னும் முடிவு சொல்லவில்லை; அப்பா அவள் பதிலுக்காகக் காத்திருக்கிறார். இதே நினைவுகளில் படுப்பதால் கனவு வருகிறது. இடையில் விழிப்பு வந்தால், அதன் பிறகு பல்வேறு நினைவுகள்... கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் என்று தன்னைப் பற்றி அதிகம் கவலை கொண்டாள்.

- அதன் பிறகு நெஞ்சுக்குள் முகம் புதைத்து வெறுமென கண்களை மூடிக் கொண்டிருப்பாள். விடிந்ததும் தூக்கமின்மையால் கண் காந்தலாக எரியும். உடல் அசதி எல்லாம் சேர்ந்து அலுவலகத்தில் மின்விசிறி காற்றின் கீழ் தூக்கத்திற்கு ஏங்கித் தவிக்கிற கண்களுடன் முகத்தை வைத்திருக்க நேரிடும்.

மெதுவாக எழுந்து ட்யூப் லைட்டைப் போட்டாள் தேவகி. பெரிய தங்கை லதா புரண்டு வசம் மாறிப் படுத்தாள். சின்னவள் கோமதி தாவணி விலகப் படுத்துக் கிடந்தாள். அவளிடமிருந்து லேசான குறட்டை ஒலி வந்து கொண்டிருந்தது. தம்பியும், அப்பாவும் பக்கத்து ரூமில் படுத்திருந்தார்கள். அப்பாவிடமிருந்து வரும் இருமல் சப்தம் கொஞ்சம் குறைந்திருந்தது. சின்னவளின் தாவணியைச் சரி செய்து விட்டுச் சமையல் அறை சென்று, ஒரு தம்ளர் தண்ணீர் குடித்துத் திரும்ப வந்து படுத்தாள். படுத்த இரண்டு நிமிஷங்களில் கனவு தொடர்வது போலிருந்தது. திரும்ப எழுந்து மேஜையில் கிடந்த ஒரு நாவலை ஏற்கெனவே விட்ட இடத்தில் இருந்து படிக்க ஆரம்பித்தாள். படிப்பில் முழு கவனம் இல்லை. மனம் கட்டிலிருந்து அவிழ்த்து விட்ட கன்று போல் தறிக்கெட்டு ஓடியது. திரும்பவும் புத்தகத்தை மூடி விட்டு, விளக்கை அணைத்து விட்டு ஸ்டூல் சேருடன் வாசலுக்கு வந்து உட்கார்ந்தாள்.

# கலைந்த

பௌர்ணமி ஆனதால், சந்திரன் ஜொலித்துக் கொண்டிருந்தான். சந்திரனைச் சுற்றி வண்டிச் சக்கரம் அளவிற்குக் கோட்டை கட்டியிருந்தது. அதில் உள்ள நட்சத்திரங்களை எண்ணலாம் என்று நினைத்தாள் தேவகி. தூக்கம் வருவதற்கு நட்சத்திரங்களை எண்ணும் முறையைக் கொஞ்ச நாட்களாகவே கடைப்பிடித்து வந்தாள். ஒண்ணு... ரெண்டு... மூணு... என்று வாய் விட்டு எண்ணிக் கொண்டே இருந்தாள். ஒரு நட்சத்திரம் பார்வையில் இடையில் புகுந்து எண்ணிக்கையைத் தப்பாக்கியது. திரும்ப எண்ணினாள் - தப்பாகியது.

நட்சத்திரத்தைப் போல் தன்னைப் பெண் பார்க்க வந்து போனவர்களை நினைவில் கொண்டு வந்து எண்ண ஆரம்பித்தால் அது கூட தப்பாகும் அவளுக்கு. முப்பத்திரண்டு வயதில் இதுவரை ஐம்பதுக்கு மேற்பட்ட மாப்பிள்ளைகளாவது வந்து பார்த்து, பஜ்ஜியையும், காப்பியையும் சாப்பிட்டுப் போயிருப்பார்கள். கடைசியாகப் போன வாரம் வந்த கும்பகோணத்து மாப்பிள்ளை, இரண்டாம் தாரமாகக் கேட்டு வந்தார். பத்து வருஷமாகக்

# கனவுகள்

குழந்தை பாக்கியம் இல்லாமல் கடைசி ஐந்து வருஷ காலத்திற்குள் ஐந்து வயதிலும், மூன்று வயதிலும் இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றுப் போட்டு புற்றுநோயால் செத்துப் போன மனைவிக்குப் பதில், பிள்ளைகளின் நலன் கருதித் திருமணத்திற்கு நிற்கிறார்.

அவரைப் பார்த்ததும் தேவகிக்குச் கசந்தமாகப் பிடிக்கவில்லை, அரசாங்கக் கடைநிலை ஊழியராக வேலை. நாற்பது வயதை எட்டியிருந்தார். முன் தலை லேசான வழுக்கையுடன், கன்னம் ஒட்டிப் போய் வெற்றிலைக் காவி படிந்த பல்லுடன் இருந்தார். ''உங்க பெண் வேலைக்குப் போகணுங்கிற அவசியம் இல்ல, என் சம்பளம் போதும். அது விருப்பப்பட்டா வேலைக்குப் போகட்டும். சம்பளத்துல சல்லிக் காசு எனக்கு வேண்டாம். மாசா மாசம் உங்களுக்கே அனுப்பச் சொல்லிடுறேன்...'' என்று அவர் அப்பாவைப் பார்த்துச் சொன்ன போது, அப்பாவின் முகத்தில் ஏற்பட்ட மலர்ச்சியையும், பல் தெரியாமல் சிரிக்கும் கன்ன அசைவுகளையும் கண்டு துணுக்குற்றாள் தேவகி. இதை அப்பாவால் எப்படி ஏற்றுக் கொள்ள முடிகிறது?

அன்று லதா கம்பெனிக்குப் போயிருந்தாள். ''அக்கா... இவரு வேண்டாங்கா ரொம்ப வயசானவராத் தெரியறார் நீ ஒத்துக்காதே!'' என்ற இரண்டாவது தங்கை கோமதியை உற்றுப் பார்த்தாள் தேவகி. அவள் கண் கரு விழிகளில் நீர் ததும்பி வெளியே வரக் காத்திருந்தது! தாவணியை வாயில் வைத்துக் கொண்டு லேசாகத் தேம்பினாள். தம்பி ஸ்கூல் போயிருந்தான். அவன் இருந்தால் இந்தச் சூழ்நிலையில் எப்படி இருப்பான் என்று நினைத்துப் பார்க்க முடியவில்லை அவளுக்கு.



தேவகிக்குச் சட்டென்று தன் அலுவலக ஊழியர் பாஸ்கர் நினைவில் வந்தான். சும்ப கோணத்து மாப்பிள்ளை, பாஸ்கர் போல் இருந்தால் கூடப் பரவாயில்லை என்று நினைத்தாள்.

எல்லாத் தரப்பட்ட ஊழியர்களுக்கு மத்தியில் பழகும் போது... பாஸ்கரின் கண்ணியமான அணுகுமுறை அவளுக்குப் பிடித்திருந்தது. ஆனால் திடீரென்று நேற்று அவன் நடந்து கொண்டவிதம் அவனின் சுயரூபத்தை நன்றாக எடுத்துக் காட்டுவது போல் தெரிந்தது. ''எவ்வளவு நாளைக்குத்தான் இப்படி உன்னை நீயே அழிச்சிக்கிட்டு இருப்பே, உன்னை நெனைச்சா எனக்குப் பாவமாக இருக்கு. நீ விருப்பப்பட்டா தனியா டவுவில் ஒரு வீடு பார்த்து உன்னை வைத்துக் கொள்கிறேன். என்னா....

## மங்கையர் மலர்

### மே '92 இதழில்...

●● கோடை டிப்ஸ்

●● சிறுநீர்ப் பாதைத் தொற்று பெண்களையே அதிகம் பாதிப்பது ஏன்?

●● வேலைக்குச் செல்லும் பெண், குழந்தை வளர்க்க முடியாதா?




கல்யாணத்திற்கு என் வீட்டுக்காரி சம்ம திக்க மாட்டா என்ன சம்மதமா? நல்லா யோசிச்சிக் காலையில முடிவச் சொல்லு, உன் முடிவை நேர்ல சொல்ல வேண்டாம். இந்தக் கவர்ல ரெண்டு வளையல் இருக்கு. கையில போட்டு வா! நா புரிஞ்சுக்கிறேன்'' என்று வளையலை அவள் மேஜையில் வைத்து விட்டு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் பாஸ்கர்.

பாஸ்கரின் திடீர்ச் செய்கை, அவளுக் குக் கோபத்தை உண்டாக்கியது. அவனை முறைத்தாள். அவன் தலைகுனிந்தான். அவள் கண்களில் நீர் முட்டிக் கன்னத்தில் இறங்கியது. சட்டென்று சுற்று முற்றும் பார்த்தாள். கவரை வேகமாகக் குப்பைக் கூடையில் தூக்கி எறிந்தாள். அன்று முழு வதும் பாஸ்கரை அவள் நேருக்கு நேர் பார்க்கவில்லை.

கறுப்பு மேகம் ஒன்று ஊர்ந்து வந்து சந்திரனை மறைத்தது. குப்பென்று இருட் டானது. தெரு நாய் குரைத்தது. தெருவின் அமைதியும், தனிமையும் அவளுக்குப் பயத்தை உண்டாக்கின. அறையிலிருந்து அப்பாவின் இருமல் சப்தம், அவளுக்குத் துணையாக வந்தது. பத்து நாட்களாக உடல்நிலை சரியில்லாமல் படுத்தபடியே கிடந்தார் அப்பா. தேவகிதான் தனியார் டாக்டர் ஒருவரிடம் அழைத்துப் போய்க் காண்பித்துக் கொஞ்சம் கொஞ்சமாக அவர் உடம்பைத் தேற்றினாள். அப்பாவுக்கு அதிகக் கவலை வந்து விட்டது. தம் பெண் களை நிர்க்கதியாய் விட்டு விட்டுச் செத்து டுவோம் என்ற பயம் அதிகரித்தது. அம்மா இருந்த போது அவரிடம் இருந்த சுறு சுறுப்பும், பலமும், செயல்திறனும் சுத்த மாகக் குறைந்து விட்டன.

தேவகி வேலைக்குச் சேர்ந்த இருபத் திரண்டு வயதில்... அரசுப் பணியிலுள்ள என்ஜினியருக்குக் கூடப் பெண் கேட்டு வந்தார்கள். குடும்ப நிலை கருதி அப்பா தான் அடுத்த வருஷம், அடுத்த வருஷம் என்று நாட்களைத் தள்ளிக் கொண்டே போனார். அவரின் இயலாமை அவரை மௌனமாக்கியது. அடுத்தடுத்த பெண் களை நினைத்து எல்லா பாரத்தையும் தேவகியின் தலையில் வைத்தார். லதா ஒரு பிரைவேட் கம்பெனியில் டைப்பிஸ்டாக வேலைக்குச் சேர்ந்து, மாதம் அறுநூறு ரூபாய் கொண்டு வந்த பிறகுதான் தேவகி யின் கல்யாணப் பேச்சை எடுத்தார்.

ஒரு பொறுப்பான தாய் இல்லாத குடும்பம் எப்படி இயங்கிக் கொண்டிருக் கிறதென்பதை தேவகியால் நன்கு உணர முடிந்தது. யாராவது பெண் பார்க்க வந்தால் கூட தன்னை உற்சாகப்படுத்த, அலங்காரம்

செய்ய, ''ஏண்டி நேரம் ஆயிட்டுது பாரு... இப்படி மசமசன்னு உட்கார்ந்திருக்கியே! மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்து விடுவார்கள் சீக்கிரம்... சீக்கிரம்,'' என்று உரிமையில் கோபிக்க, திட்ட, செல்லமாக முதுகில் ஒரு தட்டுத் தட்ட, ஓர் அம்மா இல்லையே! என்று அவளுக்கு அழுகையாக வரும்! வழக்கமாக மாப்பிள்ளை வரும் போது, அப்பா வந்து முதல் நாளே சொல்லி விடுவார். தேவகி அன்று ஒரு நாள் அலுவலகத்திற்கு விடுப்பு எடுத்துக் கொண்டு தங்கி விடுவாள். ப்ளஸ் டூ படிக்கும் கோமதிதான் தலைவாரி பூ வைப்பாள். கூடத்திற்கு வரும் போது தன்னைத் தோள் பிடித்து அணைத்து வர துணையில்லாமல் காப்பித் தம்ளர் அடங்கிய தட்டுடன் தனியே வருவாள்.

- உடன் பெரிய தங்கை லதா வந்தால் அவளைப் பார்த்து, ''இவதான் பெண்ணா... அதுக்கு இது நல்லாயிருக்கே! இதுன்னா முடிச்சுக்குவோம்'' என்று கேட்டு மூன்று, நான்கு வரன் பாதியிலே போய் விட்டார்கள். அதனாலேயே லதா அலுவல கம் சென்று விடுவாள்.

கறுப்பு மேகம் சந்திரனைக் கடந்து, திரும்ப நிலவு பிரகாசமானது. அந்த நேரத்தில் பிள்ளையார் கோவில் சந்திலிருந்து ஓர் உருவம் நடந்து வருவது தெரிந்தது. நெருங்க, யார் என்று உற்றுப் பார்த்தாள் தேவகி. தம்பி சுதாகர். இரண்டாம் காட்சி சினிமா பார்த்து வருகிறான் என்று நினைத்தாள். பி.எஸ்.ஸி. சுவாலஜி படித்திருந்தாலும், தன்னை விட ஐந்து வயது குறைவானவன். வேலைக்காக அலைந்து கொண்டிருக்கிறான். ''என்ன தேவகி தூக்கம் வரலையா?'' என்று கேட்டுக் கொண்டே நடந்து கொண்டிருந்தான். இந்தத் திடீர்க் கேள்வி அவளுக்குள் ஒருவித பயத்தை உண்டுபண்ணியது. சென்றவன் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றான். ஏன் இது மாதிரி பார்த்துக் கொண்டே செல்கிறான் என்று மனசுக்குள் கேட்டுக் கொண்டாள். சட்டென்று உடலுக்குள் உஷ்ணம் பாய்ந்து சிலிர்த்துக் கொண்டாள். உடம்பு முறுக்கேறி, கைகளை உயரே தூக்கி, உடம்பை வளைத்து, ''அய்யய்யோ'' என்று மனசுக்குள் கத்தினாள்.

அவளின் செய்கை அவளுக்கே அருவெறுப்பை உண்டாக்கியது. பாஸ்கர் நினைவில் வந்தான். ஆபீஸில் அவன் நடந்து கொண்ட விதத்தை இப்போது நினைத்த போது அவன் மேல் இரக்கம் வந்தது. தன் முதிர்ச்சியான உடம்பும், தலையில் லேசாகத் தோன்ற ஆரம்பித்திருந்த வெள்ளையும்தான் தன் மேல் அவனுக்கு ஒருவித அனுதாபத்தை ஏற்படுத்தியிருக்குமோ...? என்று நினைத்தாள்.

ஒரு கற்பனையான குடும்பத்தைத் தனக்கென்று ஏற்படுத்திக் கொண்டு மனக் கண்ணில் பார்த்தாள். திடீரென்று தனக்கு அழகு வந்து விட்டது போல் நினைத்தாள். மனசின் பாரம் குறைந்து, புதிய உற்சாகம் பிறந்து, அவளுக்குப் பிடித்த திரைப்படப் பாடலை முணுமுணுத்தாள். எங்கேயோ சாமக் கோழி கூவியது. அவளுக்குக் குளிர்வது போல் இருந்தது. இனியாவது கிடைக்கும் கொஞ்ச நேரத்தில் அந்தக் கற்பனைச் சுகத்திலேயே நிம்மதியாகத் தூங்குவோம் என்று நினைத்துக் கொண்டே நாற்காலியைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்து விளக்கைப் போட்டாள் தேவகி.

லதா படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கண்ணைக் கசக்கிக் கொண்டிருந்தாள். ''ஏண்டி தூங்கலை?'' என்று கேட்டாள் தேவகி.

''இல்லக்கா ரொம்ப நாளா இப்படித்தான்... பாதி ராத்திரியில விழிப்பு வந்தா, அப்புறம் தூக்கம் வர மாட் டேங்குது...'' என்ற தங்கையை அதிர்ச்சி யுடன் ஏறிட்டுப் பார்த்த தேவகி, விடிந்ததும் அந்தக் கும்பகோணத்து மாப்பிள்ளைக்கு விருப்பம் தெரிவித்து அப்பாவைக் கடிதம் எழுதச் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

---

உலக அளவில் இந்தியா எதெதில் எந்தெந்த இடம் வகிக்கிறது? பண்ணைக் கால்நடைத் தொகையில் முதல் இடம். ஆனால் பால் உற்பத்தியிலோ நாலாவது இடம்தான். நிலக்கடலை, டீ விளைச்சலில் உலகிலேயே முதலிடம் நமக்குத்தான். இதுதவிர நமக்கே உரிய சினிமா, முழுநீள சினிமா படத் தயாரிப்பில் நாமே முதல். தரிசு நிலம் அதிகம் இருப்பதில் மூன்றாம் இடம். காரணம், உழவு டிராக்டர்கள் உபயோகிப்பதில்தான் பதினாலாம் இடத்தில் இருக்கிறோமே!

மருத்துவ வசதியில் 8 ஆம் இடம், மின் உற்பத்தியில் 11-வது இடம், விமானப் போக்குவரத்தில் 14-வது. எனப் பல பின்தங்கல்கள். மக்கள் தொகையில் பிரும்மாண்டமாக இரண்டாம் இடத்தில் உள்ள நாம், மனித சக்தியின் Manpower - உழைக்கும் ஆற்றல் எனக் கொண்டால், எத்தனையாவது இடம் தெரியுமா? 11-வது! தலைசுற்றி வாயுள்ளதா? என்ன செய்வது? அரசியல் பேசவும், சினிமாவை விவாதிக்கவும் நமக்கு 24 மணி நேரம் போதவில்லையே!

- உஷாதேவி





## சார்மினார் சானல் :

# பிரதமர் தொகுதியிலும் பிரச்னைதான்!

● தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் திராட்சைத் தோட்டத்தைச் சுற்றி அமைந்திருந்த முள்வேலி அகற்றப்பட்டு, திடமான காம்பவுண்ட் சுவர் எழுப்பப்பட்ட பின், உள்ளே பெரிய மாளிகை ஒன்று கட்டப்படுவதான வதந்தி பரவியது. பிறகு அது உண்மையென்றானது. உள்ளூர்ப் பத்திரிகைகள் புது பங்களா, காம்பவுண்ட் சுவரைப் படம் பிடித்துக் காட்டின. பக்கத்து திராட்சைத் தோட்டங்களில் சில, கோழிப் பண்ணைகளாக மாற்றப்படுகையில், புதுக் கட்டடம் உயர்வதும் கலபமாகத் தெரிந்தது. சென்ற மாதம் முதல்வர் இங்கு வந்த போது பிளான்களை நேரடியாக ஆந்திர முதல்வர் ஜனார்த்தனன் ரெட்டியிடம் கொடுத்துப் பத்து தினங்களில் அனுமதி பெற்றிருக்கிறார். மளமள வெனக் கட்டடம் உயர, தமிழக முதல்வரும் அடிக்கடி வந்து பார்வையிட்டிருக்கிறார். 'அம்மா' அடிக்கடி வந்து போவதைப் பார்த்த தொழிலாளர்களும் பத்திரிகையாளர்களிடம் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் தமிழக சட்டசபையில் அது தமது பங்களாவல்ல என்று அம்மா சொல்லி இருப்பதால், பின் யாருடையது என்ற கேள்வி, கோலங்கிடைப் மர்மமாக எழுகிறது!

● இப்புகைப் படக் காட்சி என். டி. ஆரின் பங்களாவினுள் எடுக்கப்பட்டது, சமீபத்தில். தெலுங்கு தேசம் கட்சியிலிருந்து தப்பி ஓடும் எம்.பி.க்களைப் பயமுறுத்த துப்பாக்கி; கட்சியின் உள் நிர்வாகத்தைத் தூய்மைப்படுத்த வேண்டிய அவசரத்திற்குத் துடைப்பம் என்று நினைக்க வைக்கிறது. ஆனாலும் அதற்காகப் பாலகனிடமா துடைப்பத்தைக் கொடுத்துப் பெருக்கச் சொல்வது? அதிலும் ஒரு முன்னாள் முதல்வர்!

● பிரதமரின் சொந்த ஊரான வங்காரா கிராமத்தில் சட்டென உருவான முப்பது படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரியொன்று டாக்டர் இல்லாத காரணத்தினால் மூடப்பட்டுக் கிடக்கிறது. பத்து மைல் நடந்து பக்கத்து ஊர் ஆஸ்பத்திரிக்குப் போகிறார்கள், பொது ஜனங்கள். பிரதமரின் சகோதரர் ஒருவர் அந்தக் கிராமத்தில் வசிக்கிறார். பிரதமரிடம் முறையிடுவது போல அவரிடமும் ஜனங்களின் கிறு!

● பிரதமர் பதவி ஏற்றபின் தமது 13,000 ஏக்கர் நிலத்தில், நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் சுமார் 4,000 ஏக்கர் நிலத்தைப் பகிர்ந்து கொடுத்திருக்கிறார்!

● பிரதமர் மகன் ரங்காராவ் கலந்து கொள்ளும் கூட்டங்கள் என்றால் பொது மக்களுக்கும், போலீசுக்கும் தலைவலி. செக்யூரிட்டி கெடுபிடி. இந்த நிலையில் நக்சலைட்டுகளால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்குச் சுற்றுப்பயணம் செய்யப் பாதுகாப்பான ஹெலிகாப்டர் கேட்டு மாநில அரசிற்கு எழுதி உள்ளார். அது பிரதமருக்கு ரீ டைரக்ட் செய்யப்பட்டுள்ளது.

● அசாருதீனுடன் மினி பேட்டி :

''உலகக் கோப்பை பற்றி உங்கள் குடும்பத்தினர் கருத்து என்ன?''

''என் குடும்பத்தாருடன் நான் கிரிக்கெட் பற்றிப் பேசுவதில்லை.''

''உங்கள் மனைவியிடம் சில கேள்விகள் கேட்கலாமா?''

''முடியாது. அனுமதிக்க மாட்டேன்.''

''ஏன்?''

''என் குடும்பத்தாருடன் பத்திரிகையாளர்கள் பேசுவதை நான் விரும்புவதில்லை.''

● ''நான் ஒரு சாதாரண ஏழை. ஏழைகளின் தலைவன். நான் உங்களுடன் பேசிக் கொண்டிருக்கும் இவ்வறையில் ஏர்கண்டிஷன் கூட இல்லை பாருங்கள்'' - என். டி. ஆர்.

- அப்பன்

# சிவகாமியின் சபதம்

## ஐம்பத்தேழாம் அத்தியாயம்

## இராஜகுல தர்மம்

மகேந்திர பல்லவருடைய விருப்பத்தைத் தெரிந்து கொண்டு அவரைச் சூழ்ந்திருந்த மந்திரிகளும் அமைச்சர்களும் சற்று விலகிச் சென்றார்கள். மறுபடியும் சக்கரவர்த்தி அழைத்தவுடனே திரும்பி வருவதற்கு ஆயத்தமாகக் காத்திருந்தார்கள்.

சக்கரவர்த்திக்குச் சமீபமாக மாமல்லரும் அவர்களுக்குச் சற்றுத் தூரத்தில் பரஞ்சோதியும் வணக்கத்துடன் நின்றார்கள்.

மகேந்திர பல்லவர் படுத்திருந்த மண்டபத்துக்கு ஒரு பக்கத்தில் அந்தப்புரத்தின் வாசல் இருந்தது. மகேந்திர பல்லவர் அங்கே திரும்பி நோக்கியதும் தாதி ஒருத்தி ஓடி வந்தாள். அவளிடம், ''மகாராணியை அழைத்து வா!'' என்று பல்லவ வேந்தர் ஆக்ஞாபித்தார்.

''பின்னர், மாமல்லரைப் பார்த்து, ''குழந்தாய்! நான் கண் மூடுவதற்குள் இரண்டு காரியங்களை நிறைவேற்ற வேண்டுமென்று தீர்மானித்திருந்தேன். அதில் ஒன்று நிறைவேறி விட்டது. சிவகாமியின் சபதத்தைப் பூர்த்தி செய்து அவளை வாதாபியிலிருந்து நீ அழைத்து வரும் விஷயத்தில் நமது மந்திரிப் பிரதானிகளால் ஏதேனும் தடை நேராதிருக்கும் பொருட்டு அவர்களிடம் உன் முன்னிலையில் வாக்குறுதி பெற்றுக் கொண்டேன். வாக்குறுதியிலிருந்து அவர்கள் பிறழ மாட்டார்கள். வாதாபிப் படையெடுப்புக்கு உனக்குப் பூரண பக்கபலம் அளிப்பார்கள்'' என்றார்,

மாமல்லர் மறுமொழி எதுவும் சொல்லவில்லை.

''மகனே! நான் செய்ய விரும்பும் இரண்டாவது காரியம் உன்னைப் பொறுத்திருக்கின்றது; நீதான் அதை நிறைவேற்றித் தர வேண்டும். மரணத்தை எதிர்பார்க்கும் சக்கரவர்த்தியின் கோரிக்கையை மந்திரி பிரதானிகள் உடனே ஒப்புக் கொண்டார்கள். என் அருமைப் புதல்வனாகிய நீயும் என் அந்திமகால வேண்டுகோளை நிறைவேற்றித் தருவாயல்லவா?'' என்றார் மகேந்திரர்.

''அப்பா! என்ன வேண்டுமானாலும் எனக்குக் கட்டளையிடுங்கள்; நிறைவேற்றுகிறேன். கோரிக்கை, வேண்டுகோள் என்று மட்டும் சொல்லாதீர்கள்!'' என்றார் மாமல்லர்.

''குமாரா! இந்தப் பெரிய சாம்ராஜ்யத்தை நிர்வகிக்கும் பொறுப்பு கூடிய சீக்கிரம் உன் தலையில் சாரப் போகிறது. ஆயிரம் ஆண்டுகளாகப் புகழ்பெற்ற காஞ்சிமா நகரின் சிம்மாசனத்தில் நீ வீற்றிருக்கும் காலம் நெருங்கி வந்திருக்கிறது...''

''அப்பா! இவ்விதமெல்லாம் தாங்கள் பேசுவதானால், நான் இங்கிருந்து போய் விட விரும்புகிறேன். எனக்குச் சிம்மாசனமும் வேண்டாம், சாம்ராஜ்யமும் வேண்டாம். தாங்கள்தான் எனக்கு வேண்டும். நெடுங்காலம் தாங்கள் திடகாத்திரமாக வாழ வேண்டும்...''

''மாமல்லா! நம்முடைய கண்களை நாமே மூடிக் கொண்டு எதிரேயுள்ளதைப் பார்க்காமல் இருப்பதில் பயனில்லை. இனி நெடுங்காலம் நான் ஜீவித்திருக்கப் போவதில்லை. அப்படி ஜீவித்திருந்தாலும் திடகாத்திரமாக இருக்கப் போவதில்லை. சாம்ராஜ்ய பாரத்தை இனிமேல் என்னால் ஒரு நிமிஷமும் தாங்க முடியாது. அந்தப் பொறுப்பை நீதான் வகித்தாக வேண்டும்...''

''பொறுப்பு வகிக்க மாட்டேன் என்று நான் சொல்லவில்லையே? காஞ்சி சிம்மா

அமரர் கல்கி

சனத்தில் தாங்கள் இருந்து கொண்டு எனக்குக் கட்டளையிடுங்கள். நான் நிறைவேற்றாவிடில் கேளுங்கள்.''

''நல்லது மகனே! இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தின் பொறுப்பை நிர்வகிப்பதற்குத் தகுதி பெற வேண்டுமானால் அதற்கு முக்கியமான ஒரு நிபந்தனை இருக்கிறது. அதை நீ பூர்த்தி செய்தாக வேண்டும்!''

''நிபந்தனையைச் சொல்லுங்கள், அப்பா!'' என்றார் மாமல்லர் அவருடைய உள்ளத்தில் ஏதோ ஒருவித வேதனை உண்டாயிற்று.

''குழந்தாய்! வளைத்து வளைத்துப் பேசுவதில் என்ன பயன்? நீ எனக்கு ஒரே மகன். வாழையடி வாழையாக வந்த பல்லவ வம்சம் உன்னோடு முடிவடைந்து விடக் கூடாது. காஞ்சி சிம்மாசனத்தில் ஏறத் தகுதி பெறுவதற்கு நீ கலியாணம் செய்து கொள்ள வேண்டும். மாமல்லா! - பாண்டிய இராஜகுமாரியை மணந்து கொள். நான் கண்ணை மூடுவதற்குள்ளே நீ இல்லறம் மேற்கொண்டு நான் பார்த்து விட வேண்டும். இல்லாவிட்டால் என் மனம் நிம்மதி அடையாது. என் நெஞ்சு வேகாது!'' என்றார் சக்கரவர்த்தி.


மேற்படி மொழிகள் மாமல்லரின் இருதய வேதனையைப் பன்மடங்கு அதிகமாக்கின. அவருடைய நெஞ்சில் ஈட்டியால் குத்தியிருந்தால் கூட அத்தனை துன்பம் உண்டாகியிராது.

சற்று மௌனமாய் நின்று விட்டு, ''அப்பா! ஏன் இப்படி என்னைச் சோதனை செய்கிறீர்கள்? என் மனோநிலை உங்களுக்குத் தெரியாதா? சிவகாமியின் மேல் நான் அழியாத காதல் கொண்டிருப்பதை அறியீர்களா? ஒரு பெண்ணிடம் மனம் சென்ற பிறகு, இன்னொரு பெண்ணை எப்படி மணப்பேன்? அப்படிச் செய்வது மூன்று பேருடைய வாழ்க்கையையும் பாழாக்குவதாகாதா? இத்தகைய காரியத்தைச் செய்யும்படி எனக்குக் கட்டளையிடுகிறீர்களா?'' என்று மாமல்லர் கேட்டார். அவருடைய வார்த்தை ஒவ்வொன்றும் இருதயத்தின் அடிவாரத்திலிருந்து நெஞ்சின் இரத்தம் தோய்ந்து வெளி வந்தது.

மகேந்திர பல்லவர் குமாரனை அன்புடனும் ஆதரவுடனும் தடவிக் கொடுத்தார். பிறகு கனிவு ததும்பும் குரலில் கூறினார் : ''ஆம், நரசிம்மா! அப்படிப்பட்ட காரியத்தைச் செய்யும்படி தான் சொல்கிறேன். அந்தக் காரியத்தின் தன்மையை நன்கு அறிந்து சொல்கிறேன். கேள், மாமல்லா!



இந்த உலகத்தில் சாதாரண மனிதர்களுக்குத் தர்மம் வேறு; இராஜகுலத்தில் பிறந்தவர்களுக்குத் தர்மம் வேறு. சாதாரண ஜனங்கள் தங்களுடைய சொந்த சுகதுக்கங்களை உத்தேசித்துக் காரியம் செய்யலாம். ஆனால் இராஜ குலத்தில் பிறந்தவர்கள் அவ்வாறு செய்வதற்கில்லை. தங்கள் சுகதுக்கங்களை அவர்கள் மறந்துவிட வேண்டும். இராஜ்யத்தின் நன்மையைக் கருதியே இராஜ குலத்தினர் தங்கள் சொந்தக் காரியங்களையும் வகுத்துக் கொள்ள வேண்டும். மாமல்லா! யோசித்துப் பார்! சிவகாமியை நீ மணந்து கொள்வது இனிமேல் சாத்தியமா? வாதாபிக்கு நீ படை எடுத்துப் போவது இன்றோ நாளையோ நடக்கக்கூடிய காரியமா? வருஷக் கணக்கில் ஆயத்தம் செய்ய வேண்டியிருக்கும். அப்புறம் யுத்தம் எத்தனை காலம் நடக்குமோ,



யார் சொல்ல முடியும்? அத்தனை நாளும் நீ கலியாணம் செய்து கொள்ளாமல் இருப்பாயா? அதற்கும் பல்லவ நாட்டுப் பிரஜைகள் சம்மதிப்பார்களா?''

மாமல்லர் பெருமூச்சு விட்டார்; சிவகாமியின் மீது அவருக்குச் சொல்ல முடியாத கோபம் வந்தது. அந்தப் பாதகி தன்னுடன் புறப்பட்டு வர மறுத்ததனால் தானே இப்போது இந்தத் தர்மசங்கடம் தனக்கு நேரிட்டிருக்கிறது!

அவருடைய உள்ளப் போக்கை அறிந்து கொண்ட மகேந்திர பல்லவர், ''குமாரா! இராஜ குலத்தினர் தங்களுடைய சுகதுக்கங்களைப் பாராமல் இராஜ்யத்துக்காகவே எல்லாக் காரியங்களும் செய்தாக வேண்டும் என்று உனக்குச் சொன்னேனல்லவா? அதை நானே என் வாழ்க்கையில் அனுசரித்து வந்திருக்கிறேன். இப்போது கூட இராஜ்யத்தின் நன்மைக்காக ஒரு பயங்கரமான காரியத்தைச் செய்வதற்கு மனம் துணிந்திருந்தேன். அந்தப் பயங்கரமான காரியம் என்ன தெரியுமா?...'' என்று மகேந்திர பல்லவர் நிறுத்தினார்.

மாமல்லர் ஒன்றும் புரியாதவராய்த் தாயாரையும் தந்தையையும் மாறி மாறிப் பார்த்தார்.

''ஆம், குமாரா! இந்த வயதில் உன் தாயாருக்கு இன்னொரு சக்களத்தியை அளிப்பதென்று தீர்மானித்திருந்தேன். நீ வாதாபியிலிருந்து சிவகாமியை இப்போது அழைத்து வந்திருந்தால், அவளை நானே மணந்து கொள்வதென்று முடிவு செய்திருந்தேன்...'' என்றதும் மாமல்லர் ''அப்பா!'' என்று அலறினார்.

''மாமல்லா! என்னை மன்னித்து விடு! இராஜ்யத்தின் நன்மைக்காகவே அந்தப் பயங்கரமான காரியத்தைச் செய்யத் துணிந்திருந்தேன். நீ சிவகாமியை மணக்காமல் தடுக்கும் பொருட்டே அவ்விதம் செய்ய எண்ணினேன். உன் அன்னையிடமும் சொல்லி அனுமதி பெற்றேன். ஆனால், அந்தப் புண்ணியவதி வாதாபியிலிருந்து வர மறுத்து என்னை அந்தப் பயங்கரச் செயலிலிருந்து காப்பாற்றினாள்!''

மாமல்லருடைய மனம் அப்போது வாதாபி மாளிகையில் தன்னந்தனியாக உட்கார்ந்திருக்கும் சிவகாமியிடம் சென்றது. 'ஆ! - அவள் தம்முடன் புறப்பட்டு வர மறுத்தது எவ்வளவு நல்லதாயிற்று?'

''குமாரா! இப்போது யோசித்துப் பார்! இராஜ்யத்தின் நன்மைக்காக நான் செய்யத் துணிந்ததைக் காட்டிலும் உன்னைச் செய்யும்படி கேட்பது பெரிய காரியமா? பாண்டியகுமாரியை மணப்பதனால் பல்லவ ராஜ்யத்துக்கு எவ்வளவு பலம் ஏற்படும் என்று சிந்தனை செய். நீ செய்வதற்குரிய மகத்தான பிரம்மாண்டமான காரியங்கள் இருக்கின்றன. வாதாபிக்குப் படை யெடுத்துச் சென்று சளுக்கப் பூண்டை அடியோடு அழித்து வருவதென்பது சாமான்யமான காரியமா? அதற்கு எத்தனை துணைப் பலம் வேண்டும்? தென்னாட்டிலுள்ள எல்லா மன்னர்களும் சேர்ந்து பிரயத்தனம் செய்தாலொழிய அது சாத்தியப்படுமா? தெற்கே ஒரு சத்ருவை வைத்துக் கொண்டுதான் வடக்கே படையெடுத்துச் செல்ல முடியுமா? நரசிம்மா! எந்த வழியில் பார்த்தாலும் பாண்டிய ராஜகுமாரியை நீ மணப்பது மிகவும் அவசியமாகிறது...'' என்று இவ்விதம் இடைவிடாமல் பேசிய காரணத்தினால் மகேந்திர பல்லவர் பெருமூச்சு வாங்கினார். அவருடைய கஷ்டத்தைப் பார்த்த புவன மகாதேவி, ''பிரபு! இவ்வளவு நேரம் பேசலாமா? வைத்தியர் அதிகம் பேசக் கூடாது என்று கட்டளையிட்டிருக்கிறாரே?'' என்று சொல்லி விட்டு, மாமல்லரைப் பார்த்து, ''குழந்தாய்! உன் தந்தையை...'' என்றாள். அன்னை மேலே பேசுவதற்கு மாமல்லர் இடங்கொடுக்கவில்லை.

''அப்பா! தாங்கள் அதிகமாகப் பேச வேண்டாம். பாண்டியகுமாரியை நான் மணந்து கொள்கிறேன்!'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னார்.

மகேந்திர சக்கரவர்த்தியின் முகம் மலர்ந்தது. புவனமகாதேவியோ தன் கண்களில் துளித்த கண்ணீரை மறைக்க வேறு பக்கம் திரும்பினாள்.

மகேந்திர பல்லவர் சமிக்ஞை காட்டியதும் தளபதி பரஞ்சோதியும் மற்ற மந்திரி பிரதானிகளும் அருகில் வந்தார்கள்.

''தலைவர்களே! அதிக நேரம் உங்களைக் காக்க வைத்து விட்டேன். அவ்வளவுக்கவ்வளவு உங்களுக்குக் குதூகலம் தரும் செய்தியைத் தெரிவிக்கப் போகிறேன். குமாரச் சக்கரவர்த்திக்கும் பாண்டிய ராஜகுமாரிக்கும் கலியாணம் நிச்சயமாகியிருக்கிறது. அதே பந்தலில் அதே முகூர்த்தத்தில் சேனாதிபதி பரஞ்சோதிக்கும் திருமணம் நடைபெறுகிறது!'' என்று மகேந்திர பல்லவர் கூறியதும், கேட்டவர்கள் அவ்வளவு பேரும் ஒரே குரலாக ''வீர மாமல்லர் வாழ்க! சேனாதிபதி பரஞ்சோதி வாழ்க!'' என்று கோஷித்தார்கள்.

(தொடரும்)

# நடிக சூடாமணி பூர்ணம் விஸ்வநாதன்



"பூர்ணம் விஸ்வநாதன் சினிமாவில் நடித்திருக்கிறார், டீ.வி. நாடகங்களில் நடித்திருக்கிறார். ஆனால் மேடை நாடகம்தான் அவருக்குப் பிறந்த வீடு... பணக்காரக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டாலும் அம்மா வீட்டிற்கு வந்து வற்றல் குழம்பை விரும்பிச் சாப்பிடும் பெண்ணைப் போல் பூர்ணம் மேடை நாடகங்களில் நடிக்கும் போது உணர்கிறார்...'' இப்படிப் பேசியவர் பிரபல நாடகாசிரியர் மெரீனா.

சென்னை, கிருஷ்ண கான சபை பூர்ணம் விஸ்வநாதனுக்கு 'நடிக சூடாமணி' என்ற விருதினை வழங்கிய நிகழ்ச்சியில்தான் இவ்வாறு பேசினார் மெரீனா.

நாடகக் கலைஞர்களைக் கௌரவிக்க இப்புதிய விருதை அறிமுகப்படுத்திய கிருஷ்ண கான சபா, ''ஒரு சடங்காக இதை வருடா வருடம் கொடுக்காமல் தகுதியுள்ள கலைஞர்கள் தங்கள் திறமையை நிரூபிக்கும் வரைக் காத்திருந்தே அளிக்கும்'' என்றார் காரியதரிசி யக்ஞராமன்.



'சிங்கமய்யங்கார் பேரன்' - ஒரு காட்சி

''விருது பெறுவதன் மூலம் பொறுப்பு அதிகரித்து விட்டது; இவ்விருது எங்கள் குழுவுக்கே அளிக்கப்பட்ட விருதாகக் கருதுகிறேன்; தொடர்ந்து பயபக்தியுடன் மேடையேறி, சிறந்த நாடகங்களை வழங்க முயன்று வருவோம்'' என்று ஏற்புரையில் கூறினார் பூர்ணம்.

விருது வழங்கும் விழாவைத் தொடர்ந்து, சுஜாதா எழுதிய ''சிங்கமய்யங்கார் பேரன்'' என்ற நாடகம்... பூர்ணம் விஸ்வநாதனுக்கு tailor-made role ஆசார வைஷ்ணவரான நரசிம்மாச்சாரி பாத்திரம்.

தாம் நடிக சூடாமணிக்கு முழுக்க முழுக்கப் பாத்திரமானவரே என்று நிரூபித்தார் பூர்ணம். சிறுசுகளின் காதல் திருமணம், பெற்றோர் எதிர்ப்பு, குழந்தை பிறந்ததும் மனமாற்றம் - என்ற பழைய கதைக்கு டானிக், சுஜாதாவின் நையாண்டியான வசனங்களும் பூர்ணத்தின் ஜீவன் ததும்பும் நடிப்பும்தான்.

நாடகத்துக்கு இசையமைப்பு டீ. வி. கோபாலகிருஷ்ணன். நாடக மேடையைப் பொறுத்தவரை ஓசை அதிகம் இல்லாமலிருப்பதே சிறந்த இசையமைப்பு என்று நிரூபித்திருக்கிறார்!

மொத்தத்தில் மணமான வற்றல் குழம்பு!

– எஸ். ஆர்.

# தமிழ் சினிமாவில் பெண்கள்





"ஒரு பெண் எப்போது பெண் ஆகிறாள்....? பிறக்கும்போது இருபத்தைந்து சதவிகிதம் பெண் ஆகிறாள்; பூப்பெய்தும் போது ஐம்பது சதவிகிதம் பெண் ஆகிறாள்; ஒருவனுக்கு மனைவியாகும் தருணத்தில் எழுபத்தைந்து சதவிகிதம் பெண் ஆகிறாள்; ஒரு குழந்தைக்குத் தாயாகும் போதே அவள் நூறு சதவிகிதம் பெண் ஆகிறாள்."

சுந்தர காண்டம் திரைப்படத்தில் ஓர் ஆசிரியர் (பாக்யராஜ்) பள்ளி மாணவ-மாணவிகளுக்குப் பாடம் நடத்தும் போது பேசும் டயலாக் இது!

பெண்கள் தங்கள் தனித்தன்மையை நிலைநாட்டப் போராடி வரும் ஒரு சிக்கலான காலகட்டத்தில், ஒரு பள்ளி ஆசிரியர் இத்தகைய 'டயலாக்' பேசுவதும் அவர் பால் ஈர்க்கப்பட்ட மாணவி 'உங்கள் கையால் தாலி வாங்கிக் கொண்டு அட்லீஸ்ட் எழுபத்தைந்து சதம் பெண் ஆகிறேன்' என்று அழிச்சாட்டியம் பண்ணுவதும் ஒரு தமிழ்த் திரைப்படத்தின் மையக் கருவாக அமைக்கப்பட்டுள்ளன.....

தற்கால தமிழ் சினிமாவில் பெண்கள் எவ்வாறு சித்திரிக்கப்படுகிறார்கள்



என்பதற்கு இது ஒரு தலைசிறந்த உதாரணமும் கூட.

பலதரப் பட்டவர்களிடம் தமிழ் சினிமாவில் பெண்கள் சித்திரிப்பு பற்றிப் பேசிப் பார்த்தோம்....

''சுந்தர காண்டம்'' பார்த்த பிறகு எனக்கு இரவெல்லாகம் தூக்கம் வரவில்லை....'' என்றார் பத்மா அரக. இவர் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் 'media monitoring committee' உறுப்பினர். ''பெண் இனத்தை மிகக் கேவலப்படுத்தியிருக்கிறார்கள் அப்படத்தில்... ஆனால் நான் நினைப்பது போல் என் வீட்டுப் பணிப்பெண் நினைக்க வில்லை. அழிச்சாட்டியம் செய்யும் கதாபாத்திரத்திடம் அவருக்கு அனுதாபமே ஏற்பட்டது....!

''நம் நாட்டில் உள்ள எளிய, படிப்பறிவு அற்ற மக்களின் பலவீனத்தைத்தான் சினிமா உலகம் மீண்டும் மீண்டும் பயன் படுத்திக் கொள்கிறது.... ஆண் ஆதிக்கம் நிறைந்த திரை உலகம் பெண்களின் முன்னேற்றத்தை அங்கீகரிக்க மறுக்கிறது'' என்று வேகமாகப் பேசினார் பத்மா.....

சென்சார் போர்டு உறுப்பினர் ஆர்.கே. குமாரின் கருத்து, பத்மாவுடைய அபிப்பிராயத்தை ஆமோதிப்பதாக இருந்தது.

''சினிமாத்துறைக்கு எல்லாவற்றையும் விட சாதகமாக இருப்பது பெண்மையை என்ன பாடு படுத்தினாலும் அவர்களுக்குத் தாய்க் குலத்திடமிருந்து கிடைக்கும் ஆதரவுதான்! லேடீஸ் சப்ஜெக்ட் என்று திட்டமிட்டுப் படமெடுத்து வெற்றி காண்கிறார்கள் திரையுலகில்....'' என்றார் ஆர்.கே. குமார்.

''தமிழ் சினிமாவில் பெண்கள் இன்னமும் அடிமைகளைப் போல்தான் காண்பிக்கப் படுகிறார்கள்'' என்று கருத்து கூறினார் விக. ''ஆனால் என் நண்பர்களுள் பலரே (விக ஒரு சார்டர்ட் அகவுண்டண்ட்) பெண்கள் வீட்டிலேயே அடங்கி ஒடுங்கி இருக்க வேண்டும் என்றுதான் நினைக்கிறார்கள். ஒரு சிலர் தான் அவர்கள் எங்களுக்கு இணை யானவர்கள் என்பதை முழு மனத்துடன் ஏற்கிறார்கள்.... அதனால்தான் அவர்களால் தமிழ் சினிமாவில் பெண்கள் சித்திரிக்கப்படும் விதத்தை ஏற்க முடிகிறது.....'' என்றார் விக.

''பெண்கள் கேவலப்படுத்தப்பட்டால் எங்களுக்கு என்ன.....? இதையெல்லாம் சீரியஸ்ஸாக எடுத்துக் கொள்ளவா சினிமாவுக்குப் போகிறோம்....?'' என்று கேட்டார் சுரேஷ். இந்தப் பத்தொன்பது வயது கல்லூரி மாணவர், அழகான கதாநாயகிகளைப் பலவிதமான காட்சிகளில் காணவே தம் நண்பர்கள் சினிமாவுக்குப் போவதாக ஒப்புக் கொண்டார்..... ''ஏன்! பெண்களும் அழகான கதாநாயகர்களைக் காணத்தானே சினிமாவுக்குப் போகிறார்கள்.....?!'' என்று வாதிட்டார்!



எம்.ஃபில் மாணவியான அனுபமா, ''தமிழ் சினிமாவில் பெண்கள் வெளித் தோற்றத்தில் மட்டுமே நவீனமாகக் காட்டப்படுகிறார்கள். அவர்கள் சிந்தனையும் செயலும் பழமையைத் தழுவியே இருக்கிறது....'' என்றார். ''தப்பித் தவறி சுதந்திர சிந்தனையுள்ள ஒரு வித்தியாசமான பெண் பாத்திரத்தைத் திரையில் காண்பித்தால், அந்தச் சித்திரிப்பையும் மிகைப்படுத்தி நம்ப முடியாததாகக் காண்பிக்கிறார்கள்....'' - சலித்துக் கொண்டார் அனுபமா. ''நிஜ வாழ்க்கையில் பெண்கள் இப்படியெல்லாம் நடந்து கொள்ள மாட்டார்கள்.

''ஒரு பெண் ஆணைக் கன்னத்தில் அடிப்பது சினிமாவில்தான் சுலபமாக சாத்தியம்'' என ஆமோதித்தார் சௌகார் ஜானகி.



வீடு

எல்லோராலும் பாராட்டப்பட்ட 'புது வசந்தம்' கூட நடைமுறை சாத்தியமற்றது என்று கருத்துத் தெரிவித்தார் பத்மா அரசு. ''மேலும், அப்படத்தில் கதாநாயகி புதுமையாக என்ன செய்கிறாள்? வீட்டைச் சுத்தமாக்கி, சமைத்து, வளையோசையால் வாலிபர்களைத் துயிலெழுப்பி... ஒவ்வொரு காட்சியிலும் இவள் இந்த நால்வருள் யாரைக் காதலிக்கப் போகிறாள் என்ற கேள்வி பார்ப்போர் மனத்தில் நெருடிக் கொண்டேயிருக்கிறது....'' என்று புதிய கோணத்தைச் சுட்டிக் காட்டினார் பத்மா.

''தாலியைக் கழற்றி வீசும் பெண்ணும் (சிறை-லக்ஷ்மி) பகவத் கீதையைக் குழி தோண்டிப் புதைக்கும் பெண்ணும் (புதுமைப் பெண் - ரேவதி) கேலிச் சித்திரங்கள் போல்தான் தோன்றுகிறார்கள் என ஒப்புக் கொண்டார் ஆர்.கே. குமார். 'புது நெல்லு புது நாத்து' படத்தில் கதாநாயகனைச் சீண்டி, சுற்றி வருவது மட்டுமே கதாநாயகிக்கு வேலை... இன்று பெண்களுக்கு எவ்வளவோ நிஜமான பிரச்னைகள் உள்ளன.... ஏன் அவற்றை மையமாக்கிப் படங்கள் எடுக்கப்படுவதில்லை....'' என நியாயமான கேள்வி எழுப்பினார்.



சிறை

பெண்களின் முயற்சிகளைத் திரையுலகம் அடியோடு புறக்கணித்துவிடவில்லை. வைஜயந்தி ஐ.பி.எஸ். போன்ற படங்கள் எடுக்கப்படுகின்றன.

''ஆனால் இவை யாவும் ஆணின் நோக்கிலேதான் எடுக்கப்படுகின்றன. பெண்களின் பார்வையில் இப்படங்கள் எடுக்கப்பட்டால் அவை மிக வித்தியாச



ஹேமாவின் காதலர்கள்

மாய் இருக்கும்'' எனக் கூறிய பத்மா அரக வைஜயந்தி ஐ.பி.எஸ். இன் இறுதிக் காட்சியில் கதாநாயகன் வந்துதான் நாயகியைக் காப்பாற்றுகிறான் என்று சுட்டிக் காட்டினார். ஒரு பெண் தொழிலதிபருக்கும் அவள் நிறுவன யூனியன் உறுப்பினருக்கும் ஏற்படும் மோதல் காதலாகிக் கல்யாணத்தில் முடியும் 'மன்னன்' படத்தில், கதாநாயகி விஜயசாந்தி இறுதியில் ஆணுக்கு அடங்கிப் போய், அடக்க ஒடுக்கமாகக் கணவனை வேலைக்கு அனுப்பி வைக்கும் பத்தாம்பசலிச் சித்திரமாகக் காட்டப்பட்டிருப்பதைச் சாடினார் அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் மற்றொரு உறுப்பினரான வாசுகி.

''வைஜயந்தி ஐ.பி.எஸ் ஆணுக்குப் பெண் சரிநிகர் சமம் என உணர்த்த முயல்கிறதோ?'' எனச் சந்தேகத்துடன் கேட்டார் சுரேஷ். நடிகை சுஹாசினி வலுவாக இதை மறுத்தார். ''சூப்பர் ஹீரோ இருக்க வேண்டிய இடத்தில் சூப்பர் ஹீரோயின் - அவ்வளவுதான். அந்தப் படத்தில் சாகசங்கள்தான் முக்கியம் பெண்ணின் சாதனைகள் அல்ல....'' என்றார்.

'ஹேமாவின் காதலர்கள்' என்ற ஒரு படம் மட்டுமே பெண்ணின் நிஜமான பிரச்னையை யதார்த்தமான முறையில் அணுகிய படம் என்றார் பத்மா. ''வீடு யதார்த்தமான படம். இரு பாலருக்கும் பொதுவான வீட்டு வசதிப் பிரச்னையைப் பற்றியது. என்றாலும் அதை ஒரு பெண் சமாளிக்க நேரும்போது என்னென்ன கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்பது மிக இயல்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது.....!'' எனவும் கூறினார் பத்மா.

**ஆ**னால் இவ்விரு படங்களும் வர்த்தக ரீதியில் வெற்றி பெறவில்லையே என்று சுட்டிக் காட்டிய போது பத்மா கூறினார்.

''பெண் என்றால் இப்படியிப்படி இருக்க வேண்டும் என்று சமூகம் வரையறுத்துக் கொள்வது போல் சினிமாவுக்குச் சில இலட்சணங்கள் தேவை என்றும் வரையறுத்துக் கொண்டு எதிர்ப்பார்க்கிறது. அதைத் தாண்டி நோக்கவும் ஆராயவும் மறுக்கின்றனர் சினிமா ரசிகர்கள். ஓரளவு படித்த இளைய தலை முறையினரானாலும் சரி, படிப்பறிவற்றவர்களானாலும் சரி சினிமா ஒரு escapism நிஜத்திலிருந்து விடுதலை பெற்று, கற்பனையில் சஞ்சரிக்க உதவும் சாதனம் அவ்வளவுதான்....!

''இந்த நிலையில் மாற்றம் வேண்டுமானால் திரைப்படத் திறனாய்வுப் பயிற்சி வகுப்புகள் நடத்தி இளம் சமுதாயத்தினரின் சிந்தனையைத் தூண்டிப் பார்க்கலாம்....'' என்று கூறிய பத்மா அரக ஒரு கல்லூரி விரிவுரையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


**பெ**ண் பாத்திரங்கள் படைப்பில் ஆழமோ, கனமோ யதார்த்தமோ இல்லை என்பது ஒரு புறமிருக்க, அவர்களை அலங்காரச் சின்னங்களாகவும் போகப் பொருள்களாகவும் சித்திரிப்பது அதிகரித்துக் கொண்டே வருகிறது.

''முன்பெல்லாம் 'வில்லி' பாத்திரங்கள்தான் கவர்ச்சி நடனம் ஆடுவார்கள். ஆனால் இப்போது கதாநாயகிகளே அறை குறை ஆடையில் தோன்றி டூயட் காட்சிகளிலும் கனவுக் காட்சிகளிலும் விரசமான அசைவுகளுடன் நடனமாடுகிறார்கள்....'' என்று சுட்டிக் காட்டினார் ஆர்.கே. குமார்.

(இன்று சில்க் கவிதா போன்ற நடிகை கண்ணியமான டாக்டர் பாத்திரத்தில்

சௌகார் ஜானகி





சுஹாசினி



ஆர்.கே. குமார்

தோன்றும் படத்தில் கூட (தாலாட்டு கேக்குதம்மா) அவரைக் கவர்ச்சிக் கன்னியாகக் காண்பிக்க ஒரு கனவுக் காட்சித் திணிக்கப்படுகிறது)

''பலவிதமான கவர்ச்சி உடைகளில் தோன்றும் பெண் பாத்திரங்கள்தான் கல்யாணமானவுடன் இழுத்துப் போர்த்திய புடைவையில் தோன்றுவார்கள்... இதைக் காணவே எரிச்சலாக இருக்கும்'' என்று சுகாசினி கூறினார்.

திருமணமான பெண் புடைவை அணிவது எழுதாத சினிமா விதி எனில் விதவை வெள்ளைப் புடைவை அணிவது என்பது சினிமாவில் மட்டுமே தொடரும் மரபு... 'வெள்ளைப் புடைவை செண்டிமெண்டை' அடிப்படையாகக் கொண்ட கிளைமாக்ஸ் காட்சி 'சின்னத்தம்பி' படத்தில் இடம்பெற்றது. 'அந்தப் படம் பாட்டுக்காகவேதான் ஓடியது' என்று பலர் சொல்லக் கேட்டது ஆறுதலாயிருந்தது.

''பணத்துக்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலை இங்கு மட்டுமல்ல, உலக நாடுகள் எல்லாவற்றிலும் உள்ளது. கருத்துச் சுதந்திரம் என்ற போர்வையில் பெண்கள் சினிமாவில் மட்டுமின்றி, பல்வேறு வெகுஜனத் தொடர்பு சாதனங்களிலும் கேவலப்படுத்தப்படுகிறார்கள்'' என்றார் ஒரு பொறுப்புள்ள பத்திரிகை ஆசிரியர்.

''ஆனால் இதைத் தமிழ்ப் படாதிபதிகள் தாங்களும் பெண்களை ஆபாசமாகவும் சுகபோகப் பொருளாகவும் சித்திரிக்க ஒரு முன்னுதாரணமாகக் காட்டக்கூடாது. மாறாக, அதே மேல் நாடுகளில் பெண்கள் எவ்வளவு உயர்வாகவும் இயல்பாகவும் சித்திரிக்கப்படுகிறார்கள் என்பதையும் பார்த்து அதைப் பின்பற்ற முயற்சி செய்ய வேண்டும். ஓர் உதாரணம் வேண்டுமானால் அண்மையில் இங்கு திரையிடப்பட்ட Silence of the Lambs என்ற ஆங்கில படத்தைக் குறிப்பிடலாம். கதாநாயகி எஃப்.பி.ஐ. அமைப்பில் சேர்ந்து, பயிற்சி பெற்றவள்தான். ஆனால் அவள் சாகசம் புரிகிறவளாக அல்லாமல் எவ்வளவு இயல்பாகச் சித்திரிக்கப்படுகிறாள்! உள்ளூர அவளுக்கு இருக்கும் பயத்தைக் கூட நம்மால் உணர முடிகிறது. இதனால் படத்தின் சஸ்பென்ஸ் குறைந்தா போய்விட்டது? பாக்ஸ் ஆஃபீஸ் வெற்றியோடு ஐந்தாறு ஆஸ்கார்களையும் அள்ளிக் கொண்டதே!''

இந்த நிலைமைகளை மாற்ற சென்ஸார் போர்டு உதவ முடியுமா?

''சென்ஸார் போர்டு உறுப்பினர்கள் அரசால் வகுக்கப்பட்ட guide lines (வழிகாட்டல் வரைவு) படிதான் செயல்படுகிறார்கள். அதையும் பலதரப்பட்டவர்கள் பலவிதமாக அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம்'' என்று கூறினார் ஆர்.கே. குமார்.

ஆக, இவர்கள் குறிப்பிட்ட ஒரு ஆபாசமான காட்சிக்கோ வசனத்துக்கோ ஆட்சேபம் தெரிவிக்கலாமேயொழிய ஒட்டுமொத்தமாகத் திரையுலகின் சிந்தனைப் போக்கையே சீர்திருத்திவிட முடியாது. அது அவர்களுடைய பணியும் அன்று.

''பிரச்னைக்குத் தீர்வு, சினிமா துறையினர் தங்களுக்குத் தாங்களே ஒரு work ethic. நியாயமான தொழில் தர்மம் - வகுத்துக் கொண்டு அதன்படி நடப்பது தான்'' என்றார் ஆர்.கே. குமார்.

ஆக மொத்தம், இங்கும் திரை உலகம் தீவிரமாக முயற்சி செய்தால் பெண்களை உயர்வாகச் சித்திரிக்கும் போதே இயல்பாகவும் சித்திரிக்க முடியும். அந்தப் படம் கலைப்படமாக இருக்கும் போதே பாக்ஸ் ஆஃபீஸ் வெற்றியாகவும் அமைய முடியும்.

கலை உணர்வின்றி பணத்துக்காக மட்டும் படம் எடுக்கப்படுவதை நம்மால் தடுத்து நிறுத்திவிட முடியாது. ஆனால் அப்படி நாலு படம் வரும்போது உயர் ரசனை மிக்க இரண்டு படங்களாவது உருவானால்தான் தமிழ்த் திரை உலகு குறித்து நாம் பெருமைப்பட முடியும்.

– சீதா ரவி, சந்தியா ராமன்

அட்டையில் : சிவப்புப் பறவை

படத்தில் : டிஸ்கோ சாந்தி

ஸ்டில்கள் உதவி : ஆனந்தன்

*Experience Dugar's special service to all depositors and investors. And remember, the offer is for a limited time only.*

*Closing date – 13th May, 1992.*

*Special Service*

**MONTH**

**DUGAR**
**INVESTMENTS LIMITED**

★ Hire Purchase ★ Leasing ★ Property Development ★ Public Deposits

**REGD. OFFICE:** 'DUGAR TOWERS', No. 123, Marshalls Road, P.B. No.: 799, Egmore, Madras 600 008. Ph. 88 36 36 (10 lines).
**DEPOSIT SERVICE CENTRES:** • **MOUNT ROAD**, 885, Mount Road, (Opp. LIC Bldg.) P.B. No. 3733 Madras 600 002. Tel. 831588 • **T.NAGAR:** 54, 1st Floor, South Usman Road (near T.Nagar Bus Stand), Madras 600 017. Ph. 441541 • **ADYAR:** No. 7, TNHB Shopping Centre, (1st Floor), 19, First Avenue, Shastri Nagar, Madras 600 020.
**BRANCHES:** • **BANGALORE:** "BLU MOON COMPLEX", 2nd Floor, 67, M.G. Road, Bangalore 560 001. Tel. 586744 • **CALICUT:** RUBY Building, 2nd Floor, 5/0/F, Rajaji Road, Opp. Indoor Stadium, Calicut 673 004. Tel. 63344 • **COIMBATORE:** "FATEMA MANZIL", 9/253, 2nd Floor, Dr. Nanjappa Road, Gandhipuram, Coimbatore 641 018. Tel. 37867 • **DELHI:** 103/3, Moti Bazar, Chandni Chowk, Delhi 110 006. Tel. 526686 • **ERNAKULAM:** "CHENCHERRY BUILDING", 2nd Floor, 903 A, M.G. Road, Ernakulam, Cochin 682 001. Tel. 369615 • **GUDUR:** DUGAR HOUSE, 6/86, Raja Street, Gudur 524 101, A.P. Tel. 836 • **NELLORE:** 17/115, Trunk Road, Nellore 524 001. Tel. 27576 • **SALEM:** 175, Cherry Road (Upstairs) Opp. District Central Library, Salem 636 007. Ph. 66789 • **SECUNDERABAD:** 'AISHWARYA BLDG.', 1st Floor, 126, M.G. Road, Secunderabad 500 003. Tel. 846306 • **VISAKHAPATNAM:** Ground Floor, LIC Building, Jeevan Prakash Road, Visakhapatnam 530 004 Tel. 46581.

# காவேரி பிரச்னை: இழக்கப்பட்ட வாய்ப்புக்கள்



**மொத்த மழை அளவு குறைந்து போயிருப்பது என்னவோ உண்மை. அதை வைத்து நாமும் சற்று விட்டுக் கொடுக்கலாம். ஆனால்...**

நா. மகாலிங்கம்

நாங்கள் முன்பே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கூடி விரிவாக யோசித்திருக்கிறோம். Rough Scheme எல்லாம் கூடப் போட்டிருக்கிறோம். அந்தத் திட்டம் என்னவென்றால் - மகாநதி - கோதாவரி, கோதாவரி - கிருஷ்ணா; அப்புறம் வடபெண்ணை - தென் பெண்ணை - காவேரி. எல்லாவற்றையும் இணைக்க வேண்டும் என்பதுதான். அப்படிச் செய்தால் மூன்று லட்சம் ஏக்கர் நிலத்தில் இரண்டு போகம் (Double crop) பயிரிட, தஞ்சைக்குத் தண்ணீர் கொண்டுவர முடியும்.

ஒரிஸ்ஸாவில் மகாநதி நீரில் ஆறு சதவிகிதம்தான் பயன்படுகிறது. என்ன முயற்சி பண்ணினாலும் இன்னும் ஒரு பத்துப் பதினைந்து சதவிகிதத்துக்கு மேல் பயன்படுத்த முடியாது. ஜூன் முதல் நவம்பர் வரை அதிக மழை நாட்களில், உபரித் தண்ணீரெல்லாம் கடலுக்குத்தான் போகிறது. ஆக, கங்கை - காவேரி இணைப்பு இல்லாவிட்டாலும் ஆரம்பக் கட்டமாக மகாநதி - காவேரி இணைப்புக்கு வழிவகுக்கலாம். பிறகு விஸ்தரித்துக் கொண்டு போகலாம்.

ஆனால் இதற்கு நாளாகும். இன்று உடனடிப் பிரச்னை காவேரி நதிநீர் பற்றியது. 1925 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி நமக்கு 250 டி. எம். சி. அளவு ஒதுக்கப்பட்டது. அவர்களுக்கு 300 என நினைவு. அதற்கேற்ப இருதரப்பும் ஐம்பது ஆண்டுகளில் வளர்ச்சி செய்து கொள்ள வேண்டும் என்பது ஒப்பந்தம். நாம் நிறைய வளர்ச்சி செய்து கொண்டு விட்டோம். முதலில் அங்கு கிருஷ்ணா அணை - நாம் மேட்டூரில் போட்டோம். இந்த இரண்டுக்கும் மழை அளவு, நீர் வரத்துப் பற்றி எஞ்சினியர்கள் புள்ளி விவரங்களைத் தயாரித்தார்கள். புள்ளி விவரங்களைப் பரிமாறிக் கொண்டார்கள். நாம் கீழ்பவானியும், அமராவதியும் கட்டினோம். அவர்கள் இவை பற்றிய புள்ளி விவரங்களைக் கேட்டார்கள். நாம் தர மறுத்து விட்டோம். அதனாலே அவர்கள் பின்னால் தாமதமாகப் பல அணைகள் கட்டிய போது நமக்கு விவரங்கள் தரவில்லை.

1965 ஆம் ஆண்டில் அவர்கள் பக்தவத்சலத்திடம் வந்தார்கள். உங்களுக்கு 250 டி. எம். சி. தான் உண்டு. ஆனால் நீங்கள் 380 பயன்படுத்துகிறீர்கள். நாங்கள் இப்போதுதான் அணைகட்டத் தொடங்கியிருக்கிறோம். எங்கள் ஒதுக்கீட்டில் எடுக்க வேண்டாம். நீங்கள் பயன்படுத்துகிற அளவைக் குறைத்துக் கொள்ளுங்கள். அடுத்த பத்து ஆண்டுகளில் வேறு ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுங்கள் என்றார்கள். அது காமராஜ் பக்தவத்சலம் காலம். நம்முடைய அதிகாரிகள் 'அது எப்படிக் குறைப்பது?' என்று மறுத்தார்கள்.

எழுபதுகளின் மத்தியில் மறுபடியும் அந்தப் பேச்சு வந்தது. இடையில் மழை அளவும் குறைந்து போய் விட்டது. 1925 - 1975க்கு இடையில் சராசரி மழை அளவை வைத்து அவர்கள் இரண்டாவது கணக்குப் போட்டார்கள். ''இனிமேல் முன்மாதிரி தண்ணீர் தர முடியாது. இப்போதைய மழை அளவை வைத்துத்தான் கணக்கிட வேண்டும்'' என்று பிரச்னையைக் கிளப்பித் தண்ணீர் விட மறுத்தார்கள்.

நாம் 320 டி. எம். சி. அளவிலேயே விடாப்பிடியாக இருந்தோம். அவர்கள் குறைக்கத்தான் வேண்டும் என்றார்கள். மொத்த மழை அளவு குறைந்து போயிருப்பது என்னவோ உண்மை. அதை வைத்து நாமும் சற்று விட்டுக் கொடுக்கலாம். ஆனால் தருகிற தண்ணீரை ஒரேயடியாகப் பருவ மழைக் காலத்தில் வெள்ளம் வரும் போது தராமல் பரவலாகத் தர வேண்டும் என்று நாம் கேட்கலாம். மழைப் பருவத்தில் வெள்ளம் வரும் போது ஒரேயடியாகத் திறந்து விடுகிறார்கள். அப்புறம் 'கணக்குப்படி தண்ணீர் கொடுத்தாச்சு' என்பார்கள். இது சரியில்லை.

நமக்குத் தேவைப்படும் போது விகிதாசாரப்படி, பங்கிட்டுத் தண்ணீர் விட்டால் தான் வசதி. மொத்த அளவைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டாலும் இதற்கு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

**கா**மராஜ், பக்தவத்சலம் இருவரும் மிகுந்த செல்வாக்கோடு இருந்த காலத்தில் அவர்கள் இரண்டு நாட்கள் பெங்களூர் போய்ப் பேச்சு வார்த்தை நடத்தியிருந்தால் அப்போதே பிரச்னை முடிந்திருக்கும். ஆனால் அவர்கள் அப்போது இதை ஒரு பெரிய பிரச்னையாகவே எண்ணாமல் போய் விட்டார்கள்.

கருணாநிதி முதலமைச்சராக இருந்த போது டெல்லி வரை போய்ப் பேசி விட்டு, நீதிமன்றத்தில் வழக்கு எல்லாம் போட்டு, பின்னர் இந்திரா காந்தி சொன்னார் என்பதற்காக வழக்கைத் திரும்பப் பெற்றார். அது கண்ணியமான செயல்தான் என்றாலும் அத்துடன் நில்லாமல் அவர் டெல்லி போய் இந்திரா அம்மையாரிடம் அமர்ந்து பேசி முடிவு பண்ணியிருக்கலாம். அப்படிச் செய்யவில்லை. இதனால் சிக்கல் ஏற்பட்டது.

எந்த அரசாங்கமும் மத்திய அரசின் உதவியோடுதான் மாநிலத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட முடியும். இப்போது உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பு அளித்திருந்தாலும் அதிலேயே பேச்சு வார்த்தைக்கும் இடம் வைத்திருக்கிறார்கள். பேசுவதில் தவறே இல்லை. மத்திய அரசின் நல்லெண்ணத்தைப் பயன்படுத்திக் கொண்டு இரு தரப்பினரும் வறட்டு கௌரவம் பாராமல் கொஞ்சம் விட்டுக் கொடுத்து ஒரு நல்ல முடிவுக்கு வருவதுதான் உசிதம்.



"பிச்சையே போடாத அந்தக் கோடி வீட்டு அம்மாகிட்டே இருந்து, எப் படிப் பிச்சை வாங்கினே?"

"அதெல்லாம் ஒரு டெக்னிக்! 'அம்மா... மாமியாரை அடக்கி ஆள்கிற மகராசி'ன்னு சொல்லி, பிச்சை கேட்டேன்!"

– ராஜாசிங் ஜெயக்குமார்



"அந்தப் பொண்ணு பெரிய வாயாடின்னு தெரிஞ்சும் எப்படிக் கல்யாணம் பண்ணிக்கிட்டாரு?"

"பொண்ணோட அப்பா தங்கத்துல ருத்திராட்ச மாலையும், திருவோடும் வாங்கித் தர்றதாச் சொன்னாராம்!"

– எம். ஜே. ஆர்.



"தலைவர் ரொம்ப நொந்து போயிருக்கார்னு தோணுது."

"எப்படிச் சொல்றீங்க?"

"கல்யாணத்துல மணமக்களை வாழ்த்திப் பேசும் போது, அரசியலைப் பற்றி எதுவுமே பேசலையே...!"

– சீர்காழி வீ. ரேவதி



**ஸௌந்தரா கோவிந்தராஜன்**

பனியான உன் பார்வை படுமிடத்து எனக்கென்று
தனியான குடிலொன்று வேண்டும்.
மணியான உன் மேனி எழில்போல அக்குடிலும்
அணியாக அமைந்திடுதல் வேண்டும்.
கனிவான உன் கருணை, அருளான அமுதமழை,
இனிதான சுகமதுவும் சூழ.....
கண்ணான குடிலுக்குக் காப்பாகக் காவலனாய்க்
கண்ணா, நீ குடியேற வேண்டும்.

குடிலென்று சொன்னாலும் கல்லாலும் மண்ணாலும்
வடிவாகக் கட்டியது இல்லை;
நெடிதான உடலுக்குள் மனமென்று பேர்பெற்ற
துடியான இடமொன்று உண்டு.
மனமென்னும் குடிலுக்குள் எளிதாகக் குடியேற
மயக்கங்கள் பலவேறு உண்டு;
மடியான எண்ணங்கள், மாளாத ஆசைகள்
மனதுக்குள் மண்டுவது உண்டு.


# கண்ணா நீ காப்பாக வேண்டும்



தீராத தாகங்கள், தேறாத தாபங்கள்,
நேராக வந்துள்ளே நிற்கும்;
அழகற்ற காமங்கள், அளவற்ற கோபங்கள்
அழையாமல் வந்துள்ளே சேரும்.
பொய்யென்றும் பயமென்றும் பொல்லாத குணமென்றும்
மெய்யாக மனதிற்குள் படியும்;
யானென்ற அகங்காரம், அறியாமை, அழுக்காறு
தானாக வந்துள்ளே சேரும்.

மாசான இவையாவும் மனமென்னும் குடிலுக்குள்
தூசாகப் பரவாமல் காக்க -,
மாசற்ற மனதுக்குள் மாதவனே, நீ வந்து
தேசுடனே குடியேற வேண்டும்.
உயர்வான உள்ளத்துள் உத்தமனே, நீ மட்டும்
ஒயிலாக உட்கார வேண்டும்.
கசடான எண்ணங்கள் கடிதாக நுழையாமல்
கண்ணா, நீ காப்பாக வேண்டும்.

50



பொன்விழா
கவிதைப்
போட்டி

# ஆச்சரியங்களுக்கும்

மீண்டும் மீண்டும் இந்தக் குழப்பம். முன்பொரு முறையும் 402 என்று கேட்பதற்குப் பதிலாக 420 என்று கேட்டுவிட்டு யாரோ ஊர் பேர் தெரியாத தடியன் அவனுடைய கேலிச் சிரிப்பை அடக்கிக் கொண்டு சொன்ன பதிலைக் கேட்க வேண்டியதாயிற்று. ''420 என்று ஒரு ஃப்ளைட்டும் கிடையாது, மேடம்.''

''டெல்லி ஃப்ளைட்.''

''402. இன்றைக்குள்ள நிலவரத்தின்படி சுமார் இரண்டரை மணி தாமதமாகக் கிளம்புகிறது.''

''மை காட்! அப்போது எத்தனை மணிக்கு டெல்லி போய்ச் சேரும்?''

''இரண்டே கால் மணி நேர ஃப்ளைட், மேடம். சுமார் பத்தரை மணிக்குப் போய்ச் சேரும்.''

பத்தரை மணி! அந்த நடுநிசியில் தண்ணீரை உறையவைக்கும் குளிரில் அனுபமா டெல்லி விமான நிலையம் வந்து காத்திருப்பாள். அம்மாவும் பெண்ணுமாக இருக்கும் பெட்டி படுக்கையோடு அனுபமாவின் சின்னஞ்சிறு அறையில் சுருங்கிக் கொள்ள வேண்டும்.



திபங்கர் பருவா அவள் அறைக்கு வந்தான். ''யூஜிசிக்கு நாம் அனுப்பித்த மனுக்களின் ஃபைல் அனுப்பித்தேனே, வந்ததா?'' என்று கேட்டான்.

''அதுவே நாலு கிலோ இருக்கும் போலிருக்கிறதே. ஃபைலையே தூக்கிக் கொண்டு போக வேண்டுமா? கடைசியாக அனுப்பித்த கடிதம் மட்டும் போதாது?''

''டெல்லி விஷயம் தெரியாது மாதிரி பேசுகிறாயா? ஒரு புள்ளி, செமிகோலன் சரியாக இல்லையென்று தட்டிக் கழித்து விடுவார்களே?''

''சரி, சரி.''

''கட்டாயம் யஷ்பாலைப் பார்த்துச் சொல்லி விட்டு வா, மம்தா.''

''முயற்சி செய்கிறேன்.''

ஒருகணம் திபங்கரின் முகவாயில் தொங்கிய தாடி துடித்து அடங்கியது போல மம்தாவுக்குத் தோன்றிற்று. ஐந்தடி கூட இல்லாத இந்த திபங்கருக்கு பிரெஞ்சு தாடி என்ன வேண்டிக்கிடக்கிறது? அவன் சர்க்கஸ் பபூன் மாதிரியே இருந்தான். ஆனால் இவன்தான் சிறிது நாட்களாக அவளுக்கு வேட்டு வைத்துக் கொண்டிருக்கிறான். 'என் டிபார்ட்மெண்ட் புரொபஸருக்கு

**அசோகமித்திரன்**

# நினைவில்லை

யூனிவர்சிடி வேலையை விட ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருப்பதுதான் முக்கியம். பூஜாவுக்கு முன்பும் பின்பும் ஆறு வாரம் டிபார்ட்மெண்ட் பக்கமே தலைகாட்டவில்லை.'

அந்த ஆறு வாரத்தில் அவள் இரண்டு முறை பம்பாயும் ஒரு தடவை திருவனந்தபுரமும் போய் விட்டு வந்தது நிஜந்தான். ஆனால் அவ்வளவு இடங்களிலும் கல்கத்தாவை விட அதிகமாகவே அவளுக்கு ஆஸ்துமா வந்து விட்டது. நர்சிங் ஹோமில் கிடந்து ஆக்சிஜன் வைத்துக் கொள்ளக் கூட வேண்டியதாயிற்று. ஐம்பது வயதுப் பெண்மணிக்குச் சொல்லக்கூடியதும் சொல்ல முடியாததுமான உடல் தொந்தரவுகள் எவ்வளவு வரும், எப்படி வரும் என்று இந்தச் சித்திரக் குள்ளனுக்குத் தெரியுமா? ஆப்பிரிக்க இலக்கியத்தின் ஆணிவேர் அறிந்தவன் லத்தீன் அமெரிக்கப் புனைகதையின் ஆன்மா உணர்ந்தவன் என்று ஊரில் இருக்கும் குடிகாரக் கிழங்கள் அவ்வளவு பேரிடமும் பீத்திக் கொண்டு வரும் இந்தக் கோமாளிக்கு அவன் பெண்டாட்டியின் தலைவலியும் முழங்கால் வலியும் எதனால் என்று தெரிந்திருந்தால் அவள் இவனை விட்டு எங்கோ கண் காணாத இடத்துக்குப் போயிருப்பாளா? உன் பெண்டாட்டியிடமிருந்து கடைசியாக எப்போது கடிதம் வ்ந்தது? இரண்டு வருஷம் இருக்குமா?

அப்படிக் கேட்டு விட அவள் வாய் துடிதுடித்தது. சென்ற முறை அவன் திருப்பிக் கேட்டான் : டாக்டர் தாஸ் குப்தா போன மாதம் முழுதும் கல்கத்தாவில் இருந்தாராமே, நீங்கள் பார்த்தீர்களா?

தாஸ்குப்தா அவளுடைய கணவன். அவளுடைய ஒரே பெண்ணின் தகப்பன். நீயும் உன் திமிரும், எக்கேடு கெட்டுப் போடி கழுதையே என்று சொல்லி விட்டுப் போய் அவளை உண்மையாகவே ஒரு கழுதையாக உணர வைப்பவன். இருபது வருஷமாக அவன் அவளுக்காகவோ அனுபமாவுக்காகவோ ஒரு பைசா தரவில்லை, ஆனால் அவள் இன்னும் அவன் பெயரைச் சுமந்து கொண்டிருக்கிறாள். இன்றைக்கும் மிஸஸ் தாஸ் குப்தா. டாக்டர் மிஸஸ் மம்தா தாஸ் குப்தா, புரொபசர், ஒப்பியல் இலக்கியத் துறை, செராம்பூர் யூனிவர்சிடி. இந்தியாவிலேயே



மிகவும் வலுவான ஒப்பியல் இலக்கியப் பிரிவு என்று பல்கலைக்கழகங்களிடையே பெயர் பெற்றது. வெளியுலகத்துக்கு அதிகம் பரிச்சயம் இல்லாது போனாலும் கல்வித் துறையின் நடுவில் இந்தியா மட்டுமின்றி, வேறு பல நாடுகளிலும் அவளையும் திபங்கரையும் நன்கு தெரியும். அவர்களுடைய கட்டுரைகள் பல தொகுப்புகளில் சேர்க்கப்பட்டு எங்கோ ஓர் ஆராய்ச்சி மாணவன் என்னதான் இதில் இருக்கிறது என்று அந்த நூலைப் புரட்டுவதற்கு முன், கல்லூரி நூலகங்களில் கட்டாயப்படுத்தி வாங்கப்பட்டுத் தூங்கும். இப்போது அவள் டெல்லி போவதும் அப்படியொரு கட்டுரை படிப்பதற்குத்தான்.

ஒரு கையில் கட்டுக் காகிதங்களும் இன்னொன்றில் ஒரு பையுமாக மம்தா அறையை விட்டு வெளியே வந்தாள். டெல்லி விமானம் உரிய நேரத்தில் கிளம்புவதாயிருந்தால் அவள் இவ்வளவு நிதானமாக இருக்க முடியாது. இப்போது ரயிலில் வீட்டுக்குப் போகாமல் ஆட்டோரிக்ஷாவிலேயே போகலாம். எல்லாரும் அவசரத்துக்கு ஆட்டோ, டாக்சி என்றுதான் நினைத்துக் கொண்டிருப்பார்கள். இந்தக் கல்கத்தாவில் எல்லாம் தலை கீழ். அவசரத்துக்கு மின்சார ரயில். நின்று நிதானமாக ஒவ்வொரு டிராஃபிக் ஜாமிலும் ஒரு முழு செய்தித்தாளைப் படிக்கலாம் என்றால் சொந்தக்கார் அல்லது டாக்சி. ஆனால் நேரம் இருக்கிறது என்பதற்காக வீணடிக்க வேண்டுமா? மம்தா ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் ஏறிக் கொண்டு, ரயில்வே ஸ்டேஷன்,'' என்றாள்.

வாசல் மணியடித்தது. டிரைவர் ஹுசேன்.

''புதுசா வந்திருக்கிற இன்ஸ்பெக்டருக்கு விடா முயற்சியும் தன்னம்பிக்கையும் அதிகம்.''
''அப்படியா...?!''
''ஆமா சார்... ஏற்கெனவே உள்ளவங்க கை கழுவின கேஸ்களையெல்லாம் கூட தேடிக் கண்டு பிடிச்சு மாமூலை வசூல் பண்ணிட்டார்!''

- சீர்காழி வி. ரேவதி



''நீ சாப்பிட்டு விட்டாயா?''

''உங்களை ஏர்போர்ட்டில் விட்டு விட்டுச் சாப்பிடலாம் என்றிருந்தேன், மேம் சாப்.''

''நாலு மணிக்குக் கிளம்பினால் போதும். இன்றைக்கு பிளேன் இரண்டு மணி லேட். நீ பக்கத்திலேயே எங்காவது சாப்பிட்டு விட்டு வா. முதலில் எனக்கு ஏதாவது வாங்கிக் கொடுத்து விட்டுப் போ.''

''என்ன வேண்டும், மேம் சாப்.''

''சாப்பிடுவதற்குத்தான். ஷிங்காராவும் ரசகுல்லாவும் போதும்.''

''கொண்டு போவதற்கு வேண்டுமா, மேம் சாப்?''

''வேண்டாம். நான் எடுத்துப் போனால் யாருக்கும் பிடிக்கிறதில்லை.''

மூன்றரைக்கே ஹுசேன் அவள் அறைக் கதவைத் தட்டினான். அவள் கேட்டாள், ''நாலு மணிக்குப் போகலாம் என்று சொன்னேனே?''

''அந்த வேளைக்கு டிராஃபிக் ஜாஸ்தியாக இருக்கும், மேம் சாப். இப்போதே கிளம்பினால் கூடப் போய்ச் சேருவதற்கு ஐந்தரை ஆறு மணி கூட ஆகி விடும்.''


''அவ்வளவு நேரம் ஆகுமா?''

''கனால் ரோடு முழுதும் பைப் போடத் தோண்டிப் போட்டிருக்கிறார்கள். ஒரே வரிசையில்தான் வண்டிகள் போக முடியும். சியால்டா பக்கம் போனாலும் அதே நேரம் தான் ஆகும். இன்னும் அதிகம் கூட ஆகும்.''

''சரி, காரை ரெடி பண்ணு. இதோ வந்து விட்டேன். அப்புறம் நாளைக்குச் சங்கர்தா வீட்டுக்குப் போன் பண்ணுறேன். நீ அவரிடம் வந்து விசாரித்துக் கொண்டு போ எப்போது வண்டியை ஏர்போர்ட் கொண்டு வர வேண்டும் என்று.''

ஹுசேன் சரியாகத்தான் சொல்லியிருந்தான். அந்த வண்டி அவளுக்குக் கல்யாணம் ஆன வருடம் வாங்கியது. ஹுசேனும் அப்போது வந்தவன்தான். அவள் கணவனிடமிருந்து அவளிடம் தங்கிப் போன மிகச் சிலவற்றில் இந்தக் காரும் ஹுசேனும் அடங்கும். இரண்டுக்கும் கிழடு தட்டி விட்டது. இரண்டுமே பகுதி நேர உடைமைகள்.

இண்டியன் ஏர்லைன்ஸில் விமானம் புறப்படுவது இரண்டு மணி நேரத்துக்கு மேல் தாமதம் என்றால் விமானத்தில் தர வேண்டிய உணவைத் தரையிலேயே தந்து விடுவார்கள். அவள் இனாமாகத் தருகிறானேயென்று வேளை கெட்ட வேளையில் சாப்பிட்டு விட்டால் மீண்டும் உடம்பு சரியாக நான்கு நாளாகும். அனுபமா அம்மா




வோடு சாப்பிடலாம் என்று ஆசையோடு காத்திருப்பாள். எவ்வளவோ ஆர்வத்தோடும் நிறைய யோசனைக்குப் பிறகும் இதுதான் அம்மாவுக்கு இன்றைக்கு மிகச் சிறந்த உணவு என்று அவள் அழைத்துப் போய் ரெஸ்டாரண்ட் பணியாளனிடம் ஒரு பட்டியல் அடுக்கத் தொடங்குவாள். அவ விடம் ''எனக்கு ஒன்றும் வேண்டாம் போலிருக்கிறதே,'' என்று சொன்னவுடன் முகம் அறுந்து தொங்கும். தனியாக ஓர் இடம் கிடைத்தால் அழுது விடுவாள். சென்ற முறை டெல்லி வந்து தங்கிய நான்கு நாட்களும் அம்மாவும் பெண்ணும் நேருக்கு நேர் பேசிக் கொள்ள முடியவில்லை. ஆனால் மம்தா ஊர் திரும்புவதற்கு முன்பு அனுபமாவின் கடிதம் காத்திருந்தது. வாரத்துக்கு இருமுறை டெலிபோனில் பேசி விடுவாள். அனுபமா வசித்த கட்டிடத்தில் டெலிபோன் வசதி கிடையாது. ஆதலால் ஒவ்வொரு முறையும் அனுபமாவாகத்தான் அவளுடன் பேச வேண்டும். அவள் ஏழு மணியிலிருந்து டெல்லி விமான நிலையத்தில் காத்திருப்பாள். அம்மா வந்தபின் சாப்பிடலாம் என்று பட்டினியுடன் இருப் பாள்.

**அ**ன்று விமானத்தில் தர வேண்டிய உணவைத் தரையில் தரவில்லை. ஒன்பது மணி சுமாருக்குப் பூமியிலிருந்து நான் கைந்து மைல் உயரத்தில் ஆகாயத்தில் மிதக்கும் போதுதான் கொடுத்தார்கள். இன் னும் ஒரு மணி நேரத்தில் அனுபமாவுடன் ஒருமுறை சாப்பிட வேண்டிவரும்.

மம்தா டீ மட்டும் குடித்து விட்டுக் கண் களை மூடிக் கொண்டாள். வழக்கம் என்பது எவ்வளவு அம்சங்களில் தெரிய வந்து விடுகிறது? கருத்தரங்குக்காகப் போகிறாள், கட்டுரையை இன்னும் எழுதவில்லை. கட்டுரை பற்றி நினைக்கக் கூட ஆரம்பிக்க வில்லை. எல்லாக் கருத்தரங்குக்காரர்களும் எல்லாக் கட்டுரைகளும் ஒரு மாத முன்பே அனுப்பப்பட வேண்டும் என்றுதான் சொல்லியிருப்பார்கள். சிலர் அவ்வாறே அனுப்பியும் இருப்பார்கள். ஆனால் கருத் தரங்குப் பெருச்சாளிகள் என்பவர்கள் கருத் தரங்கு தினத்தன்றுதான் கட்டுரையைத் தயாரித்திருப்பார்கள். கருத்தரங்கு நடத்து பவர்களுக்கும் இது நன்கு தெரியும். ஆனால் சில பெருச்சாளிகளாவது இல்லாமல் எந்த ஒரு கருத்தரங்கும் மரியாதைக்குரிய அந்தஸ்தை அடைய முடியாது. மம்தாவும் ஒரு பெருச்சாளியாகிப் பல ஆண்டுகள் ஆகிறது.

**டெ**ல்லியில் குளிருடன் பனியும் லேசாகப் பெய்ய ஆரம்பித்திருந்தது. விமா



''இது அரசியல்வாதி வீட்டுக் கல்யாணமா இருக்கலாம். அதுக்காக மொய்ப் பணம் வாங்கினது மட்டுமல்லாமல் உண்டியல் வேற குலுக்கறது கொஞ்சம்கூட நல்லா இல்லை!''

- எஸ். முகம்மது யூசுப்

ணத்தினுள்ளேயே கோட்டை அணிந்து கொண்டது நல்லதாகப் போயிற்று. விமானத்திலிருந்து நிலையத்துக்கு அழைத்துச் செல்ல வந்த பஸ்கள் மட்டும் குளிரவில்லை. ஜன நெரிசல் எதற்கு நல்லதோ இல்லையோ குளிருக்கு இதமாக இருக்கிறது.

மம்தா சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். இரவு பத்து மணிக்கு அங்கே இருந்த சூழ்நிலை விமான நிலையத்துக்குத்தான் பொருத்தம். எல்லாரும் அவ்வளவு அசாதாரண சுறுசுறுப்போடும் விழிப்போடும் இயங்கினார்கள். அனுபமாவைக் காணவில்லை. டெல்லியில் தனியாக வசிக்கும் இளம் பெண் விமான நிலையத்தில் இரவு பத்து மணிக்கு வந்து காத்திருக்கவில்லை என்று குறைகூற முடியாது. ஆனால் மம்தாவால் மட்டும் இந்த வேளையில் தனியாக எந்த இடத்துக்குப் போக முடியும்? அனுபமாவுடன் தங்கி விடலாம் என்ற எண்ணத்தில் அவளுக்குத் தங்க எந்த ஏற்பாடும் செய்ய வேண்டாம் என்று எழுதியிருந்தாள். இப்போது முடியுமோ முடியாதோ அனுபமாவின் அறைக்குத்தான் போக வேண்டும். அது டெல்லியின் மறுகோடி என்று அனுபமா சொல்லியிருந்தாள். டாக்ஸி கட்டணம் இருநூறு ரூபாயாகி விடும். அந்த இருநூறு ரூபாயை ஹோட்டல்காரனுக்குக் கொடுத்தால் இரவு போர்த்திக் கொள்ளக் கம்பளியும் குளிக்கப் புது சோப்பும் துண்டும் தருவான்.

தள்ளுவண்டியில் பெட்டியையும் பையையும் வைத்துக் கொண்டு விமான நிலைய வெளிவாசலை நெருங்குகையில் திபங்கர் ஞாபகம் வந்தது. அவன் சகோதரி ஒய்வுபெற்ற கல்லூரிப் பேராசிரியை. தென் மோதிபாக்கின் தென்கோடியில் இருந்தாள். பலமுறை மம்தாவை வீட்டுக்கு அழைத்திருக்கிறாள். 'விமான நிலையத்திலிருந்து நகருக்கு வரும்போதோ விமான நிலையத்துக்குப் போகும்போதோ வந்து டீ குடித்து விட்டுப் போ' என்று குறைந்தது மூன்று முறையாவது கூறியிருப்பாள். டீ என்ன, இந்த இரவே உன் கூரையடியில் தான் என்று சொன்னால் என்ன?

கைப் பையிலிருந்து குறிப்புப் புத்தகத்தை எடுத்து மம்தா அதில் 'திபங்கர்' என்ற தலைப்பில் இருந்த முகவரிகளைப் பார்த்தாள். அருணா கோஸ் டெல்லி முகவரியும் தொலைபேசி எண்ணும் இருந்தது. பகல் நேரமாயிருந்தால் நேரே வீட்டுக்கே போய் விடலாம். இந்த நள்ளிரவில் வீட்டைத் தேடிப் போக, அவள் வேறெங்காவது வெளியூர் சென்றிருந்தால் அந்த அடுக்குக் கட்டிடங்களில் அக்கம் பக்கத்தில் விசாரிப்பது கூட அசாத்தியம். மம்தா தள்ளுவண்டியை ஒரு தொலைபேசிக்கருகில் நிறுத்திக் கொண்டு திபங்கரின் சகோதரி எண்ணைச் சுற்றினாள். முதல் முறை மணியடித்தபோதே மறுமுனையில் டெலிபோன் எடுக்கப்பட்டு விட்டது. ஹலோ என்று பதிலுக்குக் கேட்ட ஆண் குரலிடம், ''அருணா கோஸ் இருக்கிறாளா?'' என்று மம்தா கேட்டாள்.

''யார் பேசுவது?''

''மம்தா பானர்ஜி.''

''கல்கத்தாவிலிருந்தா?''

''ஆமாம். ஆனால் நான் இப்போது பாலம் ஏர்போர்ட்டிலிருந்து பேசுகிறேன்.''

''எப்படி இருக்கிறாய், மம்தா? செளக்கியமா?''

''யாரது?''

''இவ்வளவு மறந்து விடலாமா?''

மம்தாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அது அவளுடைய கணவன்.

''கவலைப்படாதே. அனுபமாவும் இன்று இங்குதான் இருக்கிறாள்.''

''அனுபமாவா? எதற்காக?''

''அப்பாவைப் பார்க்க வரக் கூடாதா?''


''அவளுக்கு நான் இன்று வருவது தெரியாதா?''

''தெரியுமே? ஏர்போர்ட்டிலிருந்து உன்னை அழைத்து வர என் காரை எடுத்துப் போயிருக்கிறாளே? நீ அவளைப் பார்க்கவில்லை?''

மம்தாவுக்கு ஒருகணம் மூளை ஓடவில்லை. இந்தப் பெண் எவ்வளவு நாட்களாக அவளுடைய அப்பாவைப் பார்த்து வருகிறாள்? அந்த மனுஷனுக்கு திபங்கரின் சகோதரி வீட்டில் என்ன வேலை?

மம்தா டெலிபோனைக் கொக்கியில் மாட்டி விட்டுத் திரும்பினாள். அனுபமா, ''ஹலோ மம்மி,'' என்று சொல்லி அவளைக் கட்டிக் கொண்டாள். மம்தாவுக்கு அவளை யாரோ தாடியால் உரசுவது போலிருந்தது.

கருத்தரங்குப் பெருச்சாளிகளுக்குக் கருத்தரங்கு தினத்தன்று காலை இரண்டு மணி நேரம் கிடைத்தால் போதும், கட்டுரை தயாராகி விடும். மம்தாவுக்கு அது இம்முறை சாத்தியமாகாது என்று தெரிந்து விட்டது.




# 69ம் பெற்றுப் பெருவாழ்வு!

● மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த ஆனந்தி எனும் பெண்மணியே டாக்டர் படிப்பு முடித்துப் பட்டம் பெற்ற முதல் இந்தியப் பெண். இலண்டன் மருத்துவக் கல்லூரியில் 1886ல் இவர் பட்டம் பெற்றார்.

● சோழர் காலத்தில், சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்ட சிறு கிராமம்தான் இன்றைய சேலம்.

● எக்ஸோபயாலஜி (Exobiology) என்றால் என்ன தெரியுமா? வேற்று கிரக உயிரினங்கள் குறித்த ஆய்வு.

● உலகின் முதல் சோதனைக் குழாய்க் குழந்தை என்ற பெருமைக்குரிய லூயிஸ் பிரவுனிற்கு இப்போது பதின்மூன்று வயதாகிறது. இந்தியாவின் முதல் சோதனைக் குழாய்க் குழந்தை என்ற பெருமைக்குரிய வர்ஷா சௌடா (பிறந்த தேதி ஆகஸ்ட், 6, 1986) தற்போது, பம்பாய் அந்தேரியில் உள்ள பள்ளியொன்றில் முதல் வகுப்பு படிக்கிறாள். தமிழகத்தின் முதல் சோ. கு. குழந்தை, சென்னை ஜி. ஜி. ஆஸ்பத்திரியில் 1990 ஜூலையில் பிறந்தது. இந்த வெற்றிக்குக் காரணமான டாக்டர் கமலாவின் பெயரையே பெற்றோர், அந்தக் குழந்தைக்குச் சூட்டினர்.

● பங்களாதேஷ் நாட்டின் தலைநகர் டாக்கா. அதன் நாணயம் டாகா.

● ரஷ்யாவைச் சேர்ந்த பியோடர் வாசில்வேவ் (1707-1782) என்பவரின் முதல் மனைவி உலகிலேயே அதிக எண்ணிக்கையில் குழந்தைகளைப் பெற்றெடுத்தவர் என்ற பெருமைக்கு உரியவர். இவருக்கு 69 குழந்தைகள். இவர்களில் 16 இரட்டையர். ஏழு தடவை மூன்று குழந்தைகளும், நாலு தடவை நாலு குழந்தைகளும் பெற்றெடுத்தார்.

● ஐ. நா. சபையின் புதிய செயலராய்ப் பொறுப்பு ஏற்றுள்ள பொட்ரோஸ் காலி முந்நாளில் எகிப்தின் துணைப் பிரதமர். வயது 69. ஆப்பிரிக்கப் பகுதியிலிருந்து, முதல் தடவையாய் ஐ. நா. சபை செயலர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் இவர், ஐ. நா. சபையின் ஆறாவது செயலர். வருடச் சம்பளம் 1,80,000 டாலர்.

● நோபல் பரிசு பெற்ற இந்தியர்களில் மூன்று வகை உண்டு. இந்தியாவில் பிறந்து பரிசு வாங்கியவர்கள் தாகூரும், சர். சி. வி. ராமனும். இந்தியாவில் பிறந்து அமெரிக்கப் பிரஜைகளாய் மாறி, நோபெல் பரிசு பெற்றவர்கள், கொரோனாவும், சந்திரசேகரும். அயல்நாட்டில் பிறந்து, இந்தியப் பிரஜையாகிப் பரிசு பெற்றவர் அன்னை தெரசா.

● 1990 ஜூலையில் புதிய ரயில்வே சட்டத்தை மத்திய ரயில்வே அமைச்சகம் அறிமுகப்படுத்தியது. அதன்படி ரயில் விபத்தில் இறந்தால் குடும்பத்துக்கு நஷ்ட ஈடு இரண்டு லட்சம் தவிர, டிக்கெட் இல்லாப் பயணம், அபாயச் சங்கிலியைத் தேவையின்றி இழுப்பது, வேறு ஒருவர் பெயரில் பயணம் செய்வது ஆகியவற்றுக்கு அபராதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ரயில்களில் பிச்சை எடுப்பதும் பிரசாரம் செய்வதும் கூடத் தடை செய்யப்பட்டு, மீறினால் ஒரு வருடச் சிறைத் தண்டனை என்கிறது சட்டம்.

● இந்தியாவிலேயே முதல் முறையாகக் கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் முயற்சி, திருவனந்தபுரம் விழிஞம் துறைமுகத்தில் நடந்து வருகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு நாலரை லட்சம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியுமாம். தற்போது ஒரு யூனிட் மின்சாரம் தயாரிக்க இரண்டரை ரூபாய் செலவாகிறது என்றாலும் கூட, நாளடைவில் இதை 75 காசுகளாய்க் குறைக்க முடியும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

ஆதாரம் : மலையாள மனோரமா
(இயர் புக்) 1992 - தமிழ் பதிப்பு
தொகுப்பு : ஜூலி

# கருணாநிதி – ஜெ; நிர்வாகத்தில் என்ன வித்தியாசம்?

● எஸ். சண்முகராஜா, விக்கிரமசிங்கபுரம்.

*? தற்பொழுது நாட்டில் உள்ள பொருளாதார நெருக்கடியில் இ. காங்கிரஸ் நடத்திய ஆடம்பர மாநாடு தேவைதானா?*

! மாநாடு தேவைதான். ஆனால் ஆடம்பரம் தேவையில்லை. ஒரு பக்கம் மக்களுக்குச் சிக்கனத்தைப் போதிக்கிறார்கள். இன்னொரு பக்கம் அதே மக்களைக் கவரும் நோக்கில் தடபுடல்படுத்துகிறார்கள். பின்னதால் கவரப்படும் மக்கள், முன்னதை மறந்து விடுவார்கள்.

● சிசீலியா ஜாய்ஸ், சென்னை.

*? லிபியா மீதான ஐ.நாவின் தடை அடுத்த வளைகுடாப் போருக்கு அடிக்கல் நாட்டியதாகுமா?*

! மற்றுமொரு போரை இன்று யாருமே விரும்பவில்லை. அமெரிக்கர்கள் இரண்டு பயங்கரவாதிகளை விசாரணைக்குக் கேட்கிறார்கள், லிபியா அவர்களை அனுப்ப மறுக்கிறது. இந்தப் பிடிவாதம் வர்த்தகப் பொருளாதாரத் தடை வரை வளர்ந்து விட்டது.

● கே. எம். சிங்காரவேலன், கரடிப்பட்டி.

*? காங்கிரஸ் செயற் குழுவுக்குத் தாழ்த்தப்பட்ட இனத்தவர் யாரும் தேர்ந்தெடுக்கப்படாதது பற்றி...?*

! அதைச் சுட்டிக்காட்டியதோடு பிரதமர் நின்றிருந்தால் தேவலாம். 'நானாயிருந்தால் ராஜினாமா செய்வேன்' என்று கூறப்போக, இன்று கொத்துக் கொத்தாக ராஜினாமா நாடகம் தேர்தலையே அர்த்தமற்றதாக்குகிறது. நல்லவேளை, பிரதமர் ராஜினாமாக்களை ஏற்க மாட்டார் என்பதாகச் சமீபச் செய்தி. நியமன உறுப்பினர்களில் தாழ்த்தப்பட்ட சிலரைச் சேர்த்து விட்டால் நிலைமை சீராகி விடாதோ!

● வீ. சோழன், செம்போடை.

*? வானொலி, 'புதிய பொருளாதாரக் கொள்கை - எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம்' பற்றி ஓயாமல் கூறிக் கொண்டிருக்கிறதே...?*

! புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் பார்த்தால், ஐந்தாண்டுத் திட்டமே அர்த்தமற்றதாகிறது. ஐந்தாண்டுத் திட்டத்தின் அணுகுமுறையையே புதிய கொள்கைக்கு ஏற்ப அடியோடு மாற்றுவதாக இருந்தாலொழிய திட்டக் கமிஷனையே கலைத்து விடலாம். அரசுக்குச் செலவு குறையும். சிக்கன நடவடிக்கையாக விளங்கும்.

● மா. செந்தில்நாதன், மதுரை.

*? 'அரசு நாமதிக்கும் பட்சத்தில் கச்சத்தீவை மீட்கும் போராட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சி ஈடுபடும்' என்று கூறுகிறாரே ராமதாஸ்?*



☛ நிர்வாகத்தில்...



☛ ...என்ன வித்தியாசம்?

! இப்போதுதான் ஜெ அம்மையார் விஷயத்தை ஒருவழியாகப் புரிந்து கொண்டு, 'கச்சத் தீவை மீட்பது சாத்தியமல்ல' என்று சட்டமன்றத்தில் பேசியிருக்கிறார். ராமதாஸ் புரிந்து கொள்ள இன்னும் கொஞ்ச காலம் தேவைப்படும் போலும்!

● எம். கே. தங்கராஜு, நாமக்கல்.

*? இடஒதுக்கீடு வருமானம் அடிப்படையில் அமையும் திட்டம், பல மாநிலங்களால் ஏற்கப்பட்டபோதிலும் பீகார், தமிழ்நாடு மறுக்கிறதே?*

! மாநில அரசியல் சூழ்நிலைகள்தாம் காரணம். ரேஷன் அரிசியை வருமான அடிப்படையில் மட்டுமே தரலாம் என்றால் இடஒதுக்கீடுக்கு ஏன் அதே அளவுகோல் கூடாது? ஜாதி அடிப்படையில் இடஒதுக்கீடு அவசியம் என்று ஏற்கப்பட்டாலும் அதிலும் வருமான அடிப்படையை இணைப்பதே புத்திசாலித்தனம்.

● எம். ராஜேந்திரன், லால்குடி.

*? தமிழக முதல்வரின் ஆலோசக ராகத் தங்களை நியமித்தால்...?*

! ஆலோசகர்களாகத்தானே கல்கி மட்டுமின்றி, வேறு பல பத்திரிகைகளும் ஏற்கெனவே செயல்படுகின்றன.

● வ. நே. பா., சென்னை.

*? பாலமுரளி கிருஷ்ணாவுக்குத் தெலுங்கு தேசம் கட்சி மீது என்ன கோபம்?*

! இவர் ஆஸ்தானப் பாடகராக இருந்த போது பதவிக்கு வந்தார் என். டி. ஆர். 'ஆஸ்தான பாடகர் பதவி என்பது பிரபுத்துவ மனப்பான்மை' என்று கூறி அந்தப் பதவியை ஒழித்துக் கட்டி விட்டார். அதான். மற்றபடி அரசியல் ரீதியாக ஒன்றுமில்லை.

● அ. முஸ்தபா, தக்கோலம்.

*? சினிமாவும் அரசியலும் இந்த அளவு இல்லாதிருந்தால் நாடு உருப்படும் என்று நினைக்கிறேன்...*

! அரசியல் அசிங்கங்கள் மனவருத்தத்தை அளிக்கும் போது அதை மறக்க சினிமா உதவுகிறது; சினிமாவின் பிதற்றல்கள் சோர்வை ஏற்படுத்தும் போது அரசியல் தமாஷ்களைப் பார்த்துச் சிரிக்க முடிகிறது. இதை ஏன் கெடுக்க நினைக்கிறீர்கள்?

● ஸ்ரீராஜ், பம்பாய்.

*? மயிலை கபாலி கோவில் குளத்தை 'ஜெ' இன்று தூர் எடுப்பதற்கும், முன்பு கருணாநிதி தூர் வாரியதற்கும் என்ன வித்தியாசம்?*

! முன்பு கருணாநிதி சுத்திகரிப்புப் பணியை ஆரம்பித்த போது, மண்வெட்டி கொண்டு கொத்த, 'ணங்' என்ற சத்தத்துடன் புதையல் கிடைத்தது! இப்போது இல்லை. மற்றபடி இருவரும் முதல்வர் என்ற முறையில் கடமையைச் செய்யும் போதே நிறைய 'பப்ளிசிடி' தேடிக் கொள்கிறார்கள். அவ்வளவுதான்.

● த. செல்லபாண்டி, சென்னை.

*? தற்போது அரசியலில் விளம்பரப் பிரியர் யார்?*

! கொஞ்சம் வீட்டை விட்டு வெளியே வாங்க ஸார். உங்க ஊர் சுவர்களே பதில் சொல்லுமே!

● மா. பழனிச்சாமி, கோவை.

*? மண்டேலா விவாகரத்து செய்தது முறையா?*

! வின்னி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அவருக்கு வேறு வழியில்லாமல் செய்துவிட்டன.

● தஞ்சைத் தரணியன், முத்துப்பேட்டை.

*? வெற்றி கொண்டான் கைது செய்யப் பட்டு விடுதலை செய்யப்பட்டது குறித்து...?*

! அவருடன் நன்னிலம் நடராசன் கூடத்தான். தரக்குறைவான மேடைப் பேச்சுக்கள் தமிழகத்துக்கே தலைகுனிவு என்பதை உணர்ந்து, எல்லா கட்சித் தலைவர்களும் கூடி ஒரு நல்ல முடிவுக்கு வந்து, தொண்டர்களையும் கட்டுப்படுத்த வேண்டும். அதில்லாதவரை, கண்ணாடி வீட்டிலிருந்தபடி கல்லெறியும் கதைதான்.

● ஈ. டி. விஜயகுமார், ஈரோடு.

*? சமீபத்தில் தங்களை மகிழ்ச்சிக்கு உள்ளாக்கிய சம்பவம்?*

! பள்ளிக்கூடங்களில் விவசாயம் ஒரு பாடமாகும் என்ற விவசாய அமைச்சரின் அறிவிப்பு. இந்திய மக்களில் மிகப் பெரும்பான்மையினர் விவசாயிகளே என்பதைப் பார்க்க, இது எவ்வளவு அத்தியாவசியமானது என்பதை உணரலாம். மெக்காலே முறையிலிருந்து விடுபட இதை ஓர் ஆரம்பக் கட்டமாகக் கொண்டு முதல்வரை மனப்பூர்வமாகப் பாராட்டலாம்.

● நெ. மணிமேகலை, சென்னை ❑

*? அரசியல்வாதி - இலக்கியவாதி; இரண்டு பேரில் தங்களைக் கவர்ந்தவர் யார்?*

! இரண்டும் இணைந்தால் அதன் சிறப்பே அலாதிதான். உதாரணமாகச் சுற்றுச் சூழல் மாசு பற்றி எல்லாரும்தான் பேசுவார்கள். ஆனால் சி. எஸ். சென்னை வந்த போது என்ன சொன்னார் தெரியுமா? ''முதலில் மனமாசை அகற்றப் பார்ப்போம்'' என்றார். வாஸ்தவமான பேச்சு. மனமாசு நீங்கினால் சுற்றுச் சூழல் மாசு 95 சதம் தன்னால் நீங்கி விடாதோ! சி. எஸ்.ஸின் இந்த இலக்கிய ரீதியான சிந்தனை ராஜாஜியிடம் கற்றதாகத்தான் இருக்க முடியும்!



☛ கச்சத்தீவு மீட்பு!



☛ விவாகரத்து முறையா?



☛ என்ன கோபம்?



☛ இலக்கிய சிந்தனை

❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
நெ. மணிமேகலை,
4, ஆஞ்சநேயர் கோவில் தெரு,
வேங்கைவாசல்,
மாடம்பாக்கம்,
சென்னை - 600 073.

# ஐம்பது ஆண்டுகளுக்கு முன்...

## கல்கி மே 1, 1942


### போக்கும் வரவும்

சென்னை சர்க்காரும் சென்னை வாசிகளும் யுத்த பீதியில் அகப்பட்டுக் கொண்டிருந்த போது, வீர தீரத்துடன் எல்லாரையும் தாக்கிப் பரிகாசம் செய்த பெருமையை "மெட்ராஸ் மெயில்" அடைந்தது. சென்னையிலிருந்து ஓடிய பெண்களைக் கூட "மெயில்" இலேசில் விட்டு விடவில்லை. "உங்கள் தைரியம் எங்கே போச்சு?" என்று வீரத்துடன் கேட்டது. ஓட்டம் பிடித்த வெள்ளைக்காரர்களையும் பாரபட்சமின்றித் தாக்கிற்று. கடைசியில் சென்னை சர்க்கார் காரியாலயங்களையும் விட்டு விடாமல், "ஓடும் போது மூன்று நாளில் ஓடினீர்களே? திரும்பி வர முப்பது நாள் என்னத்திற்கு?" என்று பரிகாசம் செய்தது.

*- என்ன சேதி*

### பிரசித்தமான தோல்வி

பிரசித்தமான 'தோல்வி' அடைந்த இரு பிரமுகர்கள் இந்த இதழின் அட்டையில் விளங்குகிறார்கள். இருவருக்கும் பல விதத்தில் ஒற்றுமையுண்டு. இருவரும் பெயர் பெற்ற வக்கீல்களாயிருந்து பெரும் பணம் சம்பாதித்து வந்தவர்கள்; இரண்டு பேரும் தேசத் தொண்டுக்காகத் தொழிலை விட்டவர்கள். மதி நுட்பத்துக்கும், வாதத் திறமைக்கும், சீலத்துக்கும் இருவரும் பெயர் போனவர்கள். 'தோல்வி'யிலும் அவர்கள் ஒற்றுமைப்பட்டிருக்கிறார்கள்.




இந்தியா சுயராஜ்யம் அடைவதற்கு இது தான் தக்க சமயமென்று கண்டு ராஜாஜி அதற்காகப் பெரும் பிரயத்தனம் செய்து வந்தார். இந்திய அரசியல் பிரச்னையைத் தீர்த்து யுத்த முயற்சியில் பூரண ஒத்துழைப்பைப் பெறலாமென்று கிரிப்ஸ் ஓடோடியும் வந்தார். இருவருடைய முயற்சியும் மற்றவர்களின் தவறுகளினால் பலிக்காமல் போயின. ஆனால், தோல்விக்குப் பிறகு கிரிப்ஸ் தம் முயற்சியைக் கைவிட்டு விட்டார். ராஜாஜி அவ்விதம் சோர்ந்து விட வில்லை; இன்னமும் ஒரு பெரும் பிரயத்தனம் தொடங்கியிருக்கிறார்.

*- அட்டைப்பட விளக்கம்*

### உலக விரோதி நெ. - 2

"உலக விரோதி நெம்பர் - 1" என்ற பட்டத்துக்கு ஹிட்லருடன் போட்டி போடும் ஜப்பான் பிரதம மந்திரி ஜெனரல் டோஜோ இவர்தான். இந்த பகாசுரன் "பிளிட்ஸ்கிரீக்" யுத்த முறையில் ஹிட்லரையும் விழுங்கி ஏப்பம் விட்டு விட்டார். நாலே மாதத்திற்குள் இந்தியாவை விட அதிக விஸ்தீரணமுள்ள பிரதேசங்களைக் கைப்பற்றியிருக்கிறார். அப்படியும் பசி தீராமல் உதட்டை நக்கிக் கொண்டு நாலாபுறமும் பார்க்கிறார்.




இவர் முடிவாகத் தோல்வியடையப் போகும் இடம் ஆஸ்திரேலியாவா, இந்தியாவா, ருஷியாவா என்னும் கேள்வி எழுந்திருக்கிறது. ஒரு வேளை அவருடைய தோல்வி ஜப்பானிலேயேதான் ஏற்படுமோ, என்னமோ, யார் கண்டது?

### மாபெருந் தலைவரின் மனக்குழப்பம்!

அலகாபாத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடியிருக்கும் இந்தச் சமயத்தில் 1936 ம் வருஷம் பெயிஸ்பூரில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் எனக்கு ஞாபகம் வருகிறது.

பெயிஸ்பூர் காங்கிரஸில் அக்கிராசனம் வகித்தவர் ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு. அவ




தான் விஷயாலோசனைக் கமிட்டிக்கும் தலைவர். மேடை மீது அவர் கம்பீரமாக வீற்றிருந்தார். அவருக்குப் பக்கத்திலும் பின்னாலும் மற்ற பிரபல காங்கிரஸ் தலைவர்கள் அமர்ந்திருந்தார்கள்.

எதிரே தரையில் விரித்திருந்த மூங்கில் பாயில் வரிசை வரிசையாக அ. இ. கா. கமிட்டி அங்கத்தினர்கள் உட்கார்ந்திருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் எதிரில் ஒரு சின்ன சாய் மேஜை இருந்தது; அதன் மேல் காகிதமும் பென்ஸிலும் வைத்திருந்தது. அங்கத்தினர் யாராவது திருத்தங்கள் பிரேரேபிக்க விரும்பினால் அந்தக் காகிதத்தையும் பென்ஸிலையும் உபயோகப்படுத்தலாம்.

ஆனால், அச் சமயம் யாருக்கும் பென்ஸில் - காகிதம் உபயோகிக்க அவசியம் ஏற்படவில்லை. ஏனெனில் அப்போது அன்னிய நாட்டுப் பிரச்னைகள் சம்பந்தமான தீர்மானங்கள் வந்து கொண்டிருந்தன. இவைகள் முழுக்க முழுக்க ஜவாஹர்லால் ஜியின் சொந்த சமாசாரம் என்று கருதப்பட்டன. "மிஸ்டர் இன்டர் நேஷனல் லிக்கவேஷன்" என்று அந்தக் காலத்தில்தான் ஜவாஹர்லால் ஜிக்குப் பெயர் ஏற்பட்டிருந்தது. எனவே அங்கத்தினர் யாரும் தீர்மானங்கள் விஷயமாக எவ்வித சிரத்தையும் காட்டவில்லை. சிலர் சாய் மேஜையின் மேல் குனிந்து கொண்டு தூங்குவதற்குப் பிரயத்தனம் செய்தார்கள்; சிலர் மேலே பந்தலைப் பார்த்தார்கள்; சிலர் கையிலிருந்த பென்ஸிலைக் கடித்துத் தின்ன முயன்றார்கள்; ஒருவர் பென்ஸில் என்று நினைத்துக் கை விரலைக் கடித்துக் கொண்டிருந்தார்!



எதிரே மேஜையின் மேல் காகிதமும் பென்ஸிலும் இருந்தன அல்லவா? அவற்றை உபயோகப்படுத்த வேணுமென்று என் கை விரல்கள் ஊறின. பின் வருமாறு எழுதினேன் :

"ஸ்பெயினின் ஸோஷலிஸ்ட் சர்க்காருக்கு சாதகமாக பிரிட்டன் தலையிட்டு, அதன் பயனாக உலக யுத்தம் மூளுமானால், அப்போது இந்தியாவின் நிலைமை என்ன?"

இப்படி எழுதி விட்டு அருகிலிருந்த ஸ்ரீ எம். பக்தவத்ஸலம் அவர்களிடம் காட்டினேன். அவர் படித்து விட்டு, "தலைவரிடம் அனுப்புங்களேன்? பதில் சொல்லட்டும்!" என்றார்.

இப்படிச் செய்ய எனக்குத் தயக்கமாய்த்தானிருந்தது. ஏனென்றால், பண்டித ஜவாஹர்லால்ஜிக்கு எதற்காகக் கோபம் வரும், எப்படி வரும், எங்கே வரும் என்றெல்லாம் ஒன்றும் சொல்ல முடியாது. ஆனாலும் கொஞ்சம் மனதைத் திடப்படுத்திக் கொண்டு, அங்கு வந்த ஒரு தொண்டரிடம் மேற்படி சீட்டைக்

கொடுத்துத் தலைவரிடம் கொடுக்கச் சொன்னேன்.

ஜவாஹர்லால்ஜி சீட்டை வாங்கினார். படித்தும் பார்த்தார். படிக்கும் போது அவருடைய முகம் சிணுங்கிற்று. சீட்டை எதிரேயுள்ள மேஜையின் மீது வைத்து அதன் மேல் ஒரு பாரமும் வைத்தார். ''சரி! உங்களுக்குப் பதில் கிடைக்கும்'' என்றார் ஸ்ரீ பக்தவத்ஸலம்.

யுத்த எதிர்ப்புத் தீர்மானத்தின் மேல் ஒருவாறு விவாதம் முடிந்தது. தீர்மானத்தை வோட்டுக்கு விடும் சமயத்தில் ஜவாஹர்லால்ஜி மறுபடியும் ஒரு தடவை சீட்டை எடுத்துப் பார்த்தார். ''இதோ உங்களுக்குப் பதில்'' என்றார் பக்தவத்ஸலம். நானும் நிமிர்ந்து உட்கார்ந்தேன். பண்டித்ஜியோ மறுபடியும் சீட்டை மேஜை மேல் வைத்து அதன் மேல் ஒரு பாரத்தையும் வைத்தார். தீர்மானத்தை வோட்டுக்கு விட்டார். ஏகமனதாக நிறைவேறியது.

அடுத்த தீர்மானங்கள் எல்லாம் முறையே பிரேரேபிக்கப்பட்டு ஆமோதிக்கப்பட்டு நிறைவேறின. விஷயாலோசனைக் கமிட்டியின் அன்று காலைக் கூட்டம் முடியும் நேரம் வந்தது. தலைவர் மேஜை மீதிருந்த சீட்டை மறுபடி எடுத்தார். ''பார்த்தீர்களா?'' என்றார் பக்தவத்ஸலம். எடுத்த சீட்டை ஜவாஹர்லால்ஜி இன்னொரு தடவை பார்த்தார். இரண்டு கையினாலும் சுக்கு சுக்காய்க் கிழித்தார். பக்கத்திலிருந்த கூடையில் போட்டு விட்டு வழக்கம் போல் டக் டக் என்று மேடை மீதிருந்து இறங்கி அதி விரைவாய் நடந்து சென்றார்.

''அடாடா! கடைசியில் உங்களுக்குப் பதில் சொல்லவேயில்லையே?'' என்றார் பக்தவத்ஸலம்.

''கொடுத்து வைத்தது அவ்வளவு தான்!'' என்றேன்.

* * *

ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் வந்து போனதிலிருந்து ஜவாஹர்லால்ஜியிடம் முரண்பாடுகள் அதிகமாகி விட்டன.

ஒரு நாள் ''கொரில்லா சண்டை போடலாம்'' என்கிறார். மறுநாள் ''அது முடியாது'' என்கிறார்.

ஒருநாள் ''பிரிட்டனுடன் இப்போது ஒத்துழையாமை செய்யக் கூடாது; செய்தால் ஜப்பானை அழைப்பதாகும்'' என்கிறார். மறுநாள் ''பிரிட்டனுடன் எப்படி ஒத்துழைக்க முடியும்? முடியாதுதான்!'' என்கிறார்.


''நாம் தனியாக நின்று ஜப்பானுடன் சண்டை போடுவோம்'' என்கிறார். சண்டை போட ''நம்மிடம் ஆயுதம் இல்லையே?'' என்றால், ''ஆயுதம் இல்லாமலே செத்துப் போகலாமே!'' என்று ஆறுதல் சொல்கிறார்.

நமது மாபெருந் தலைவரின் மனக் குழப்பம் சீக்கிரத்தில் நீங்கி அவர் நமக்கெல்லாம் தகுந்த தெளிவான வழியைக் காட்ட முன் வர வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திப்போமாக.

— ''என்ன யுத்தம்?''

என்ற தலைப்பில் ரா. கி. கட்டுரையிலிருந்து சில பகுதிகள்

## பஸ்கி கணேசன்




குழந்தைகளே! மேலே படத்தில் உள்ள பையனைப் பார்த்துக் கொள்ளுங்கள். இவன் பெயர் கணேசன். இவனுக்கு வயது ஒன்பது. மாயவரத்தில் பெரிய மனிதர்கள் பலர் முன்னிலையில் சென்ற மார்ச் மீ 25உ இவன் பஸ்கி போட்டானாம். இரண்டு மணி நாற்பது நிமிஷத்தில் 6000 பஸ்கி போட்டு விட்டானாம்!

— பாப்பா மலர்

## ஜாதக விசேஷம்

''என்ன ஜோஸ்யர் வாள்! நான் ரொம்ப அதிர்ஷ்டசாலி என்று என் ஜாதகத்தைப் பார்த்து விட்டுச் சொன்னீரே? நேற்று இரவு என் வீட்டில் திருடன் புகுந்து, ஆயிர ரூபாய் நகைகளைக் கொண்டு போய் விட்டானே, இதற்கு என்ன சொல்லுகிறீர்?''

''என்ன சொல்லுகிறது. உம்மைக் காட்டிலும் அதிர்ஷ்டசாலி இன்னொருத்தன் இருக்கிறான் என்று தெரிகிறது. அவன் ஜாதகத்தை நான் பார்க்கவில்லையே!''



## திரும்பிப் பார்க்கிறேன் - 31

# வெண்ணிற ஆடை உருவான கதை!

## டைரக்டர் ஸ்ரீதர்

நடிகை கல்பனா, தமது மானேஜர் கணேச அய்யர் மூலம் கொடுத்தனுப்பிய, நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்த நகலைப் படித்த எனக்குச் சிரிப்பதா அழுவதா என்றே புரியவில்லை. இப்படியெல்லாம் கூட கண்டிஷன்கள் போடுவாரா ஒரு நடிகை!

ராஜஸ்ரீக்குக் கொடுத்தது போலவே கல்பனாவுக்கும் இன்னொரு பாடல் காட்சி தர வேண்டும்; அந்தப் பாட்டையும் லதா மங்கேஷ்கர்தான் பாட வேண்டும்; ராஜஸ்ரீயைப் படம் பிடித்தது போலவே இந்தப் பாடல் காட்சியையும் குளியல் அறையில் கவர்ச்சிக்கு முக்கியத்துவம் தந்து எடுக்க வேண்டும்; இந்தக் காட்சி, படம் ரிலீஸ் ஆகும் போது எல்லா பிரிண்ட்டுகளிலும் துளியும் குறைக்கப்படாமல் இடம்பெற வேண்டும்! - ஒரு வக்கீலை வைத்துக் கொண்டுதான் இப்படி ஓர் ஒப்பந்தத்தைக் கையெழுத்துக்குத் தயாரித்திருக்கிறார் கல்பனா என்பது எனக்கு உடனே புரிந்து போயிற்று.

நான் சற்று யோசிக்கவே செய்தேன். ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாகியும் படம் முடியாமல் இழுக்கடிக்கிறது. மேலும் தாமதத்துக்கு இடம் தருவதா? கல்பனாவின் கண்டிஷன்களை ஒப்புக் கொண்டு விட்டால் என்ன? அடுத்த கணம், இந்தச் சிந்தனையை அழித்துக் கொண்டு ஒரு தார்மீகக் கோபம் சீறிப் பொங்கியது.


வெண்ணிற ஆடை நிர்மலா

கணேச அய்யர் என் கையெழுத்துக்குக் கொண்டு வந்த காண்டிராக்ட்டை அவர் எதிரேயே கிழித்துப் போட்டேன். அவர் அதிர்ந்து போனார். ''ஐயர்! கல்பனாவிடம் போய்ச் சொல்லுங்க; அவருக்கு இன்னும் இருபத்தி நாலு மணி நேரம் டயம் தரேன். அதற்குள் அவர் கால்ஷீட் தருகிறாரா இல்லையா என்பது தெரிய வேண்டும்'' என்றேன்.

பம்பாய்ப் பட உலகம் முழுவதும் இந்த விஷயம் பரபரப்புடன் பரவி, எல்லோரும் கல்பனாவைக் கடுமையாக விமர்சனம் செய்ய ஆரம்பித்தனர். தயாரிப்பாளர் கவுன்சில் கூடி, கல்பனா மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூட முடிவெடுத்தது. இதையெல்லாம் கேள்விப்பட்டதால் தானோ, அல்லது, தமது மிரட்டல் என்னிடம் பலிக்காது என்பதைப் புரிந்து கொண்டதால்தானோ, அல்லது இரண்டுமே சேர்ந்ததன் பின்விளைவோ, கல்பனா இரண்டு நாள் கால்ஷீட் கொடுத்து விட்டார்!

ஷூட்டிங்கை மேலும் தாமதப்படுத்த விருப்பமின்றி, சென்னையில் வைத்துக் கொள்ளாமல் பம்பாய்க்கு அருகே மகாபலேஷ்வரில் படப்பிடிப்புக்கு ஏற்பாடு செய்தேன். முன்னெச்சரிக்கையாக இன்னொரு காரியமும் செய்தேன். 'எப்போ, கல்பனா தகராறு பண்ணுவது என்று ஆரம்



"அப்பா...! நாம மோசம் போயிட்டோம்..."

"என்னம்மா சொல்றே...?"

"உங்க மாப்பிள்ளையோட சமையல், சகிக்கலை போங்க!"

- சீர்காழி வி. ரேவதி



"பூனையைக் கண்டு பயப்படும் ராணி யாரு சொல்லு?"


"இது தெரியாதாக்கும், 'எலி'சபெத் ராணிதான்!"

- ரங்கராஜ் பாண்டே

"என்ன ஸ்டெல்லா! உன் ப்யூட்டி பார்லரிலே வேலை பார்க்கிறவங்க யாருமே அழகா இல்லையே?"

"வேணும்னுட்டுதான் அப்படி வச்சிருக்கேன். இங்கே வந்துட்டுப் போறவங்களுக்கு அப்போதான் தாங்கள் பரவாயில்லை என்ற நினைப்பு வரும்!"

- வி. சரோஜா



பித்து விட்டாரோ, மேலும் சிக்கலில் மாட்டி வைக்க மாட்டார் என்பது உறுதியில்லை; யூனிட்டில் யாராவது தம்மிடம் தகாதமுறையில் நடந்து கொண்டதாகக் கூடப் பழி சுமத்தி ஷூட்டிங்கைக் கான்சல் செய்துவிட்டுப் போய் விடலாம் என்று பயந்தேன். அதனால் ஒரு உபாயம் கையாண்டேன். கல்பனாவின் பாய் ஃப்ரெண்டான இளம் எழுத்தாளர் ஒருவர் இருந்தார். அவரை ஷூட்டிங்குக்கு அழைத்து, இரண்டு நாளும் யூனிட்டோடு தங்கி இருக்கச் செய்தேன், என் செலவில்.

நல்ல காலமாக மேற்கொண்டு பிரச்னை ஏதுமின்றி ஷூட்டிங் முடிந்தது. ''பியார் கியே ஜா'' படம் ரிலீஸ் ஆகி, எனது முந்தைய ஹிந்தி படங்களைப் போலவே இதுவும் மாபெரும் வெற்றி பெற்றது. பாடல்கள் எல்லாமே சூப்பர் ஹிட்!

அடுத்ததாக மறுபடி தமிழ்ப் படம் தான் எடுக்க வேண்டும். பொறி தட்டக் காத்திருந்தேன். அது, அமெரிக்கத் தூதரகத்தில் ஒரு ஆங்கிலப் படம் பார்த்துக் கொண்டிருந்த போது ஏற்பட்டது. அன்று நான் பார்த்த படம் 'டேவிட் அண்டு லிஸா'. மனநோயாளிகள் காப்பகம் ஒன்றில் நடக்கும் கதை. மனநோயாளிகளான டேவிட்டும் லிஸாவும் ஒருவர் மேல் ஒருவர் ஈடுபாடு கொள்கிறார்கள். அது படிப்படியாக வளர்ந்து, நாளடைவில் காதலாக மலர்கிறது... டைரக்ஷன் அற்புதமாக இருந்தது.

படம் முடிந்ததும் அமெரிக்க நண்பர்களிடம் விடைபெற்றுக் கொண்டு சித்ராலயா வந்து, கோபுவை அழைத்துக் கொண்டு மியூஸியம் தியேட்டருக்குச் சென்றேன். அங்கே ஒரு நாடகத்துக்கு நான் தலைமை வகிக்க ஒப்புக் கொண்டிருந்தேன். போகும் போதும் திரும்பி வரும் போதும் கோபுவிடம் என் மனத்தில் உருவான கதையைக் கூறினேன். டேவிட் அண்டு லிஸா படத்தில் ஹீரோ, ஹீரோயின் இருவருமே மனநோயாளிகள். இப்படி இங்கே படம் எடுத்தால் படத்தைப் பார்க்கும் நமது மக்கள், தங்களுக்கே கூடக் கொஞ்சம் பைத்தியம் பிடித்து விட்டதாக உணர்வார்கள்! அதனால் ஹீரோயினை மட்டும் மனநோயாளியாக்கினேன். அதற்கு அழுத்தமான காரணம் உருவாக்கினேன். அதாவது, திருமணமான உடனேயே அந்தப் பெண் விபத்து ஒன்றின் காரணமாகத் தன் கணவனை இழந்து விடுகிறாள். அந்த அதிர்ச்சியில் மன நோயாளியாவதுடன், தான் விதவை என்பதையே அறியாதவளாகி விடுகிறாள். எப்படியெனில்,

நடந்த கால நிகழ்ச்சிகள் பல, அதிர்ச்சி காரணமாக அவள் நினைவுத் திரையி லிருந்து அழிக்கப்பட்டு விடுகின்றன. அப் படிப்பட்டவளுக்கு ஒருநாள் தன் உண் மைக் கதை தெரிய வரும்போது அவ ளுடைய 'ரியாக்ஷன்' என்னவாயிருக்கும்? இப்படி வளர்ந்தது ''வெண்ணிற ஆடை'' கதை.

நாடகம் முடிந்து இரவு வீடு திரும்பு வதற்குள் கிட்டத்தட்ட முழுக் கதையையும் நான் கோபுவுக்குக் கூறி முடித்து விட்டேன். கோபுவுக்கு ரொம்பப் பிடித் திருந்தது. மறுநாள் மற்ற பார்ட்னர் நண்பர் களிடமும் கதை கூற, அனைவரும் ஏகமன தாக ஏற்றுக் கொண்டார்கள்.

**தொ**டர்ந்து இரண்டு படங்களில் புதுமுகங்களை அறிமுகப்படுத்தி வெற்றி கண்டதுடன், அந்தப் புதுமுகங்கள் பிரபல மாகவும் வழிவகுத்தோம். இப்போதும் புதுமுகங்களையே தேடினால் என்ன?


பார்ட்னர்கள் இதற்கும் சம்மதம் தெரி விக்கப் புதுமுக வேட்டை ஆரம்ப மாயிற்று.

''வேலுமணி சாருடைய படத்தில் ஒரு பெண் டான்ஸ் ஆடுகிறாள்; பார்க்க ரொம்ப நன்றாயிருக்கிறாள்'' என்று ஒரு நண்பர் சொன்னார். ஒரு நடனக் காட்சியில் மட்டும் தோன்றும் பெண்ணுக்குக் கதா நாயகியாக நடிக்கும் தகுதி இருக்குமா? நான் எதிர்பார்க்கும் அம்சங்கள் அவளிடம் இருக்குமா? ''எதற்கும் அழைத்து வாருங் கள், பார்ப்போம்'' என்றேன். டெல்லி யைச் சேர்ந்த அந்தப் பெண்ணின் பேச்சில் அய்யங்கார் வாடை வீசியது. போதிய பயிற்சி அளித்து அதைச் சரிப்படுத்தி விட லாம் என்று தோன்றியதாலும், அவள் தோற்றம் நான் எதிர்பார்த்ததை விட நன்றாயிருந்ததாலும் டெஸ்ட்டுக்கு அந்தப் பெண்ணைத் தேர்ந்தெடுத்தேன்.

பி. ஆர். பந்துலுவின் கன்னடப் படம் ஒன்றின் ரஷ் பார்த்த போது, அதில் நடித்திருந்த இளம் நடிகை என் கவனத் தைக் கவர, பந்துலு மூலமாகவே அந்தப் பெண்ணையும் என் படத்துக்கு முதல் கட்டத் தேர்வு செய்தேன்.

மூன்றாவதாக, பாலசந்தரின் ''மேஜர் சந்திரகாந்த்'' நாடகம் பார்த்த போது, அதில் நடித்த ஓர் இளைஞரின் திறமை என்னை வசப்படுத்த, அவரிடமும் பேசி னேன்.

இப்போது ஒரு புதிர் : இந்த மூவரும் யார், யார்?



# சருகின்ற நிழல்

அமானி

**ரொ**ம்ப ஒன்றும் நேரமாகி விட வில்லை. சற்று முன்புதான் ஆபீஸிலிருந்து வந்து வீட்டிற்குள் நுழைந்து டைரியையும் மணிப்பர்ஸையும் டேபிள் மேல் வைத்து விட்டு உள்ளறைக்குள் உடுப்பு மாற்றப் போயிருந்தான் சேதுராமன். ஐந்து நிமிஷ அவகாசம். திரும்பி வந்து பார்த்த போது டேபிள் மேல் டைரி மட்டுமே கிடந்தது. மணிப்பர்ஸைக் காணவில்லை. சம்பளம் வாங்க இன்னும் இரண்டு நாட்கள் இருந்த தால் கழுத்தை நெரித்த கைச் செலவைச் சரிக்கட்ட பக்கத்து சீட் முரளிதரனிடம் இரு பது ரூபாய் கைமாற்று வாங்கி மணிப் பர்ஸுக்குள் திணித்திருந்தான். கங்கணம் கட்டி யாரோ களவு செய்தது போல அநியா யமாய்ப் பறிபோயிற்று மணிப்பர்ஸ்!

முற்றத்திற்கு வந்தான். வேப்பமர நிழற்குடையின் கீழ் விச்ராந்தியாக ஈஸிச் சேரில் சரிந்திருந்த மதுமோகனிடம் நெருங் கினான்.

''மது மது... நம்ம வீட்டுக்குள்ள யாராச்சும் வந்துட்டுப் போனாங்களா?''

முகத்தை மறைத்திருந்த வாராந் திரியைச் சற்றுத் தாழ்த்தி, ''இல்லையே அத்தான்... நான் கவ னிக்கலையே...'' என்று நிர்விசாரமாய்ப் பதில் சொல்லிக் கொண்டே சலனமில் லாமல் சேதுராமனை விழித்தான் அவன். வாராந்திரியின் முன் பக்க அட்டையில் நடி கையின் லாவண்யம் தெரிந்தது.

''என்ன அத்தான்? என்ன விஷயம்?'' மதுமோகனின் விசாரணைக் கண்கள்.

''ஒண்ணுமில்லப்பா... யாரோ வந்தது மாதிரி சப்தம் கேட்டது... அதான்...''

உண்மையைச் சொல்லி மற்றவர் மனசை நோகடிப்பதை விட பொய் சொல்லி சலனப்படுத்தாமல் இருப்பதே எவ்வளவோ மேல் என்று பட்டது.

பின்கட்டுக்குப் போனான். பானுமதி யும் தங்கையும் பழங்கதைகளைப் புளகாங் கிதமாய்ப் பிரஸ்தாபித்துக் கொண்டிருப்பது புரிந்தது. வீட்டுக்காரம்மாள் அவர்களின் பிரசங்கத்தில் கிறங்கிய ரசிகையாய் வாயெல்லாம் பற்களைக் காட்டி அமர்ந் திருந்ததும் தெரிந்தது.

சைகை காட்டி பானுமதியை உள்ளே அழைத்தான்.

''அப்பவே வந்துட்டீங்களா?''

அவளுக்கு மட்டுமே கேட்கிற தொனி யில் குரலை அடக்கிக் கேட்டான் சேது ராமன். ''கொஞ்சம் முன்னாலதான் வந் தேன்... டேபிள் மேல மணிப்பர்ஸ் வச்சிருந் தேன்... காணல... நீ பார்த்தியா?''

''இல்லீங்களே... நீங்க வந்ததே எனக்கு இப்பத்தானே தெரியும்...'' அதிர்ச்சியாய்ப் பதில் சொன்னாள் பானுமதி.

''சரி சரி... இதைப் பற்றி தங்கச்சிக் கிட்டக் கேட்டிராத... தப்பா நெனச்சிக் கிருவா...''

கணவன் சொல்வது சரியெனவே பட்டது அவளுக்கும். மௌனமாய்த் தலை யாட்டினாள்.

**ம**றுநாள் ஞாயிற்றுக் கிழமை மதியம்.

''அம்மா... சரவணன் எனக்குக் 'கேக்' தர மாட்டேங்கிறான்மா'' வீட்டுக்காரம்மா வின் 'போர்ஷனி'லிருந்து குழந்தைகளின் குரல் பெரிதாகக் கேட்டது.

''ஆங்... ஒண்ணு குடுத்தாச்சம்மா... ஓயாமக் கேக்கிறான் எங்கிட்ட...''

''அம்மா... அவன் நெறைய வச்சிருக் கான்... எனக்கு...?''

''எவன்ல அவன்?'' பிள்ளைகள் மூன்றும் முற்றத்தில் நின்று அழி சாட்டியம் பண்ணியது கண்டு புயலாய் வீட்டுக்குள் இருந்து அம்மா ஓடி வந்தாள். அம்மாவின் படையெடுப்பில் போர்க் களத்தில் அமைதி நிலவிற்று.

முன்னறையில் படுத்து, சேதுராமன் செய்தித்தாளில் மூழ்கியிருந்தான். அவன் செவிகள் கூர்மையாய் வெளியில் நின்றிருந் தன.

தம் வீட்டுக்குள் வைத்துக் கணவனும் மனைவியும் மகன் சரவணனிடம் என்

னவோ விசாரிப்பது கிணற்றிலிருந்து ஒலிப்பது போலக் கேட்டது சேதுராமனுக்கு.

ஏதோ புரிவதாய்ப் பட்டது அவனுக்குள். சரவணன் நிறைய 'கேக்' வைத்திருந்ததில் மர்மம் ஒளிந்து கிடந்தது. அவனுக்கு ஏது அவ்வளவு பணம்? மற்ற இரு பிள்ளைகளுக்கும் தகையாதது அவனுக்கு எப்படித் தகைந்து விடும்? ஏதோ குளறுபடி இருக்கிறது.

சில நிமிஷங்களுக்குப் பிறகு முற்றத்தில் வந்து நின்றார் வீட்டுக்காரர். சலனம் கேட்டு, 'சட்'டென்று எழுந்து சேதுராமனும் வெளியே வந்து நின்றான். பரஸ்பர புன்னகை பரிமாற்றம்.

''என்ன... ஒரே ரகளையாயிருந்தது?'' சேதுராமன் சிநேகத்துடன் கேட்டான்.

''சின்னப் புள்ளைங்க... தெரியாதா? ஒண்ணுமில்லாததுக்கெல்லாம் சண்டைப் போடுறானுங்க'' - அசடு வழிந்தார் அவர்.

''என்னவோ கேக்... தர மாட்டேங்கறான்... அப்படியெல்லாம் சத்தம் வந்தது?''

''சரவணப் பயல் ரோட்டுல கெடந்த பத்து ரூபாய் எடுத்தானாம்... கேக்கும் பிஸ்கட்டுமாய்... வாங்கியிருக்கான்... அதைக் கேட்டு மற்ற பசங்க நச்சரிக்கிறானுவ........'' - யோசித்துப் பதில் சொன்னார் அவர்.

இரையையும் விழுங்கி விட்டுத் தூண்டிலையும் ஒடித்துப் போட்டு விட்ட சாதுர்யமிருந்தது வீட்டுக்காரரின் பதிலில். நறுவிசாய்ப் புன்னகையை விதைத்து விட்டு வெளியேறிப் போனார் அவர்.

பர்ஸ் திருட்டுப் போனதற்கும் சரவணன் கையில் தாராளமாய்ப் பணம் புழங்குவதற்கும் சம்பந்தம் இருப்பதாக அவனின் உள் மனம் வாதிட்டது. ரோட்டில் பத்து ரூபாய் என்று அவர் உதிர்த்ததெல்லாம் வெறும் முலாம் பூச்சு என்றே தீர்மானித்துக் கொள்ளத் தோன்றியது.

சேதுராமனின் சந்தேகத்துக்கு வலு சேர்க்கும் விதமாக சில வாரங்களுக்கு முன் நடந்த சம்பவம் அவன் நினைவுக்கு வந்தது. தன் வீட்டு ஜன்னலில் வைத்திருந்த சில்லறையை, சரவணன் திருட்டுத்தனமாய் அள்ளும் கணத்தில் பார்த்து விட்டான் சேதுராமன். அள்ளிய சில்லறை அடங்கிய கையோடு சரவணனை அவன் அம்மா முன் நிறுத்த, அவள் பெரிய குண்டாகத் தூக்கிப் போட்டாள் :



''உங்ககிட்ட பத்திரமா குடுக்கத்தான் எடுத்திருப்பான். சின்னப் பிள்ளையை ஏன் தான் இப்படி தப்பா நினைக்கறீங்களோ'' என்று முகத்திலடித்த மாதிரி பேசி விட்டாள்.

ஆனால் சேதுராமனுக்குச் சரவணனின் நோக்கம் நிட்டவட்டமாய்த் தெரிந்தது. புரிந்தது. அன்றைக்குச் சில்லறையை அள்ளித் தப்பியவன் இன்று பர்ஸைத் துணிந்து எடுத்திருக்கலாமல்லவா...?

ஒரு மாசம் ஓடியிருந்தது.

சேதுராமனுக்குச் சுகவீனம். முன்னறையில் படுத்திருந்தான்.

திடீரென்று காம்பவுண்ட்டின் வெளி வாசல் கேட் 'சடார்...' என்று திறந்ததில் சன்னமாய் அதிர்ந்து போனான். மெது வாய்த் தலையை உயர்த்தி, கதவைத் திறந்து வெளியே நோக்கினான். வீட்டுக் காரர் போர்த் தளபதியாய்ப் புயல் முகம் காட்டி நின்றது தெரிந்தது. வார்த்தைகளிலும் புயலே வீசியது.

''ஏய் செண்பகம்.... புள்ளைங்க எல்லாம் பள்ளிக்கூடத்துக்குப் போயிட்டானுவளா?''

''என்னங்க? எலெக்ட்ரிக் பில் கட்டணும்னு போனீங்க... போன வேகத்திலே திரும்பிட்டீங்க?''

''பயலுவ எங்க?''

''ட்ரஸ் பண்ணிக்கிட்டு நிக்கிறானுவ, பள்ளிக்கூடத்துக்குப் போறதுக்கு. ஏன், என்னாச்சு?''

''அவனுவ படிச்சிக் கிழிச்சது போதும்... திருட்டுப் பயலுவ.''

''ஏங்க?''

''கரண்ட் பில் கட்டணுமின்னு சட்டைப் பையில போட்டிருந்த அம்பது ரூபாயில அஞ்சு ரூபா குறையுது... நீ எடுத்தியா?''

''அய்யய்யோ... நான் தொடலையே.''

''அதுதான் உன்னோட உத்தமபுத்திரன்களைக் கூப்பிடு... அவனுகள்லதான் எவனோ ஒருத்தன் கையை வச்சிருக்கான். காலையிலே பார்த்தேன்... கரெக்டா இருந்திச்சி.. அதுக்குள்ள எப்படிப் போயிரும்? முதல்ல அந்தச் சரவணனைக் கூப்பிடு... அவனுக்குத்தான் அநியாயமாய்க் கை நீளும்.''

''என்னப்பா?'' பிசிறலாய் உதிர்ந்தது சரவணனின் குரல். அந்தக் குரலை வைத்துக் கொண்டே அவன் எவ்வளவு பவ்யமாய் முன்னேறி வருகிறான் என்பதை யூகிக்க முடிந்தது சேதுராமனால்.

''இல்லப்பா.. எனக்குத் தெரியாது...'' வழுக்கி, பின்வாங்கினான் அவன்.

முன்னை விட சூடு அதிகமாயிற்று அவரிடம். ''பொய் சொல்லாதே.. தோலை உரிச்சிருவேன்.. உள்ளதை ஒத்துக்கிட்டா' உனக்கு அடி மிச்சம்... சொல்லு... அஞ்சு ரூபாயை எங்க எடுத்து வச்சிருக்க?''

எதிர்ப்பக்கம் மௌனம்.

''உன்னால எலெக்ட்ரிக் பில் கட்டுற இடத்துல நின்னு அவமானப்பட வேண்டியதாயிடுச்சு... 'பணம் சரியில்லாம எதுக்கு சார் வந்தீங்க'ன்னு கேக்கிறான் அங்க... சொல்லு - பணத்தை எங்க...?''

''இல்லப்பா... எனக்குத் தெரியாது.''

ஆக்ரோஷமாய்ப் பாய்ந்தார் அவன் மேலே... ''ராஸ்கல்... ஒழுங்கா கேட்டா சொல்ல மாட்டே... சொல்லு... பணத்தை எங்கே வச்சிருக்கே?''

'தப்'பென்று சிறுவன் முதுகில் அறை விழுந்தது கேட்டது. வலி தாளாமல் சரவணன் அழுததும் கேட்டது. சொற்ப நேரந்தான். சற்றைக்கெல்லாம் குற்றத்தை ஒப்புக் கொண்ட சரவணன், பணத்தை வீட்டுக்குள் போய் எங்கிருந்தோ எடுத்து வந்து தந்தது புரிந்தது.

''ராஸ்கல்... திருடவா செய்யற... இந்தச் சின்ன வயசுல?'' - நியாயஸ்தராக அரிதாரம் பூசிக் கொண்டு சிறுவனைத் தண்டிக்க ஆயத்தமானார் அவர்.

மீண்டும் கைகளை ஓங்கி, அவர் சமீபிப்பதற்குள் படபடவென்று எழுந்து அங்கே ஓடிப் போனான் சேதுராமன் - அவரைச் சமாதானப்படுத்த.

WHEN THE SUMMER HEAT
KEEPS YOUR CHILDREN INDOORS,
BUY THEM
GOKULAM
MAGAZINE FOR CHILDREN
MAY '92 ISSUE ON SALE!
* GAMES * STORIES * PUZZLES
* THINGS TO MAKE AND DO
* POETRY * RECIPES * JOKES
AN ACTIVITY SPECIAL ISSUE FOR THE HOLIDAYS!
GOKULAM, GUINDY, MADRAS - 600 032
96 Pages for just Rs. 3/-



# ஒரு சொட்டுத் தண்ணீரின் ஆயுள்!

!! ஒவ்வொரு நாளும் முந்தைய தினத்தைக் காட்டிலும் 0.0000002 விநாடிகள் நீள்கிறது. இதற்குக் காரணம் பூமியின் சுழற்சி மிக மிக மெதுவாக வேகம் இழந்து வருவதுதான். சந்திரனின் ஈர்ப்புச் சக்தியால் பூமியிலுள்ள கடல் பகுதிகளில் பாதிப்பு ஏற்பட, அதன் காரணமாகச் சுழற்சி வேகம் இழக்கிறது. ஒருமுறை சுழன்று வர பூமி எடுத்துக் கொள்ளும் நேரம் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இருந்ததைக் காட்டிலும் இப்போது 0.00073 விநாடிகள் அதிகமாகியிருக்கிறது.

!! பூமி கிழக்கை நோக்கிச் சுழல்வதால் கிழக்கு நோக்கிப் பயணிக்கும் கப்பல் மேற்கு நோக்கிச் செல்லும் கப்பலைக் காட்டிலும் எடை குறைவாக இருக்கும்.

!! ஒவ்வொரு நாளும் விண்ணிலிருந்து பூமியால் ஈர்க்கப்பட்டு விண் கற்கள் வந்து விழுந்தவண்ணம் இருக்கின்றன. ஆனால் இதுவரை எண்ணி ஏழு பேர்களே இத்தகைய 'விண் கற்களால்' அடிபட்டதாகப் புள்ளி விவரம்! காரணம், விண் கற்கள் பூமியை அடையுமுன்னர், வாயு மண்டலத்துக்குள் நுழையும் போது உராய்வு வேகத்தில் எரிந்து சாம்பலாகி விடுவதுதான்.

!! ஆண்டுதோறும் விண்ணிலிருந்து வந்து விழும் இத்தகைய எரி நட்சத்திரச் சாம்பல் மற்றும் தூசியினால் பூமியின் எடை சுமார் 100,000 பவுண்ட் அதிகரிக்கிறது.

!! ஒரு சொட்டுத் தண்ணீர் : காற்று மண்டலத்தில் பன்னிரண்டு நாட்கள் பயணித்து, வெண்பனித் துளியாகப் பூமியில் விழும். பனிப் பாறையில் நாற்பது வருடங்களோ, அல்லது ஒரு ஏரியானால் நூறு வருடங்களோ தங்கும். பூமியில் அது விழுந்தால் அது துளைக்கும் ஆழத்தைப் பொறுத்து நூறு முதல் 100,000 ஆண்டு வரை அடியிலேயே தங்கும். பின்னர் மீண்டும் பூமியின் மேல் பரப்புக்கு வந்து ஆவியாக மாறி காற்று மண்டலத்தி ் கலந்து விடும்.

!! பூமியில் உள்ள அவ்வளவு தங்கத்தையும் ஒன்று சேர்த்தால் 20 கன கஜ அளவுள்ள ஒரு பெட்டிக்குள் அடங்கி விடும்!

!! உலகின் மிகப் பிரம்மாண்டமான பனிப்பாறை (iceberg) 1956 இல் பசிஃபிக் கடலில் கண்டறியப்பட்டது. அதன் பரப்பளவு 31,000 சதுர கிலோ மீட்டர்.

!! பூமியில் முதன் முதலில் தோன்றிய உயிரினங்கள் ஆக்ஸிஜன் இல்லாமலே வாழ்ந்தன. இன்றைக்கும் ஆக்ஸிஜன் இல்லாத சூழலில் மட்டுமே உயிர் வாழக்கூடிய நுண் உயிரினங்கள் உள்ளன...

தொகுப்பு : உதய்லால்

# பெண்களிடம் ரகசியப்பணம் 50,000 கோடி!

பெண்களுக்குத் தனி வங்கி. பெண்களுக்குத் தனி போலீஸ் ஸ்டேஷன். பெண்களுக்குத் தனி பல்கலைக் கழகம். இது பழைய கதை.

தில்லியில் பெண்களுக்குத் தனியாக ஒரு ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் வேண்டும் என்று மகளிர் அமைப்பு ஒன்று விண்ணப்பித் திருக்கிறது. இந்த மகளிர் அமைப் பில் பெண் ஷேர் புரோக்கர்களும் முதலீட்டாளர் களும் மட்டும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்று நினைத்தால் அது உங்கள் தவறு. பெண் முதலாளிகள், பெண் சார்ட்டர்ட் அக்கவுன்டென்டுகள், பல்வேறு நிறுவனங்களிலுள்ள பெரிய பெரிய பெண் அதிகாரிகள்தாம் இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள். நிதி அமைச்சகப் பரிசீலனையில் இருக்கிறது இந்தக் கோரிக்கை!

இவர்கள் இப்படி ஒரு கோரிக்கை வைக்கக் காரணம் இருக்கிறது. இவர்கள் எடுத்த சமீபத்திய சர்வே ஒன்றில் ஒரு திடுக்கிடும் தகவல் கிடைத்திருக்கிறது. அதாவது-




இந்திய மனைவிமார்களிடம், தங்கள் கணவன்மார்களுக்குத் தெரியாமலே ரகசியமாகப் பணம் சேர்த்து வைக்கும் வழக்கம் இருக்கிறதாம். தாங்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றால், தாங்கள் ஒரு சுதந்திர உணர்வோடு இருக்க வேண்டும் என்றால், தங்களிடமும் போதுமான பணம் இருக்க வேண்டும் என்று சேர்த்து வைத்திருக்கிறார் களாம். இவர்களைப் பேட்டி கண்டு, சர்வே நடத்திய மகளிர் அமைப்பு, இந்தப் பணம் மொத்தமாக சுமார் 50,000 கோடி ரூபாய் இருக்கலாம் என்று கணித்திருக்கிறது.

பெண்களிடையே பங்கு மார்க்கெட் பற்றிய அறிவையும் முதலீடு செய்வதில் ஆர்வத்தையும் வளர்த்தால் இந்தப் பணம் தொழில் துறையில் முதலீடாக, நாட்டின் வளர்ச்சிக்கு உதவ முடியும் என்று இந்த மகளிர் அமைப்பு கருதுகிறது.


ஆதாரம் : எகனாமிக் டைம்ஸ்

தகவல் : எஸ். வி. என்.

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா : 2344157; டைரக்டர் : 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் ரூ. 200/; விமானத் தபால் ரூ. 525/-.

# வீட்டின் அழகு கதவில் தெரியும்!

## விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட



# மாயூரம் டிம்பர்

## கதவுகள்

அழகானவை, உறுதியானவை,

நீடித்து உழைப்பவை !

காரணம்?

தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்தர மரம்
நவீன ஆலைகளில் ஈரப்பதம் 80% லிருந்து 14% ஆக குறைக்கப்படுகிறது.
இது மரம் வளைந்து முறுக்காமல் தடுக்கிறது.
மரத்திற்கு இரசாயன கலவை பாதுகாப்பு அளிப்பதால் கரையான் அரிப்பதை தடுக்கிறது.
தச்சு வேலை இயந்திரத்தில் செய்யப்படுவதால் கதவுகள் நேர்த்தியாக அமைகின்றன.

Avoid spending Time & Money to achieve a substitute Come, Select & Place your order at:

# MAYURAM TIMBER

## & GENERAL TRADING CORPN.

Show Room: 13, Rameswaram Road, T. Nagar,
Madras – 600 017. Tel: 445207

H.O. 83, G.S.T. Road, Tambaram – 600 045.
Ph: 465297

# MAYAVARAM TIMBER DEPOT

No. 4, Post Office Road,
Mayiladuthurai, Tanjore Dist. Phone: 3216

Future Ads


முத்துமுத்தான
வியர்வை.
ஊக்குவித்தது
உள்ளுணர்வை
Second Nature
TALCUM POWDER
செகண்ட் நேச்சர் டால்க்.
வெற்றியைப் பிரதிபலிக்கும் இணையற்ற நறுமணம்